Deviyin KANMANI -Tamil Fortnightly AUGUST -1, 2011 Regd. No. TN/CH(C)/360/09-11 Registered With Registrar of News papers for India Under No.49510/89 Published every 1st and 15th of every month.

## என்னைப் பற்றி



பனிக்கால வசந்தங்களில், கள்வனின் காதலில் கட்டுண்டு, வசந்தத்தில் ஓர் நாளை எதிர்பார்த்து, நான் பேச நினைப்பதெல்லாம் நேசம் மறப்பதில்லை என்றுரைத்து, ஆயிரம் நிலவே வாவென்று நீ அழைக்க இருபது கோடி நிலவுகளாய் ஜொலிப்புடன், உன்னில் விழுந்து உன் பெயரை சொல்லும் போதே, அறிந்தும் அறியாமலும், காகிதப் பூக்களின் வாசமாய் நெஞ்சோடு கலந்திடு உறவாலே என்று உன்னை நான் சந்தித்தேன். ஜன்னல் நிலவாய் காத்திருந்த நம் அன்பிற்கு இதோ ''கண்மணி'' என்னும் மணமேடையில் ''மாவிலைத் தோரணங்களாய்'' என் பதிவு!

என் எழுத்துக்களின் வளர்ச்சிக்கு உதவும் கண்மணியும்,வாசகர்களும் தங்களின் விமர்சனங்கள் எனும் மலர்கள் தூவி வாழ்த்திட வேண்டும்.

நன்றி

அன்புடன்
லதா சரவணன்



Please share your novels and comments @
http://tamilbooks.veeserve.com/mybb/

# மாவிலைத் தோரணங்கள்

இதயங்கள் இணைந்த உயிர்களின் கலப்புதான் காதல். உடலின் சேர்க்கை போலவே மனதின் இணைப்பையும் கலவி எனலாம். அவை சில நேரம் இன்பத்தையும் பலநேரம் துன்பத்தையும் அள்ளித் தரும்.

அறையிலேயே அடைந்து கிடப்பது மனதை உறுத்திட எழுந்து வெளியே வந்தான் ஜெயநந்தன். அவனைப் போலவே அந்த கெஸ்ட் ஹவுஸ் முன் தோட்டத்தில் ஒரு மரமும் தனிமையில் இருந்தது. நெடு நெடுவென உயரமான மரம். ஆதரவாய் அந்த மரத்திற்கு முதுகைத் தந்தபடி நின்றான் அவன். தோல்வி வெற்றிக்கு முதல்படி ஆம்!

ஆனால் தோல்வி தந்த வேதனையில் மனம் புகைந்தாலும், அதை அளித்தவளின் முகம் ஆறுதல் தந்தது விந்தைதானே! காலை இங்கிருந்து கிளம்ப வேண்டும். வழக்கம் போல் தம்பி தங்கைக்கு வேண்டியவற்றை வாங்கியாகி விட்டது.

ஆயாசமான ஒரு பெருமூச்சுடன் காய்ந்த சருகுகளை மிதித்தபடி நடந்தான். அவன் மனம் போலவே அதுவும் சப்தம் எழுப்பியது. இரு மரங்களுக்கு இடையே இருந்த தொங்கு படுக்கையில் ஏறிபடுத்தான். சிலுசிலு வென்ற குளிர் காற்று-தனிமை அவ்விடத்தின் வனப்பு அனைத்தும் மனதைக் கொள்ளை கொண்டன.

கண்களை மலர்த்திட எதிரே வானம். அதற்குத்தான் எத்தனை வண்ணங்கள், முகங்கள், மனிதர்களைப் போலவே, இயற்கையும் கூட பல ரகசியங்களை உள்ளடக்கி உள்ளது. இதோ இந்த நீண்ட வானத்தில் ஓவியமாய் மலர்ந்திருக்கும் வெண் மேகங்களுக்கு பின்னால், முனிவர்கள், கடவுள், மரணத்தை தழுவியவர்கள் என எத்தனையா கதைகள். அதுபோல் தான் ஜெயநந்தனின் மனமும்! இதே போல் போன வருடம் அவன் இங்கு வந்தபோது தான் அவளை தன் மனங்கவர்ந்தவளைக் கண்டது. கண்களை மூடினான் அவளின் உருவம் கூடவே அவளை சந்தித்த தருணம் நினைவிலாடியது. நீலகிரியின் ஜில்லென்ற குளிர்காற்று உடலைத் தொட்டு விளையாடுவது சந்தனம் பூசுவதைப் போல் குளிர்வாய் இருந்தது. வெள்ளி உருகி வடிவது போல் சரிந்து வரும் வெண்ணிற ஆறுகள், சிரித்து வரவேற்பதைப் போலிருந்தது. நீலநிற மலைக்

**-லதா சரவணன்**



குன்றுகள் தட்ப வெப்பநிலை ஏதுவாய் இருக்கும் மேமாதம் என்பதால், மக்கள் கூட்டம் அதிகமே!

ஈவ்னிங் பஜார் வேறு, மௌனமாய் நத்தைப் போல் ஊர்ந்து செல்லும் ரெயில் என மனதை மகிழ்விக்கும் இடம். பனிமலைபிரதேசம் அதனால் மாலை 4 மணிக்கே இருட்டத் துவங்கியது.

மக்கள் அனைவரும் ஸ்வட்டர், குல்லாவோடு சுறுசுறுப்பாய் வேலை செய்து கொண்டிருக்க, கை நிறைய பார்சலோடு காரை நோக்கி நடந்து வந்தான் ஜெயநந்தன். எப்போதும் எங்கு சென்றாலும் வீட்டினருக்கு ஏதாவது வாங்கி செல்வது அவனின் வழக்கம்!

ஓரிருமுறை நீல்கிரிஸ் வந்த போது அம்மாவிற்கென டெராடன் பலா வகையை வாங்கிச் செல்வது வழக்கம். கூடவே அழகான காஷ்மீர் சால்வை ஒன்றையும் வாங்கினான். அதோடு தம்பிக்கென டிராவல் பேக் வாங்கி அதையெல்லாம் ஒருமுறை சரிபார்த்தபடி சாண்ட்ரோபின் சீட்டில் வைத்தான், ஜெயநந்தன்.

தங்கையின் சல்வாருக்காக மட்டும் சற்று அலைய வேண்டி வந்ததால் இறுதியாய் வாங்கிக் கொள்ளலாம் என்று தள்ளி போட்டதில் மறந்தே போனதை உணர்ந்து, மறுபடியும் ஹோரூம் செல்லும் போதே மனம் உறைத்தது.

இப்போவே லேசாய் இருள் சூழ்ந்து விட்டது. மலையும் பள்ளத்தாக்கும் அணிவகுக்க குறுகிய பாதையில் காரை கொண்டு செல்ல வேண்டுமே? எத்தகைய தெளிவான அனுபவமிக்க ஆளாய் இருப்பினும் வெளிச்சம் உசிதம் அல்லவா?

எல்லாருக்கும் வாங்கிவிட்டு அவளிற்கு மட்டும் வாங்காமல் போனால் தங்கையின் அழகு முகம் சுருங்கிவிடுமே! புதிதாய் கல்யாணம் செய்திருக்கும் பெண் வேறு! வந்து நான்கு நாட்கள் ஆகிவிட்டது. புது புராஜக்ட் வேறு தயாராகும் நிலையில் இனியும் காலம் தாழ்த்தினால் நன்றாயிராது. அதிலும், என் மகள் பொறுப்பு மிகுந்தவள் எனும் தந்தையின் எண்ணம் தவறாகுமே!

எனவே, சற்று தாமதமானாலும் இன்றே வாங்கி விடலாம் என்ற உந்துதலில் மீண்டும் நடக்கத் துவங்கினான் ஜெயநந்தன்! திடீரென ஏதோவொரு சப்தம்! என்ன ஏதுன்னு யூகிப்பதற்குள், அந்த நீலநிற குர்தா அணிந்த பெண் படுவேகமாய் மோதினாள்.

பஞ்சு போல் மென்மையானவள் என்றாலும் மோதிய வேகத்தில் ''அப்பா..!'' என்று குரலெழுப்பியவன். ''ஹலோ... மிஸ்... யார்? என்ன?'' என அவன் கேட்ட எந்த கேள்வியும் அவள் காதில் விழவேயில்லை! அழகிய முகம் ஆனால் பயத்தில் வெளுத்து இருந்தது. கண்கள் மருண்டன. கருங்கூந்தல் அலை அலையாய்க் கலைந்து உடைகள் கிழிந்து அதைவிட அவளின் ஆரஞ்சுளையெனும் அதரங்களும் கிழிந்து இரத்தம் வழிந்தது.

''என்ன மேடம்?'' அந்த கேள்வியை கேட்க பயந்தபடியே, பார்வையைத் திருப்பியவள் அங்குமிங்கும் பார்த்தவாறு மறுபடியும் பயந்து அவனைத் தள்ளிக் கொண்டு ஓடியே போனாள் அவள். பாவம்!

எனும் வார்த்தையை உதிர்த்தவனைத் தாண்டி 2,3 தடியன்கள் ஓடினார்கள். அவர்கள் ஏதோ பேசியதும் அந்தப் பெண்ணைப் பற்றியென்பது புரிந்தது.

''ச்சே! விட்டுட்டோமே இப்போயென்ன பதில்டா சொல்றது?''

''இருடா இந்த இருட்டுக்குள்ளே அவளத்தனை தூரம் போயிருக்கப் போகிறாள்?'' பூட்ஸ் காலில் தரையில் ஓங்கி மிதித்தபடியே ஆளுக்கொரு மூலையாய்ப் பிரிந்தனர்.

ஜெயநந்தன் தன்னை இடித்துவிட்டுப் போன பெண்ணிற்கென மனம் வருந்தினான்.

பாவம் சின்னப்பெண், என்னப் பிரச்சனையோ? காலைக் கூட தாங்கித் தாங்கி ஓடியது நினைவிற்கு வந்தது. இவர்களிடம் அவள் மாட்டவே கூடாது என்று செல்லை உயிர்ப்பித்தான்.

''விஜய்... நான் ஜெயநந்தன்.''

''சொல்லுடா?''

''டேய் இங்கே பஜாரில் ஒரு பெண்ணை நாலுபேர் துரத்திட்டுப் போறாங்க?''

''இஸிட் ? இப்போ எங்கே? யாராம்?''

''விவரம் கேட்க முடியலைடா? அதுக்குள்ளே ஓடிட்டாங்க?''

''சரி நீ போ நான் பார்த்துக்கிறேன்.'' பேசிவிட்டு ஒரு வித திருப்தியோடு கடைக்குள் நுழைந்தான் ஜெயநந்தன்.

ஒன்றுக்கு மூணாய் சுடிதார் எடுத்துவிட்டு, காரை நகர்த்தினான். மனதினுள் மறுபடியும் அப்பெண்ணின் முகம். அப்பழுக்கில்லாத நிலவைப்போல் பயந்தில் வெளிறி இருந்தாலும், அதில் குழந்தைதனம் கொப்பளித்தது. அவன் உடலில் ஏதோ பிசுபிசுக்க முட்டியில் சிகப்பாய் இரத்தத் துளிகள், அவளுடையது தான்; பாவம் என்னவாயிற்றோ? கட்டாயம் விஜய் ஏதேனும் செய்திருப்பான்?

காட்டேஜ் வர அரை மணிக்கும் மேலாகும் என்பதால், மெல்லிய இசை ஒலிக்கப் பண்ணினான். என்றும் தெவிட்டாத அருமையான பழைய பாடல்கள். இருளில் டிரைவிங்கில் இப்படி பாடல் கேட்பது அவனிற்கு மிகவும் பிடித்தமானதொரு விஷயம்!

அதற்குள் அவனைப் பற்றிய ஒரு அவசிய அறிமுகம்!

''என் மனைவியை கட்டுப்படுத்த முடியலை சுவாமி?''

''போங்க சார் அது முடியாததால தான் நான் இங்கே உட்கார்ந்து இருக்கேன்!''

-பி.பாலாஜி கணேஷ்,
சிதம்பரம்.





ஜெயநந்தன் 31 வயது துடிப்பான இளைஞன். கணினி துறையில் அனிமேஷன் பயின்றவன். கம்ப்யூட்டர் உதிரிபாகங்கள் விற்று வரும் நிறுவனம் அவர்களுடையது. தந்தை நேசன் தன் உழைப்பால் ஒரு ஒலிப்பதிவு நிறுவனம் துவங்கினார். சிறு சிறு விளம்பரப் படங்களுக்கு இசை ஒலி அமைத்து தருவது அவர் வழக்கம். அது சிறப்பான முறையில் சென்று கொண்டிருந்த போதுதான், ஜெயநந்தன் தன் கம்ப்யூட்டர் படிப்பை முடித்தான்.

அப்போது புதிதாய் வந்திருந்த ஒரு படத்தில் அனிமேஷன் செய்யும் வேலை வரவே, உடனே ஒப்புக் கொண்டான். முதல் கிராபிக்ஸ் முயற்சியே அற்புதமாய் அமைந்து விட, மகனின் உழைப்பையும், டெடிகேஷனையும் பார்த்து மிகவும் பூரிப்படைந்தது தந்தையின் உள்ளம். துணையாய் அவரும் சேர்ந்து கொள்ள, புதிய முறைகளை தொழிலில் கையாண்டான். அதில் வெற்றியும் கண்டான். தொழில் சுத்தமாய் இருக்க பல புதிய வாய்ப்புகள் கிடைத்தது. அவன் அடைந்த இலாபத்தில் வாங்கியதுதான் இந்த காட்டேஜ்.

கல்லூரி படிப்பின் விடுமுறையின் போதே, அவ்வப்போது இங்கு வந்து போவது வழக்கம்! அப்போதே இவ்விடம் அவனுக்கு மிகவும் பிடித்து இருந்தது. நண்பன் ராஜேஷும் குடும்பத்துடன் வெளிநாட்டில் செட்டிலாகிட வேண்டியதால், நகரின் சில சொத்துக்களை மட்டும் வைத்துக் கொண்டு, மற்றவைகளை விற்றுவிடும் எண்ணத்தைக் கூறியதும், உடனே தலையாட்டினான்.

அப்பா என்ன சொல்வாரோ? என்று தயங்கிய போது, எவ்வளவு தம்பி? மீதியுள்ள பணத்திற்கு நான் ஏற்பாடு செய்கிறேன் என்றதும் பரமதிருப்தி அப்படி வாங்கிய வீடுதான் இது! ராஜேஷ் இருந்த போது தோட்டத்தை கவனித்துக் கொண்டவர்களே இப்போதும் கவனித்தார்கள். ஒவ்வொரு புராஜக்ட் முடியும் போது அடுத்த பணி தொடங்கும் முன் இங்கு வந்து ஒருவாரமேனும் ஓய்வெடுப்பது அவன் வழக்கம்!

காட்டேஜ் வாசலில் வண்டியை நிறுத்திவிட்டு பேண்ட் பைக்குள் சாவியைத் துழாவினான். இரவு நேரத்தில் அங்கே வேலை ஆட்கள் வருவார்கள். வீட்டைத் திறந்து விளக்கை ஒளிரவிட்ட பின், காரின் பின்பக்க கதவைத் திறந்து பார்சலை எடுக்கும் சமயம் ஏதோ மெத்தென்று தட்டுப்பட, காரின் விளக்கை ஒளிரவிட்டான். பின் இருக்கையில் அவன் மேல் மோதிய யுவதி?

இவள் எப்படி இங்கே? மயங்கி வேறு இருக்கிறாள் போலிருக்கே? திகைத்து மனம் செயல் இழந்தது சில விநாடிகள் தான் பின்பு, பூப்போல அவளைத் தூக்கினான்.

வைரமுத்துவின் வரிகள் நினைவில் ஆடின.

''கையில் மிதக்கும் கனவா நீ!
கைகால் முளைத்த காற்றா நீ!
கையில் ஏந்தியும் கனக்கவில்லையே!''

என்று படுக்கையில்
கிடத்தி, போர்வையை போர்த்தினான். மெல்ல அவளின் கண்ணி

மைகள் அசைந்தன. மொட்டாய் குவிந்திருந்த உடுகள் விலகி ''அம்மா...!'' என்று இருமுறை முனகினாள்.

அதன் பிறகு அவளிடம் எவ்வித அசைவும் இல்லை! என்ன செய்ய? அவள் மயக்கம் நிரந்தரமானதல்ல! என்பதையுணர்ந்து அவள் காயத்திற்கு மருந்து போட்டாலும் வலியைக் குறைத்து மயக்கமும் தெளியுமே! என்று உணர்ந்தான்.

ஆனால், முன்பின் அறியா ஒருத்தியின் வலியைக் கூட உணரும் முன் ஜாக்கிரதை உணர்வு தனக்கு எப்போதிலிருந்து வந்தது என்று வியந்தான் ஜெயநந்தன்.

அலமாரியிலிருந்து முதலுதவி பெட்டியில் பேண்டேஜ் துணிகள், பஞ்சு, டிங்சர் முதலியவற்றை எடுத்து வந்தான். காயம்பட்ட இடங்களை துடைத்து மருந்திட்டு பேண்ட் எய்ட் ஒட்டினான். அத்தனை பெரிய காயம் இல்லை.

எனவே உறைந்த தேங்காய் எண்ணெய்யை வெண்ணெயாக எடுத்து தேய்த்தவன் அந்த உதடுகளின் மினுமினுப்பில் அதை தொட தோன்றிய நீண்ட விரல்களை கட்டுப்படுத்தினான்.

எனினும், அந்த ரோஜாநிற உதட்டின் பட்டு போன்ற மிருதுத் தன்மை அவனை இம்சித்தது. அதிக ஒப்பனையில்லாமலும், களைப்பிலும் கூட அவளிடம் ஒருவித கவர்ச்சியும், வசீகரமும் இருந்தது. ஓவிய மென அவள் கண் மூடி உறங்குவதைக் கவனித்தவன்! என்ன தான் அவளிற்கு தெரியாவிட்டாலும், அவளை அதுவும் ஒரு பெண்ணை வைத்த கண் வாங்காமல் பார்ப்பது தவறென்று தோன்றியது.

எனவே, சூடான பாலைத் தயாரித்து அவன் எடுத்து வருவதற்கும், அந்த பெண் கண்களை திறந்து எழ முயற்சிக்கவும் சரியாய் இருந்தது.

''பிளீஸ்! எப்படி இருக்கு?''

''ம்... நீங்க?''

''ஜெயநந்தன்! நீங்க மார்க்கெட்டில் மயங்கி என் காரில் இருந்தீர்கள்? அதாவது, நான் ஷாப்பிங் போகும் போது வேகமாக என்னை இடித்து விட்டு ஓடினீர்கள்? பிறகு மயங்கியநிலையில்...! இப்போ நீங்கள் பெட்டர்தானே?!''

''நன்றி மிஸ்டர்...!''

''ஜெயநந்தன். ஜெய் கூட போதும், ரொம்பவும் களைப்பாய் இருப்பீர்கள். இந்த பாலைக் குடியுங்கள் கொஞ்சம் தெம்புவரும்.''

கண்களில் ஒரு கேள்வியும் மிரட்சியும், தோன்றிய போதும், ஜீவனற்ற உடலிற்கு அது தேவையாய் இருக்க வாங்கி பருகினாள். ஆயாசமாக சாய்ந்து கொண்டாள்.

பின் பேசத் துவங்கினாள் ''என் பெயர் ஜனனி!''

''நல்ல பேர்!''

''பிரண்ட் மேரேஜக்கு வந்தவள் கிளம்பும் சமயம் இந்த ஆளுங்க வலிய வந்து பேசினாங்க! அப்புறம் தவறா நடக்க முயற்சி பண்ணிட்டு துரத்தத் துவங்கிட்டாங்க?''



''யாரும் உதவிக்கு வரலையா?''

''என்ன ஸார்? ஒரு பெண் இரத்த காயங்களோடு தலைதெறிக்க ஓடறேன். யாரும் என்னன்னு கூட கேட்கலை.''

''பிறகு?''

''பயந்து போய் உங்க காரில் ஒளிந்தேன். அயர்ச்சியில் மயங்கி விட்டேன் போலும்! நீங்க...!''

''இது என் வீடுதான்! ஓய்வு எடுக்க ரெஸ்ட்டுக்காக வருவது வழக்கம் ஊர் திரும்பும் போது சில பொருட்கள் வாங்க வந்தேன். அப்போ தான் உங்களைப் பார்த்தது?''

''நன்றி ஸார்?''

''எத்தனை முறை சொல்வீர்கள்?''

''நமக்கு எதற்கு வம்புஎன்று ஒதுங்குபவர் மத்தியில் யாரோ முன் பின் அறியாமல் மயங்கி இருந்தவளை அழைத்து வந்து காயத்திற்கு மருந்திட்டு அக்கறையாய் விசாரிக்கும் உங்களுக்கு நன்றி சொல்வதில் தவறில்லை?!''

''நாம் எதை பிறருக்கு தருகிறோமோ, அதான் நமக்குத் திரும்பும் என்று நம்புபவன், நான்! நாளை எனக்கு எதுவும் கஷ்டம் என்றால் உதவ மாட்டீர்களா?''

''நிச்சயமாய்!''

''ஜனனி! உங்கள் முகவரி தந்தால் நானே அழைத்துக் கொண்டு போய் விட்டு விடுவேன்.''

''ஸார்! நான் ஹோட்டலில் ரூம் புக் பண்ணியிருந்தேன். இன்று மாலை வண்டி என்பதால் அதை வெகேட் பண்ணியாகி விட்டது!''

''ஓகோ...! உங்களுக்கு ஆட்சேபனை இல்லை எனில், இன்று இங்கேயே தங்கலாம். ஆனா, இங்கு இரவில் பணியாட்கள் தங்குவதில்லை, நான் மட்டும்தான்!''

''வெளியே தெரியாத இடத்தில் மாட்டிக்கொள்வதை விடவும் இங்கேயே இருப்பது உத்தமம்!''

''கண்ணுக்குத் தெரியாத கடவுளை விட தெரிந்த சாத்தானே மேலுன்னு முடிவு பண்ணிட்டீங்க இல்லே?!''

அவள் புன்னகைத்து ஸ்....! என்று வலியில் முனகினாள். ''அப்படியில்லை நீங்க ரொம்ப நல்லவர் அதனால்தான்!''

''அதெப்படி ஜனனி பார்த்தவுடனே என்னை நல்லவன் என்று சொல்லிவிட்டீர்கள்? ஒருவேளை நானும் கெட்டவனாக இருந்து விட்டால்!?''

''ஒருவருக்கு தீங்கிழைக்க வேண்டுமென்று நினைப்பவர்கள், மெனக்கெட்டு என் காயத்திற்கு மருந்திட்டு இருக்க வேண்டாமே!'' என்று அவன் பிலாஸ்டர் போட்ட இடத்தைக் காட்டினாள்.

''அம்பேல்! வெந்நீர் தயாரா இருக்கு?! குளித்துவிட்டு, வந்தால் உடல் சோர்வு நீங்கும் அல்லவா?!''

''ம்...!''

''முடிந்தால் போதும்!''

''முடியும், ஆனால் மாற்றுடை இல்லையே?!''

ஒருவிநாடி யோசித்தவன். போய் குளியுங்கள் வரும்! என்று வெளியே போனான்.

டவலைப் பெற்றுக் கொண்டு குளியலறை விரைந்தாள். அவன் கூறியபடியே, வெது வெதுப்பான நீர்! உடலில் இறங்கிட இதமாகவே இருந்தது. சிராய்ப்பு ஏற்பட்ட இடம் மட்டும் இலேசாய் எரிந்தது.

டவலை இழுத்து கட்டியபடி வெளியே எட்டிப்பார்த்தாள்! அவன் இல்லை, கட்டிலின் மேல் ஒரு கவர் மட்டுமிருந்தது. பிரித்துப் பார்க்க ஒரு சல்வார் அதிலிருந்தது.

ஆலீவ் நிற சல்வார் ஜர்தோசி ஒர்க் செய்தது அவளுக்கு பாந்தமாய் இருந்தது! கூந்தலை உலர்த்தும் நேரம் தாழ்விலகும் சப்தம் கேட்டது ''கூடவே வரலாமா?'' என்னும் ஜெயநந்தனின் குரலும்.

''வாங்க?!''

உள்ளே நுழைந்தவன் அவளின் உருவம் கண்டு கண்களை அகல விரித்தான். ''அழகு ஆபத்து என்று சும்மாவா சொன்னார்கள்?!''

''என்ன?!''

''இத்தனை அழகான பெண் என்றால் மரம் மட்டைக்குக் கூட ஆசை வருமே?!''

''கிண்டலா?''

''சத்தியமா இல்லை! சாப்பிடுவோமா ஜனனி? வெளியிலே சுற்றியதில் நல்ல பசி! சப்பாத்தியும் சப்ஜியும் இருக்கு, சாப்பிடலாமே?!''

''உங்க சமையலா?''



''டாக்டர் எனக்கு இரண்டு நாளா இன்கம்மிங் மட்டும் தான் அவுட் கோயிங்கே இல்லை?''

''ஓகே ஓகே 100 ரூபாய் என்கிட்ட 'ஈசி' பண்ணிடுங்க சரியாகும்!''

-பிபாலாஜி கணேஷ், சிதம்பரம்.

''பயப்பட வேண்டாம்?! இங்கே வேலைப் பார்க்கும் பெண் செய்தது. மாலை 6 மணி வரை இருப்பாங்க?! போகும் போது நைட் சாப்பாடு ஹாட்பேகில் இருக்கும்.''

''அப்போ தேவலாம்? சாப்பிடலாம்...!''

''ஆமாம்! ஆமாம்! ஓடியோடி களைத்து இருப்பீர்கள்?!''

''கடவுளே மறுபடியும் அதையே நினைவு படுத்த வேண்டாமே?'' அவள் உடலில் ஒருவித நடுக்கம் ஏற்பட்டது. அதைக் கண்டவுடன் பேச்சை மாற்றினான்.

''ஜனனி சாப்பாடு விஷயத்தில் நீங்களெப்படி?'' அவள் சப்பாத்தியை சுவைத்தபடியே

''ஏன்?'' என்பது போல் பார்த்தாள்.



''இல்லை எனக்கும் மிச்சம் வைப்பீர்களா என்று தெரிந்து கொள்ள?''

''நான் ஒண்ணும் மாயாபஜார் பார்ட்டி இல்லை?''

சிலமணி நேரங்களுக்கு முன்னரே பார்த்தவனுடன் மிகவும் இயல்பாக உரையாடுவது மிகவும் இன்பமாகவே இருந்தது.

ஒருவரை ஒருவர் சீண்டியபடியே உணவருந்தி விட்டு பால்கனியில் அமர்ந்தார்கள்.

## 2

அறையை ஒட்டினாற்போல் மூங்கில் கட்டைகளை வரிசையாய் அடுக்கி அதன் நடுவில் இரண்டு மூன்று க்ரில் கம்பிகள் இருந்தன. குளிர் உடலை ஊடுருவியது. சால்வை ஒன்றை எடுத்து அவள்மேல் போர்த்தினான் ஜெயநந்தன்.

இருள் சூழ்ந்து இருந்ததால் அவ்விடத்தின் அழகு முழுமையாய் தெரியாமல் போனாலும், ஆனால் சில மரங்களுக்கு நடுவே அமைக்கப்பட்டு இருந்த கண்ணுக்கு உறுத்தாத விளக்குகள் வெகு அழகாகவே ஒளி உமிழ்ந்தன.

அவள் கண்கள் இன்னமும் சோர்ந்து தெரிய, ''டயர்டா இருந்தால் தூங்கலாமே?!''

''படபடப்பு கொஞ்சம் அடங்கிப் போய் இருக்கு ஸார்? காற்றாட நடந்தால் நன்றாக இருக்கும்.''

''நடக்கலாம், ஆனால் அத்தனை தெம்பு உங்கள் காலிற்கு இருக்கும் என்று தோன்றவில்லை.''

''உண்மைதான். ஆனால் பற்றிக் கொள்ள துணையிருந்தால்...!'' என்று எண்ணும் போது அவள் அவன் தோளில் சாய்ந்து நடப்பதைப் போன்ற கற்பனை உதயமானது. ச்சீ! என்று தலையை உதறினாள்.

''ஜனனி அடுத்து என்ன செய்யப்போகிறீர்கள்?''

''தூங்கணும்!?''

''நல்ல கடி? உங்கள் வாயருகே ரத்தம் வருகிறது பாருங்கள்? எங்கே போக வேண்டும் என்று கேட்டால்?''

''ஏன்? நான் அத்தனை தொந்தரவு தருகிறேனோ?''

''ச்சீ...!''

''நீங்கள் விரும்பும் வரையில் இங்கே இருக்கலாம்!''

இவர்களின் பேச்சோடு கண்களும் இணைந்து கொண்டன.

''ஸார்?!''

''ஜனனி! ஜெய்ன்னு கூப்பிடலாமே?''

''பிடிக்குமா?!''

''ம்...!''

''ஜெய்...''அப்பேரை உச்சரிக்கும் தருணம் அவள் முகம் கனிந்து மலர்ந்தது.

''எஸ் ஜானு!''

''எனக்கு தனிமையில் எங்கும் போக பயமாய் இருக்கிறது. அத னால எங்க அப்பாவிற்கு போன் பண்ணி சொல்லிடறேன். அவர் வந்து என்னைக் கூட்டிட்டு போயிடுவார்.''

''இந்தாருங்கள்.''

''இப்போவே பேசிடவா? இரவு நேரம் ஏதும் பயப்பட வாய்ப்பு உள்ளதா''

''உங்கள் தந்தைக்கு கடைசி ஆக பேசி எவ்வளவு நேரம் ஆகி றது?!''

''மதியம் பேசினேன்!''

''இதுவரையில் தகவல் இல்லையேன்னு யோசிப்பார் இல் லையா? தவிரவும் உங்க மொபைலுக்கு டிரைபண்ணிப் பண்ணி பயந் திருப்பார் இல்லையா?''

''ம்...'' அவன் சொல்லியதும் சரியெனப்படவே உடனே செல்லை வாங்கித் தொடர்பு கொண்டாள். சில நிமிட ரிங்கிற்குப் பிறகு போன் எடுக்கப்பட்டது.

''அப்பா ஜனனி!''

''....!''

நடந்தவற்றை அவள் விளக்கிட எதிர்முனை அதிர்ந்திட ...!

''நௌ ஐ ம் ஆல்ரைட் டாடி நாட் பேட்.''

''....!''

''யெஸ் டேடி...''

''....''

''இப்போவா? என்னை காப்பாற்றியவர் வீட்டில் இருக்கிறேன். தனியாவர பயமா இருக்கு டாடி. நீங்களே வந்து என்னை அழைத்துப் போகிறீர்களா?''

''....!''

''சரி...ஏன் உங்க குரல் சரியேயில்லை!''

''....!''

''என்னாச்சு டாடி''

''....''

''டேக் கேர்'' என்றவள் அவனிடம் போனை நீட்டினாள். ''அப்பா உங்ககிட்ட பேசணும் என்றார்''.

அவள் பேச துவங்கிய நொடியில் இருந்தே அவளின் முகமாறு தல்களை ரசித்து வந்தவன் முறுவலுடன் போனை வாங்கினான்.

''சொல்லுங்க் ஸார்!''

''என்ன தம்பி? அங்கே ஏதும் பிரச்சனை இல்லையே?''

''இப்போ பாதுகாப்பாத்தான் ஸார் இருக்கோம். பயமில்லை, நீங்க பதறாமல் வாங்க''

''நன்றிப்பா!''

''பரவாயில்லை ஸார்''

''இங்கேயும், சிறு பிரச்சனை நான் வர்றேன்!'' மறுபடியும் ஒரு முறை மகளைப் பார்த்துக்கச் சொல்லி விட்டு போனை அணைத்தார்



ஜனனியின் அப்பா.

''அப்பா ரொம்பவும் பயந்து போய்விட்டார்?''

''இருக்காதபின்னே? பெற்றவர் ஆயிற்றே? பாசம் இருக்குமே?''

''ம்... சாதாரண பாசம் இல்லை ஜெய் கடலளவு அன்பு. நான் அப் பாவுடைய செல்லப் பெண்ணும் கூட!''

''நீங்க ஒரே பெண்ணா?''

''இல்லை, நானும், கனியும், அவள் பிறந்த சில வருடங்களி லேயே அம்மா இறந்து போனதால், எங்களுக்கு அப்பாதான் எல்லாம்!

ஒரே சமயத்தில் அம்மாவின் இழப்பு, தொழில் இளம்பிள்ளைகள், சுற்றத்தாரின் மறுமண நச்சரிப்பு இவையெல்லாம் கடந்து தான் எங் களை வளர்த்தார்.''

இவள் தாயில்லா பெண்ணா என்று எண்ணும் போது மனம் சட் டென கனிந்தது. அவள் பார்வையில் தோன்றிய மாற்றம் உணராமல் பேசிக் கொண்டே போனாள் அவள்.

''டிப்ளமா இன் கம்ப்யூட்டர் கிராபிக்ஸ் முடித்துவிட்டேன். இப் போதான் முதல் புராஜக்ட் கமிட்டாகி இருக்கேன். தங்கை லா காலே ஜில் படிக்கிறாள். உங்களைப் பற்றி எதுவும் சொல்லவில்லையே ஜெய்!''

''படிப்பில் இருவரும் ஒரே ரகம்தான்! சில புராஜக்ட்ஸ் முடித்தி ருக்கிறேன்.''

''இஸிட்! இனிமேல் ஏதாவது டவுட் வந்தால் உங்களிடமே கேட் டுக் கொள்ளலாம்!'' குழந்தையாய் கொஞ்சியதைக் கேட்டவுடன் தன்னை மறந்து பார்த்தான். பின் ''என் சொந்த சம்பாத்தியத்தில் வாங் கிய இடம் இது. தம்பி, தங்கை, அம்மா, அப்பா என்று அளவான அழ கான குடும்பம் எப்போதும் ஒருவரையொருவர் சீண்டிக் கொண்டு விளையாடியபடி இருப்போம்! எந்நேரமும் கலாட்டாதான்!''

''நான் உங்க பேமிலியை ஒருமுறை பார்க்க வேண்டும் ஜெய்.'' ஏக்கம் வழியும் பார்வையோடு அவள் கேட்க பாவமாய் இருந்தது ஜெயநந்தனுக்கு!

''இன்ட்ஸ்ரஸ்டிங்கா ஏதாவது சொல்லுங்களேன்!''

''ஷ்யூர்...! ஒருமுறை என்னோட பிறந்தநாள் விழாவின் போது, நடந்த கலாட்டாவைச் சொல்றேன்?''

''ம்...!'' ஆர்வமாய் கன்னத்தில் கைவைத்து முன்சாய்ந்து கதை கேட்கும் ஆர்வத்துடன் தயாரானவளை புன்னகையுடன் நோக்கிவிட்டு ஆரம்பித்தான். ''எங்கள் வீட்டிற்கு வந்த புது விருந்தினர்களிடம் ''தொட்டில் இன்னும் ரெடி ஆகலை. இருங்க பிள்ளையை தூக்கிட்டு வர்றோம்'' என்று கூறிவிட்டு என்னை அழைத்துச் சென்று நிறுத்த வந் தவர்கள் விழிக்க, புரிந்த எனக்கு அசடுவழிய இந்த இரண்டு வாய்க ளும் வாயைப் பொத்தியபடி சிரிக்குதுங்கள்... வந்தவர்களுக்கு அவசர விருந்து ஏற்பாடு செய்து விட்டு, இரண்டு பேரையும் விரட்டி விரட்டி உதைத்தேன்.''

மறுபடியும் சிரித்தாள். சற்று நேரம் முன்பு சோகமாய் கலங்கிய

விழிகள் இன்று புன்னகையாய் பூத்து இருந்ததைக் கண்டு மனம் நிறைந்தவன். இதே போல் இவளை என்றுமே இப்படி புன்னகையோடு இருக்க வைக்க வேண்டும் என்ற எண்ணம் விசித்திரமாய் இருந்தது ஜெயநந்தனுக்கு!

''வாழ்வில் சில தினங்களாவது இப்படி உறவுகளோடு இருந்து விட்டு இறந்திடலாம் ஜெய்...!'' மீண்டும் அவளின் கண்கள் பனிப்பதை உணர்ந்தவன்.

''நேரமாகுது ஜானு நீ தூங்கு!'' என்று அவள் தோளைப்பற்றியெழ உதவினான். அந்த கரத்தின் ஸ்பரிஸம் ஜனனிக்கு பாதுகாப்பை உணர்த்தியது. அதில் அப்படியே சாய்ந்து அழவேண்டும் என்று துடித்த மனதை அடக்கினாள்.

ஜெய நந்தனின் நிலையிலும் சிறு மாற்றம். அதே நேரம் அவன் மொபைல் அழைத்தது? திரையில் நண்பன் விஜய்யின் எண்!

''ஹலோ விஜய்!''

''ஜெயா நீ சொன்ன மாதிரி மார்க்கெட்டில் சிலரை பிடிக்க ட்ரை பண்ணியிருக்காங்க. அதில் ஒருத்தன் இருக்கும் இடம் தெரிந்துவிட்டது. எப்படியும் நாளைக்குள் படித்து விடுவோம். அப்படியே அந்த பழைய ரௌடியோட புகைப்பட ஆல்பமும் இருக்கு! நீ பார்த்த ஆட்களில் யாராவது இதில் இருந்தா சொல்றீயா?!''

''கட்டாயம்!''

''அந்தப் பெண்ணை என்னால் கண்டு பிடிக்கவே முடியலைடா?''

''அவங்க இப்போ என் கூடத்தான் இருக்காங்க?''

''இஸிட்? எப்படி?''

''என் காரில் மயங்கி கிடந்தாங்க? காட்டேஜ் வந்த பிறகு தான் கவனித்து முதல் உதவி செய்தேன் நானே உன்னிடம் விவரம் சொல்ல வேண்டுமென்று நினைத்தேன்.''

''குட்! அப்போ அவங்களையும் கூட்டிட்டு வாயேன் ஒரு கம்ப்ளைண்ட் எழுதி தரட்டும்.''

''இருடா கேட்டுக்கறேன்?''

ஜானு?''

''ம்...!''

நண்பனிடம் பேசும்'ஓ வரையில் அவனையே உறுத்துப் பார்த்தாள். அளவான உயரம், அதற்கு ஏற்றாப்போல் உடல் வாகு, பளீரிடும் பற்கள், சிவந்த உதடுகள்' அழகான புன்னகை பார்த்துக் கொண்டே இருக்கலாம் போன்ற உருவம்!

ஜனனி மீண்டும் அவன் குரலில் தெளிந்தவள் இத்தனை நேரம் அவனையே வெறித்துப் பார்த்ததை தவறாய் எண்ணியிருப்பானோ என்று வெட்கினாள். ''என்ன ஜெய்?''

''என் நண்பன் விஜய் இங்கே 'எஸ்.ஐ'யா இருக்கான். உங்களைப் பற்றி விவரம் சொன்னேன்.''

''எப்போ?''



''என்னை இடித்துவிட்டு ஓடியபோது?.. யாரோ என்றாலும் மனம் வரவில்லை. அதனால் உடனே நடவடிக்கை எடுக்கச் சொல்லி விஜயிடம் சொன்னேன்.''

''நன்றி!''

அவளின் இதழ்களை ஒரு விரலால் தொட்டான். ''வேண்டாம்!'' என்பது போல் தலையாட்டி விட்டு, ''இத்தனை முறை பயன்படுத்தியதால் அந்த வார்த்தையே உனக்கு நன்றி சொல்லப் போகிறது. ஜானு! நாளை அடையாளம் காட்ட வரமுடியுமான்னு கேட்டேன்!''

''ம்... அவசியம் என்று தோன்றினால் போகலாம்.''

''ஏதோவொரு பிரச்சனை என்று விடமால், இத்தனை தூரம் உதவி செய்கிறீர்களே?!''

''செய்வன திருந்தச் செய் என்று ஒரு பழமொழி உண்டே!''

''நண்பனிடம் வருகிறேன் என்று உறுதி தந்துவிட்டு அவளை அறைவாயிலில் விட்டான். நான் எதிர் அறையில் இருப்பேன். ஏதாவது வேண்டு மென்றால் கூப்பிடு!''

கதவைக் கூடத் தாளியிடாமல் போகும் அவனைக் கண்டாள். அவனும் திரும்பி பார்த்து நகைக்க தலையை உள்ளிழுத்துக் கொண்டாள்.

அவன் அறையைப் போலவே இதுவும் சுத்தமாகவே இருந்தது. அழகான குஷன் படுக்கை, தேய்த்து இழைத்த தேக்குமரக் கட்டில் அதன் ஒரு பகுதியில் குடில் போன்ற சிறு ஓவியம். அதில் சின்னக் கம்பிகளுக்கு நடுவில் சிறுபறவைகள் அதேபோல் இரண்டு புறமும் பொறிக்கப்பட்டு இருந்தது. அக்குருவிகள் பாதிதிறந்திருந்த கூண்டின் வழியே, வெளியே வர முயன்று கால்களின் இடுக்கு கூண்டில் சிக்கி அது தன் இணையைத் தேடி சேர முயல்வது போல, முடியாமல் சில நீர்துளிகள்.

அவை பொன்னிறமாய் செதுக்கப்பட்டு இருந்தது. நடுவில் உள்ள கண்ணாடி அப்பறவைகளின் அன்பை காதலை, தன் இணையை சேர இயலாமல் அதன் துடிப்புதனை வெகு அழகாக எடுத்துக் காட்டியது!

பட்டு போன்ற மெத்தை அவளை உள்ளே புதைத்துக் கொண்டது. கண்மூடினால், எதிரே நட்சத்திரங்கள் எல்லாம் சேர்ந்து குசலம் விசாரிக்க அவ்விடம் வெகு பாதுகாப்பு என்று அவள் மனதிற்கு தோன்றியது. அத்தோடு ஜெயநந்தனின் அருகாமையும், அவனின் அனுசரனையானத் தொடுதலும், நிம்மதியாய் கண்களை மூடினாள்



''கபாலி தலைவரை பழைய ஞாபகத்திலேயே கூப்பிடுறான்?''

''என்ன சொல்லி?''

''பாஸ் இங்கே வாங்கன்னு தான்!''

பி.பாலாஜி கணேஷ்,
சிதம்பரம்.

ஜனனி. இந்த உறக்கம் இனிமேல் இராது என்று உணராமல்!

அதிகாலைப் பனியின் போர்வையை விலகிட மாட்டேன் என்று சூரியனிடம் கோபிக்க, பனிமகளின் உடலை முழுவதும் வெளிச்சம் போட்டுக் காட்டும் வேகத்தோடு விரைந்து வந்தான் சூரியன்!

உறக்கம் தொலைந்து இருந்த. ஜெயநந்தன் ஆவிபறக்கும் காபியோடு ஜனனியின் அறைக்குள் நுழைந்தான். அவளுமே சோம்பிப் போய் இராமல் குளித்து முடித்து நேற்று அவள் அணிந்திருந்த உடையை உலர்த்தி இருந்தாள். அவனுடைய ஜிப்பாவை அணிந்திருந்தாள்.

அவனின் உயரத்திற்கும், உடற்கட்டுக்கும் அழகாய் பொருந்தியிருக்கும் ஜிப்பா! ஜனனிக்கு ஓரசாய் இருந்தது. கைகளுக்கு மேல் வெளி வந்த ஜிப்பாவை மடித்து விட்டிருந்தாள்.

அவ்வுடையில் அவளைக் கண்டதும், அடக்கமாட்டாமல் சிரித்து விட்டான் ஜெயநந்தன்.

''எதற்கு சிரிப்பு?''

''வேறு உடையில்லை என்று தானே இதை அணிந்தேன். விருந்தாளிகளை அவமதிப்பது பண்பில்லையே?''

''நீ என் விருந்தாளி இல்லை!''

அவளின் கண்களை நேருக்குநேர் பார்த்தவாறு சொல்லி தலை சரித்தான் ஜனனி தவித்தாள்.

''நாம் நண்பர்களா? எப்போதில் இருந்து!? ஜெய்...?!''

''உறங்கும் தேவதையாய் உனைக் கண்ட போதிலிருந்து?''

''என்ன?'' புருவம் உயர்த்தினாள்!

''எப்படியும் நீ என்னை விட வயது குறைவானவள்தானே நீயென்று அழைக்கலாம் இல்லையா?''

''நான் அதற்குப் பார்க்கவில்லை. ஒரே இரவில் கவிஞர் ஆவதெப்படி எனும் புக் ஏதாவது படித்தீர்களா?''

''நக்கலா?''

காபியை பருகியபடியே கேட்டாள். ''ஜெய் நாம் வெறும் நண்பர்கள் என்கிறீர்களே? இது எப்படி ஒரே வண்டியில் ஒன்றாய் சிறிது நேரம் பழகும் நட்பா?''

அவன் ஜனனியை ஆழ்ந்து நோக்கி விட்டு, ''ஜனனி நாம்தினமும் எத்தனையோ பேர்களை சந்திக்கிறோம். ஆனால் எல்லோரையும் நாம் நண்பர்களாய் ஏற்பதில்லை, சிலரிடம் வெறும் பார்வையோடு, வெகு சிலரிடம் புன்னகை, உபசரிப்பு விசாரிப்பு, ஆனால் நெருங்கியவர்களிடம் மட்டும் அன்பைப் பரிமாறுவோம்.''

''அந்தரங்கம் ஒருவரிடம் மட்டும் தானே!'' என்று அவளைக் கண்டு குறும்பாய் கண்சிமிட்டினான்.

''இதில் நானெந்த ரகம்?''

''கடைசியென சொல்ல ஆசை தான். ஆனால், அது அடியில் முடியக் கூடாதே! உன்னை வெளியே அழைத்துப் போக வேண்டும் என்று எண்ணியிருந்தேன். ஆனால் இந்த உடையில் உனைக் கண்டால் நேற்



றாவது மனிதர்கள் துரத்தினார்கள். இன்று சில ஜீவராசிகளும் சேர்ந்து கொள்ளுமே என்று தான் யோசிக்கிறேன்.''

''யூ...யூ...!''

''எஸ்....ஐ....ஐ... நாஙிருக்க பயமேன். அந்த மற்றொரு சல்வாரையும் தாரை வார்க்க வேண்டியிருக்கும்.''

''செய்வன திருந்தச்செய் என்று நேற்றிரவு யாரோ சொன்ன ஞாபகம்? ஆனால் உடையவர்கள் கோபிப்பார்கள் என்றால் வேண்டாம்? என்னால் மத்துக்கட்டைகள் உடைய வேண்டாம்?!''

''மத்துக்கட்டைகள் அந்தக் காலம் இருப்பினும், இடிக்க ஆள் இது வரையில் வரவில்லையே?!''

''அப்போ இவையாருக்கு?'' உடைகளைத் தொட்டுக் காட்டினாள்.

''என் தங்கைக்கு?''

''அப்படியா?'' அவள் திகைக்க.

அவனோ புன்னகையுடன், ''நான் யாருக்கும் இதுவரையில் எதுவும் வாங்கித் தரவில்லை. குறிப்பாய் பெண்களுக்கு? ''

'' சந்தோஷம் ''இருவரும் நகைத்தபடி இருக்க..

'' சீக்கிரம் உடைமாற்றி விட்டு வா! ''

இருவரும் கிளம்பி காட்டேஜை லாக் செய்து விட்டு வெளியே வரவும், சரசுவும், நாதனும் புது உடையில் வந்தனர்.

'' அய்யா வெளியே கிளம்பிட்டீங்களா? கோயிலுக்குப் போயிட்டு வர லேட்டாயிடுச்சு. நீங்க சாப்பிடலையே வாங்க ஏதாவது பலகாரம் செய்து தர்றேன். ''

'' வேண்டாம் சரசு. நான் வெளியே கிளம்பறேன். இரவு தான் வருவோம். நீங்க நாளைக்கு வாங்க. திருமண நாள் வாழ்த்துக்கள். '' அவன் சொல்ல வெட்கப்பட்டவர்கள், '' அய்யா அம்மா யாரு? ரொம்பவும் அழகா இருக்காங்களே? ''

'' அவங்க நம்ம விருந்தாளி ''

'' சரசு திருமண வாழ்த்துக்கள். எத்தனையாவது வருடம்? ''

'' இரண்டாவது ''

அதற்குள் ஜெயநந்தன் அவர்களுக்கு ஆளுக்கு 1000 ரூபாய் தந்தான்.

'' நன்றி அய்யா '' குதூகலமாய் நடந்தார்கள் அவர்கள் இருவரும். அவர்களின் நிலையில் ஒரு கணம் தன்னைக் கற்பனை செய்து பார்த்தவளின் கன்னம் சிவந்தது.

'' இவங்க தான் இங்கே வேலை பார்க்குறாங்களா? ''

'' ம்... முன்னாடி இருந்தே இங்கே இருக்கிறார்கள். ரொம்பவும் நல்ல குணம் இருவருக்கும். '' காரில் போகும் வரையில் ஏதோ யோசனையிலும், சுற்றிலும் இருந்த தேயிலைத் தோட்டங்களையும் பார்த்தபடியே வந்தாள்.

'' எந்த கோட்டையைப் பிடிக்க யோசனை? ''

'' அப்பாவைப் பற்றி பாவம்...! ''

அவன் மௌனமானான். கூடுமான வரையில் ஜனனியின் தந்தை

தாமதமாக வந்தால் கூட நலமே! ஜனனியிடம் இன்னும் நெருங்க லாமே என்று தோன்றியது.

## 3

முதலில் போலீஸ் ஸ்டேஷனுக்கு சென்ற னர்.

அங்கு அவள் நடந்த விவரங்களை கூறிட கம்ப்ளைண்ட் ரெடியானது. ஜனனி எதேச்சை யாய் பார்வையைத் திருப்பினாள். நண்பர்கள் ஏதேதோ பேசி சிரித்துக் கொண்டு இருந்தார்கள்.

உதட்டை உள்புறமாய் மடித்து இலேசாய் பல்வரிசை தெரிய அந்த சிரிப்பு எங்கேயோ அம்பைப் போல் ஊடுருவியது. மாநிறத்திற்கும் சற்று கூடுதலான நிறம், நெடிய உருவம், கட்டான உடல், அதிலும் அந்த உதடுகளும், கட்டிப் போடும் கண்களையும் இன்றெல்லாம் பார்த்துக் கொண்டே இருக்கலாம்.

'' ஜனனி! '' நண்பர்கள் இருவரும் அவளைத் தேடி வந்தனர்.

'' எஸ் ஸார் ''

''மேடம் இதில் சில பழைய கிரிமினல்ஸ் போட்டோ எல்லாமிருக்கு. இதே ஏரியா ஆளுங்க. எந்தப் பிரச்சனைன்னாலும் இவனுங்க சம்பந்தப்பட்டதா தான் நடக்கும். ''

ஜனனி தனக்கு முன்னால் வைக்கப்பட்டு இருந்த பைலைப் புரட்டினாள். ஒவ்வொரு ஆளும் ஒரு மாதிரி. ஆனால் யார் கண்ணிலும் உண்மை துளியும் இல்லை.



''எங்கம்மா என்னை அடிக்க வந்தாங்கன்னா அடுப் பங்கரைக்குள்ள போய்டு வேன்...''

''ஏன்?''

''அங்க மட்டும் எங்கம்மா வரமாட்டாங்க...!''

-கே.பிரசன்னகுமார், குடந்தை.

தீயவற்றை செய்து செய்தே முகமும் கண்களும் ஈரம் குறைந்து கடினமுற்று இருந்தது. திடீரென ஒரு புகைப்படத்தில் அவள் பார்வை நிலைத்தது.

''ஜெய்...!'' இவன்தான்.

''நல்லா பார்த்து சொல்லும்மா..!''

''தினைவிருக்கு ரெயில்வே ஸ்டேஷன் போக டாக்ஸி பிடிக்க பஜார் வந்தபோது இவன்தான் பேச்சு கொடுத்தான். அப்புறம் நான் கும்பலா என்னை விரட்டினாங்க.''

''உங்களை ஏன் விரட்டினாங்க?''

''தெரியாது ஸார்! அவங்க யாரையும் இதுவரையில் நான் பார்த்ததே இல்லை.''



''நல்லா யோசிச்சு சொல்லுங்கம்மா!''

''இவனேதான் ஸார் ஆனா என்னையேன் துரத்தினாங்க? முன்பின் அறியா இடத்தில் முகம் அறியா எதிரிகள்.''

''டோண்ட் வொர்ரி இவன் பக்கத்தில் உள்ள ஆளுதான் பிடிச்சு விசாரிச்சா உண்மை வெளிவந்திடும்''

''இது போதும் நந்தா, மீதியை நான் பார்த்துக்கறேன். நீ கிளம்பு ஏதாவது பிரச்சனைன்னா எந்த நேரமும் கூப்பிடு.''

''தேங்க்ஸ் டா!''

''கவனமா போங்க ''என்று இன்ஸ்பெக்டர் விடை கொடுத்து அனுப்பினான் இருவரையும்.!

''ஜனனி நாம் கார்டன் போயிட்டு ஏதாவது சாப்பிட்ட பிறகு..'' அவள் முகம் போன போக்கைக் கண்டவுடன்''என்ன?'' என்றான்.

''எனக்கு எங்கேயும் வெளியே போக பயமாயிருக்கு ஜெய்! மறுபடியும் ஏதாவது பிரச்சனை வந்திட்டா?''

''ஏன்? நானில்லை.?''

''டோன்ட் பீ ஸில்லி ஜெய்! ஏன் நானில்லையா? என்று கேட்கும் நீங்கள் என்ன சினிமா ஹீரோவா? பத்துபேரை ஒரே நேரத்தில் அடிக்க?''

''கஷ்டம்தான் அம்மணி! தங்களின் முன்னெச்சரிக்கைக்கு நன்றி''

''கெஸ் இட் ஜெய்! சப்போஸ் இப்போ நம்மை 10 பேர் துரத்தினா நீங்க என்ன செய்வீங்க?''

''நல்ல கேள்வி முடிந்தவரை சமாளிப்பேன். இருக்கவே இருக்கே பிட்டி உஷா ரேஞ்சுக்கு நீ காப்பாற்றிட மாட்டியா?''

''கிண்டலா?'' அவன் வயிற்றில் முட்டியை வைத்து இடித்தாள்.

அடுத்து காரை அவன் நிறுத்திய இடம் பிரபல துணிக்கடை.

''வேண்டாம் ஜெய் எதற்கு வீண் செலவு? எப்படியும் நாளைக்கு அப்பா வந்திடுவார்''

''அதனால்தான் முதலில் இங்கே வந்தேன். ஜனனி காலையில் உன் அப்பா வந்து என்னப்பா என் அருமை மகளுக்கு ஒரு உடை கூட வாங்கித் தரமுடியாதவனா நீ என்று பார்த்தால் அது அய்யாவிற்கு கௌரவப் பிரச்சனை. ஏன் உனக்கு நான் வாங்கித் தரக் கூடாதா ஜானு!''

''உங்க விருப்பம் ஜெய்'' என்றாள் அதற்கு மேல் மறுக்கத் தோன்றாமல்

தேன் நிறத்திலும், அடர் சிவப்பிலும் அவள் தேர்வு செய்ய...!

''ஜானு உடைகள் தேர்வு செய்வதில் தனிக்கவனம் வேண்டும். அது ஒரு கலை தெரியுமா? மோஸ்ட்லி நம் எல்லாருக்குமே பேவரிட் கலர்ன்னு ஒண்ணு இருக்கும். ஆனால் அது தனக்கு சூட்டாகுமா என்று கூட உணராமல் கைக்கு கிடைத்தவற்றை அணிந்து கொள்வார்கள். யூ நோ பழக்க வழக்கம். முகம், குரல் போல உடைகளும் நம்மைத் தனித்தும் காட்டும்.''

''கலர்ஸ் தேர்வு செய்வதில் நல்ல அனுபவம் போல!''

''கடவுளே?! எதைப் பேசினாலும் சந்தேகம்தானோ? நமக்குத்

தெரிந்தவற்றை பிறருக்கு சொல்வது தவறில்லையே? நீ நல்ல கோதுமை நிறம் உனக்கு லேவண்டர், பிங்க் தவிர நீலம் பிரவுன் பிளாக் அண்ட் ஒயிட் எடுப்பாக இருக்கும். அதிலும் ஒயிட் டிரஸ் போட்டால் 16 வயதினிலே ஸ்ரீதேவிதான்!''

''அப்போ நீங்க யாரு ஜெய்? பரட்டையா? சப்பாணியா?''

ஒரு விநாடி திகைத்தாலும் '' என் சிகை அத்தனை பரட்டையும் இல்லை. அத்தோடு நான் நன்றாக நடப்பதாகவும் ஞாபகம். இருப்பினும், தங்களின் திருவுளத்திற்கு என்ன விருப்பமோ அதையே எண்ணிக் கொள்ளலாம்.''

''போங்க! ஜெய்...!'' என்று அழகு காட்டினாலும், அவன் குறிப்பிட்ட பிங்க், வெள்ளை நிறத்திலேயே உடையை தேர்வு செய்தாள்.

''ஜெய்..''

''ம்.. ''

''நம் நட்பு வெறும் ரெயில் சிநேகமாய் இருந்து விடக் கூடாது? அடிக்கடி வந்து என்னைப் பார்க்க வேண்டும்! யுகம் யுகமாய் பார்த்துப் பழகியதைப் போல் இருக்கிறது. உங்கள் முகம்! என்றும் என்னை மறந்து விட மாட்டீங்களே?!'' பிசிறடித்தது ஜனனியின் குரல் அவனையும் அசைத்தது.

இரண்டு நாள் முன்பு வரை யாரென்றே தெரியாத ஒரு பெண். இனி இவளை ஒரு கணமேனும் பிரிய இயலுமா? என்று தோன்றவில்லை? அவள் மூலம் கொண்டுள்ள அன்பிற்கு எந்த வர்ணமும் பூசிடத் தோன்றவில்லை! ஆனால், அவளின் வலி கண்டு பதறியது இதமாய் இருந்தது. அவளின் வலி கண்டு பதறிய உள்ளம் அவள் எப்படியாவது தன்னைப்பத்திய நினைவு கொள்ள வைத்திட வேண்டுமென்ற ரீதியில் யோசிக்கத் துவங்கியது?

''என்ன ஜெய்? ஏதுவுமே பேசவே மாட்டேங்கறீங்க? இரண்டு நாள் தொல்லையே தாங்க முடியவில்லை மேற்கொண்டு வேறு வேண்டுமா என்று நினைக்கிறீர்களா?''

''ச்சீ?! அதெல்லாம் இல்லைம்மா?''

''ஏதோ ... !'' அதற்கு மேல் பூங்கா செல்லும் வரையில் ஏதும் பேசவில்லை. இருவரின் மனதிலும் வெவ்வேறு விதமான யோசனைகள் ஓடிக் கொண்டு இருந்தது.

மலைச்சரிவில், அடுக்கடுக்கான திட்டுகளில், வரிசை வரிசையாக வண்ண வண்ண மலர் செடிகளும், பெயர் சொல்லித் தெரியாமல் கண்ணைப் பறிக்கும் அழகுடன் நிறமும் சேர்ந்து வியக்கும் வண்ணம் அடுக்கி வைக்கப்பட்டு இருந்தது.

''வாவ்... இயற்கைக்கு எத்தனை அழகு ஜெய்!''

''ஆமாம்!'' என்று அவளை ரசித்துச் சொன்னான் அவன். பூங்காவின் மத்தியில் ஒரு குளமும் உண்டு. அந்தக் குளத்திற்கு நாலா பக்கம் இருந்தும் ஓடி வந்து நீர் வந்து விழுவது தனி அழகு!

''ஜனனி..''

''ம்...!''



''வா.. அந்த பாலத்தின் மேல் நடக்கலாம். புது அனுபவமாய் இருக்கும்.'' அவளிடம் ஒரு ஐஸ் கிரீம் திணித்து விட்டு. பொறி பாக்கட்டுகளை எடுத்துக் கொண்டு நடந்தார்கள். அழகு வாய்ந்த ஒரு சில பாலங்களை அந்தக் குளத்தின் மீது அமைத்து இருந்தனர்.

அப்பாலத்தின் மீது நடந்து செல்லும் பொழுது ஊஞ்சலாடுவது போல் பாலம் அசைந்தாடும்.

இருவரும் அருகருகே நிற்க பாலம் ஆடும் சமயம் இருவரின் உடலும் ஒருவரையொருவர் உடலில் இடித்துக் கொள்ள தயக்கமும், வியப்புமாய் தவித்தாள், அங்குள்ள சிறுவர்கள் துள்ளி குதித்தோடும் பல வண்ணமான மீன்களுக்கு தின்பண்டங்களை வீசினார்கள்.

ஜெய்யும், ஜனனியிடம் பொறியைத் தந்தான். ஒரு குழந்தையின் குதூகலத்தோடு அவள் பொறியை வீசியெறிவதும், மீன்கள் கூட்டம் கூட்டமாய் வந்து பின் கலைவதையும் கண்டு அவள் ரசிக்க இவனோ அவளை பார்வையாலேயே விழுங்கினான்.

''ஏய்.. ஜானு?''

''ம்..!''

''சாப்பிடலாம் வா... பசிக்கலையா?''

மனதின்றியே அந்தப் பாலத்தை விட்டு நகர்ந்தாள்.

''ஜெய் வாழ்வில் பல விஷயங்கள் நம் ரசனைக்கு வடிகாலாய் அமைந்து விடுகிறது இல்லையா?''

''ம்... புத்தகம், பூக்கள், இயற்கை மழலைச் சிரிப்பு அதன் கனிவான வார்த்தைகள், தேமதுரத் தமிழ், தாய்மையின் பாசம், காதலின் வருடல், எல்லாமே ரசனைதான்!''

''நல்லா பேசறீங்க ஜெய்!''

''நான் இந்தியன் பேச முழு சுதந்திரமும் உண்டு. அதில் சுவாரஸ்யமும் உண்டு.''

இருபுறமும் பூக்களையே வேலியாய் கொண்டு அமைக்கப்பட்ட பாதையில் நடந்தனர் இருவரும்! ஆங்காங்கே விலங்குகள் முயல், வீடு போல் சில உருவம் போல் அழகாய் செதுக்கப்பட்ட புல் சிற்பங்கள்.

கூடாரம் போல் அமைக்கப்பட்டு இருந்த குடிலில் அமர்ந்தனர் இருவரும். சூப்பை பருகியபடி டிபனையும் முடித்தனர்.

அருகில் சிறிய அல்லிகுளம். பச்சை நிறம் கொண்ட தடாகத்தில் வட்டமான .... மிதக்கும் தாமரை மலர்கள், அல்லி இன்னபிற பூக்கள் என ரம்மியமாய் இருந்தது.

''குளம் ரொம்ப அழகு!''

''சிலநேரம் இயற்கையைக் காட்டிலும் செயற்கையும் கண்ணைக் கவருகிறது''

''பெண்களின் ஒப்பனையைப் போலவே!''

'' ஆண்களுக்கும் பியூட்டி பார்லர் உண்டு தெரியுமா?''

''சரியான வாயாடி நீ! எல்லாக் கேள்விகளுக்கும் ஒரு பதில் வைத்திருக்கிறாய்?!''

நேரம் இருளைப் போர்த்தத் தொடங்கியது. இருவரின் விழிகளும்

நேரமின்றி கலந்து தழுவின.

''ஜானு..''

''ம்...''

''என்னையும் அறியாமல் சில உணர்வுகள் என்னை ஆட்கொண்டு இருக்கிறது. அவை என்ன வென்று இனம் பார்க்க முடியவில்லை.!''

''புரியலை ஜெய்?''

''சொல்லிப் புரியாது. அனுபவ பூர்வமாய் உணர வேண்டும்.''

அமைதியாய் சாலையோரம் நடந்து வந்தார்கள். ஒருவரின் மேல் ஒருவர் தோள்கள் உரசின. விரல்கள் உரசின. கைகள் இரண்டும் பற்றிக் கொண்டன. வெகு நேரம் அக்கைகள் பிரியவில்லை.

மவுனமே அங்கு நிழலாய் மோதியது. அமைதி கலைக்காமலேயே வீடு வந்து சேர்ந்தார்கள். அறைக்கு வந்து ஒரு சிறிய குளியல் போட்டவள் அவன் வாங்கித் தந்த ஆடைகளை ஆசையோடு வருடினாள்.

''ஜெய்... ஜெய்!'' மனம் ஜெபம் போல அவனின் பெயரையே உச்சரித்தது.

யாரிவன் இரண்டு முழுநாள் கூட ஆகவில்லை. அவனை சந்தித்து! சொல்லப் போனால் 'ஜெய்' என்ற பெயரைத்தவிர வேறு எந்த விவரமும் அவனைப் பற்றித் தெரியவில்லை.

ஆனால், அந்த உயிர் ஊடுருவும் பார்வையும், உரிமையான உரசலும் இன்று கையைப் பற்றி நடந்ததும் அவனிற்குள்ளும் என்னிடம் ஈடுபாடு உண்டென்பதைத்தானே உயர்த்துகிறது. ஏதேதோ உணர்வுகள் இருவரையும் ஆட்கொண்டு உறங்க விடாமல் தடுத்திருந்தது.

மறுநாள் காலையின் விடியலே ஆனந்தமயமாய் இருந்தது. குளித்து முடித்து அவன் வாங்கித் தந்த வெள்ளை நிற உடைகளை அணிந்திருந்தாள்.

கண்ணாடியில் அழகாய்த் தோன்றியது அவள் உருவம்! காண்பவை எல்லாம் அழகாய்த் தோன்றிட காரணம் காதலே! என்று எங்கோ படித்த நினைவு! கதவு திறக்கும் ஒலிகேட்டு அவனோ என்று பாலாய் பொங்கிய மனம் உள்ளே சரசு நுழைந்தாள்.

''வா. சரசு!''

''அம்மா எழுந்து விட்டீர்களா? பட்டணத்துகாரங்க தாமதம் ஆகுமின்னு நினைச்சேன்.''

''நம்ம தலைவருக்கு சின்னபுத்தி அதிகம்ன்னு எதை வெச்சு சொல்றே?''

''சின்ன சின்ன லெவல்லயே தப்பு பண்றாரே...''

-வெ.ராம்குமார்,
வேலூர்.





அவள் மவுனமாய் காபியைப் பருகியபடி ''அவர் எங்கே?''

''யாரோ போன் பண்ணாங்க! வெளியே போயிருக்கு?!! ஏம்மா?''

''இல்லை, சும்மாதான் கேட்டேன். கல்யாண நாள் கொண்டாட்டம் எல்லாம் நல்லபடியா முடிந்ததா?!''

சரசு உடலைக் கோணிக் குறுகி...''ம்.. என்றாள்.

''உங்க கல்யாணம் எப்போ ஆச்சு?!''

''மூணு வருஷம்.. அது ஒரு பெரிய கதைம்மா!''

''சொல்லேன் சரசு கேட்கலாம்.''

''டிபன் சாப்பிட்டு..''

''ஜெய் வரட்டுமே! அதுவரையில் நாம் பேசிக் கொண்டு இருப்போம். உன் பேச்சு எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு..''

''அப்படின்னா சரிம்மா!''

''நாங்க தொதவர்கள் இனத்தை சேர்ந்தவங்க! எங்க சொந்த ஊர் மூக்கறுத்திச் சிகரம்!''

''என்னது? பெயரே வித்தியாசமா இருக்கே!''

''ஆமாம்மா! காதல் இல்லாத இடமேது. இந்தப் பெயர் வரக்காரணமும் அதுதான்!''

''ஒரு பொண்ணு அதாவது எங்க ஜாதிய சேர்ந்தவங்க வெளிப்படுத்தி ஆடவர் ஒருவர் மேலே காதல் கொண்டாளாம்! அவரும் இவளோட அழகில் மயங்கியனாராம்!''

''இருவருக்கும் ஒருவரோட மொழி மற்றவருக்கு புரியாவிட்டாலும் காதலைப் புரியவைக்க மொழி தேவை இல்லை! அப்போ தொதவர்கூட்டத் தலைவர் பார்த்து அந்தக் காதலனை அடித்து துரத்திவிட்டு, அந்த பெண்ணின் மூக்கை அறுத்து தண்டனை தந்தார்களாம்?!''

''கடவுளே? எத்தனை கொடூரம்?!''

''அதுக்குப்பிறகு அவள் யாரிடமும் பேசுவதில்லை. அந்த சிகரமே கதியென்று கிடந்தாள். அப்புறம் என்ன ஆனாளோ தெரியலை? அப்போது இருந்து அந்த சிகரத்திற்கு மூக்கறுத்தி சிகரம் என்று பெயர்''

''பாவம்'' முகம் அறியா அவளிற்காய் மனம் கனிந்தது ஜனனிக்கு!

''சரி! உங்க கதையை சொல்லுங்க?!''

''அவரு எங்க அப்பாகுகிட்டே வேலை கேட்டு வந்தாருங்க! தூரத்து உறவுங்கிறதால அப்பாவும் இங்கே வேலை வாங்கித் தந்தாரு?! அதுக்குப் பிறவுதான் இந்த வீடு தம்பி கைக்கு வந்தது. அப்போ அவங்க குடும்பமே ஒருவாரம் வந்து தங்கினாங்க!''

''அப்போ இங்கே ஒத்திகைக்கு ஒரு பொம்பிளை இருந்தா நல்லா இருக்குன்னு சொல்ல நான் வந்தேன். நானும் அவரும் தினமும் சந்திக்கும் சந்தர்ப்பம். என்ன எப்படின்னு? தெரியலை..! பார்வையிலயே அன்பு வளர்ந்திடுச்சு.!''

''நாங்க இரண்டு பேரும் ஒரு வார்த்தையும் பேசிக்கலை. ஆனா, எங்க மனசு ஒளி இல்லாம விருப்பத்தை சொல்லிடுச்சு! வெறும் 7 நாளில் அவரை என்னவராய் நான் ஏற்றுக் கொண்டேன்! கடைசி நாள்

நான் இங்கே இருந்து போகும் போது அழுகையா வந்தது''

''இனி அவரை தினமும் பார்க்க இயலாதுங்கிற நினைப்பு பாறாங் கல்லாய் மனதை அழுத்துச்சு! முதல் முறையா அவர் முன்னாடி போய் நின்றேன். விடை பெற முடியலை! அவருடைய கண்களும் கலங்கிப் போய்தான் இருந்தது.''

''ஏதும் பேசாமல் கையைப் பிடித்து அழுத்தினார். வீட்டுக்குப் போய் மனசு நிம்மதியே இல்லை. எதையோ முழுசா இழ்ந்திட்டா மாதிரி ஒரு உணர்வு அழுதழுது வீங்கின முகம் காலையிலே இவர் அப்பா முன்னாடி!'' ''என்னைப் பெண் கேட்டு நிக்குறார்?''

''அப்புறம்?''

''அப்புறமென்ன கல்யாணம் தான்!''

''ஏன்? சரசு எதுவுமே பேசாம காதல்ன்னு எப்படி தோணிச்சு!''

''மொழிங்கிறது புரியாத விஷயங்களுக்குத் தான். அன்பிற்கு இல்லை. ஆழமான பார்வையும், அன்பான வருடலுமே காதலை உணர்த்திடுமே!''

''என்ன இரண்டு பேரும் தீவிரமான டிஸ்கஷன்'' ஜெய்யின் குரல் கேட்கவும், சுவிட்ச் போட்டாற்போல் எழுந்தாள் ஜனனி!

''வாங்க தம்பி! சாப்பிட! கூப்பிட்டேன். நீங்க வந்ததுமின்னு சொல்லிட்டாங்க! அதான் தம்பி பேசிக்கிட்டு இருந்தோம்.'' சரசு நாதுக் காய் நகர்ந்தாள்.

''எங்கே? போயிட்டு வர்றீங்க ஜெய்?''

''ஒரு பிரண்டைப் பார்க்க ஜானு! வா பசிக்குது!''

''ச்சீ! எத்தனை அழகாய் டிரஸ் பண்ணியிருக்கேன். நல்லாயிருக் குன்னு சொன்னா என்னவாம்?'' அவள் முணுமுணுப்பதை கண்டு குறும்புடன்.

'' பார்.. நீயும் பசியில் இருக்கே அதான் வார்த்தை கூட வெளி யில் வரலை?''

''எனக்கு ஒண்ணும் பசியில்லை?''

''விஜய் ஸ்டேஷனில் இருந்து போன் பண்ணினான். அவன் கூடவே உன் அப்பாவும்.''

''அப்படியா? அவர் ஏன் அங்கே போனார்?''

''தெரியலையே... வா!''

''ஜெய்..''

''என்ன ஜானு?''

ஏன் அழைத்தோமென்று அவளிற்கும் தோன்றவில்லை. ஆனால், இமயமென இதயம் கனத்தது.''

''ஜானு!''

''ம்...!''

''அப்பா வந்ததும் கிளம்பிடுவே இல்லை. அப்புறம் என் ஞாப கம் இருக்குமோ இருக்காதோ?''

''எந்த சூழ்நிலையிலும், எந்த நிலையிலும் உங்களை மறக்கவே முடியாது ஜெய்!''



அவள் கண்களைச் சந்திக்க இயலாமல் பார்வையைத் தாழ்த்தி னான் ஜெயநந்தன்.

''ஜானு. இது ஒரு சின்னப் பரிசு!'' அவன் நீட்டிய சிறிய பார்சலை பெற்றுக் கொண்டாள்.

''என்ன இது?''

''வீட்டுக்குப் போய் பிரி ஜானு பிடிச்சிருந்தா சொல்லு..''

''ம்..!''

''அய்யா உங்களைப் பார்க்க இரண்டு பேர் வந்திருக்காங்க.''

''வர்றோம் சரசு''

''ஜானு அவங்க வந்திட்டாங்க!''




மீள முடியாத பார்வைகள் பேச முடியாத மவுனம் கண்கள் குளமாக தயாராய் இருக்க, உடல் எங்கும் சோர்ந்து நடக்கத் திராணியில்லா தவர்களைப் போல் நடந்தனர் இருவரும்.

ஜெய் மனம் பலமுறை அவள் பெயரைக் கூறி ஓலமிட்டது.

ஜீமே இன்ஸ்பெக்டர் விஜய்யும், வயதான ஒரு பெரியமனிதரும் அவரை எங்கோ பார்த்த நினைவு ஜெயநந்தனுக்கு!

''ஆனால், அவர் ஏன் அவனை அப்படி முறைக்கிறார்?!'' மேலும் அவனை யோசிக்க விடாதபடி, ''அப்பா'' எனும், கூக்குரலோடு அவ ரைக் கட்டிக் கொண்டாள் ஜனனி.

''ஆர் யூ ஆல்ரைட் டியர்?''

''எஸ் டாடி.. ஏன் அப்படி கேக்குறீங்க? ஆனா ஜெய் இல்லைன்னா கண்டிப்பா ஏதாவது நடந்திருக்கும்.''

''கடத்தியவர்களே காப்பாற்றும்போது பாதுகாப்பிற்கு பஞ்சம் இருக்காதும்மா?!''

தந்தையின் பேச்சு புரியவே சற்று நேரம் எடுத்தது ''அவனுக்கு என் னப்பா சொல்றீங்க?''

''இங்கே உனக்கு நடந்த பிரச்சனைக்கு காரணமே இவன்தான்.''

ஜெயநந்தன் அதிர்வில் இருந்து மீண்டவனாய் ''இதென்ன பழி?''

''பழியில்லை உண்மை!''

அப்போது இன்ஸ்பெக்டர் விஜய் பேசத் தொடங்கினான்.

''ஜெய், தன் மகளைக் காணோம் என்று இரண்டு நாள் முன்பு அதா வது ஜனனியிடம் இருந்து எந்த தகவலும் இல்லாத 8 மணி நேரத்தில் அவருக்கு ஒருபோன் வந்ததாம்! உங்க மகளைக் கடத்தி விட்டோம் என்று?! கூடவே டிமாண்டும்.!''

''டிமாண்டா.. ஜனனி''

''ஆமாம்மா..! உங்க மக வேணுன்னு நினைச்சா இப்போ கைவசம் இருக்கிற புராஜக்டை விட்டுத் தரணுமின்னு?''

''அதுக்கும் என்மேல் பழி போடறதுக்கும் என்ன சம்பந்தம்.''

''நான் சொல்றேன் ஜெய்?' இங்கே நான் அரெஸ்ட் பண்ணினவனும் ஜனனியை கடத்தச் சொன்னது ஜெய்கிராபிக்ஸ் ஜி.எம்.ன்னு சொல்றான்.''

''என்னது? நானா?''

இப்போது ஜனனியுமே அதிர்ந்து தான் போனாள்.

''விஜய் எங்கேயோ தப்பு நடந்திருக்கு! எங்களுக்கு போட்டி கம்பெனி சரயா கிராபிக்ஸ்.''

''அந்த மீட்டிங்கில் இவரை நான் சந்தித்து இருக்கிறேன். ஆனால், ஜனனி அவருடைய மகள் என்றே எனக்குத் தெரியாது.''

''பொய், தொழில் விஷயங்களை பிங்கர் டிப்ஸில் வைத்திருப்பவன் என்று உன்னை எத்தனையோ பேர் பாராட்டுகிறார்கள்! போட்டி கம்பெனி பற்றி தெரியாது என்றால் நம்பிவிட நான் ஒண்ணும் முட்டாள் இல்லை.''

''ஜெய்! இவர் உன்மேல் கம்ப்ளைண்ட் பண்ணியிருக்கார்.''

''இது அநியாயம். என் தரப்பு விஷயத்தையும் கேளுங்கள்.'

''இந்த காண்டிராக்ட்டை எப்படியும் பிடித்தே தீருவேன்னு உங்கப்பா எங்கிட்டே சவால் விட்டது தெரியும்தானே! அப்பன் மிரட்டினா பிள்ளை கடத்துறான் நல்ல குடும்பம்!''

''ஸார்! வயசிலே பெரியவர்... நீங்க வார்த்தைகளை யோசித்து பேசுங்க? உங்களுக்கு முன்பே தொழிலில் காலூன்றியவர் என் அப்பா! தப்பு செய்து அதை தக்க வைக்கும் பழக்கம் எங்களுக்கில்லை.''

''ஜெய்...!'' ஜனனி தவித்தாள்.

அவன் அவளருகில் வந்தான். ''சொல்லு ஜனனி நானே உன்னை கடத்தச் சொல்லி இருந்தால் நானே ஏன் பாதுகாக்க வேண்டும்? யாரோ முன்பின் அறியாத பெண் ஆபத்தில் சிக்கிக் கொண்டாள் என்று விஜய்யிடம் ஏன் கூற வேண்டும்? இந்த இரண்டு நாளில் உன் உடைமைக்கோ வேறு எதற்கோ பாதிப்பு வந்ததா?!''

இல்லையென்பது போல் தலையசைத்தாள்.

''அங்கேதானே உங்க சாமர்த்தியம் தெரியுது? ஜனனிம்மா, இவங்க உன்னைக் கடத்தி இரண்டு மூன்று நாள் தாமதப்படுத்தியதால், நீ கான்டிராக்டில் சைன் பண்ண முடியாம போய்விட்டது. சரியான ரெஸ்பான்ஸ் இல்லைன்னு ஆர்டர் கேன்சல் ஆகி 50 லட்சத்திற்கும் மேல் உள்ள புராஜக்ட் அவங்க கம்பெனிக்குப் போயிட்டது.''

''அப்பா இது உண்மையா?''

''ஆமாம்மா! உன்னை திசை திருப்பவும். நேரம் கடத்தவும்தான் இவன் இப்படி நாடகம் ஆடியிருக்கிறான். பிள்ளையையும், கிள்ளி விட்டு தொட்டிலையும் ஆட்டி இருக்கிறார்கள்.''

''நோ... இல்லை ஜனனி! அவர் சொல்வதை தயவு செய்து நம்பாதே! எந்த ஒரு முன்காரணம் வைத்துக் கொண்டும் நான் உன்னை என்னுடன் வைத்திருக்கவில்லை.''

''நம்பாதே ஜனிம்மா! இவனால்தான் உன் கனவு நீ எடுத்துக்



கொண்ட புராஜக்ட் ஹோம் ஒர்க் எல்லாமே வீணாப் போச்சு!''

அவள் குழப்பமாய் அமர்ந்து விட்டாள். யாரை நம்புவது? அப்பா ஆதாரத்துடன் சொல்லும் போது நம்பாமலும் இருக்க முடியவில்லை. ஆனால் ஜெய்யின் ஒவ்வோர் அசைவிலும் அன்பும், அக்கறையையும் மட்டும்தானே உணர்ந்தாள். அதில் வஞ்சம் ஒளிந்திருக்கவில்லையே?! கடவுளே..! என்னென்ன கற்பனைகள் வைத்திருந்தேன்.

அவள் யோசனையில் இருக்கும் போதே ''இன்ஸ்பெக்டர் விஜய்! அவனை கைது பண்ணுங்கள்?! '' என்றார் தந்தை.

அதற்கு மேல் பொறுக்க இயலாமல், ''அவர் மேல் தவறே இருந்தாலும் கைது செய்வது முடியாத விஷயம். சரியோ தப்போ ஆராயும் நிலையில் நானில்லை? அவர் நல்லவரோ, கெட்டவரோ இந்த இரண்டு நாளில் என்னை எந்தக் குறையும் இல்லாம பார்த்துக்கிட்டார். அதற்கு நன்றி கடனாவாவது இருக்குட்டும் நான் அவர்மேலே கேஸ் தரப்போவது இல்லை.''

''ஜனிம்மா! இந்த தடவை விட்டா மறுபடியும் இதே தவறையே செய்வார்கள்.''

''இல்லேப்பா எல்லாத்தையும் விட, பெரிய தண்டனை மன்னிப்பு! விடுங்க, பெண்ணை வைத்து காரியம் சாதிக்க எண்ணிய போதே அவங்க தோத்து போயாச்சு! இந்த வெற்றி நாமே பாவப்பட்டு விட்டுத்தந்ததா இருக்கட்டும்!''

''ஜனனி'!'' என்றான் அழுத்தமாய்?!

''பெற்றவர் என்பதால் என்ன சொன்னாலும் நம்பிட நீயென்ன கிளிப்பிள்ளையா? இது என் திறமைக்கு கிடைத்த வெற்றிதானே தவிர, நீ பிச்சையிட்டு பெறவேண்டிய அவசியம் இல்லை?!''

''இப்போதுதான் எனக்கு உண்மை புரிகிறது. இப்படி என்மேல் பழிபோடத்தான் நீ என் காரில் மயங்கியது போல் நடித்து இருக்கிறாய்? ச்சே! புராஜக்டை உங்கள் வசம் திருப்பிட பெண்ணை எந்த எல்லைக்கும் அனுப்புவது உன் தந்தைதான்! நாங்க இல்லை. இதுவரையில் உங்களை நான் எதிரியாய் பாவித்தது இல்லை?! ஆனால், இனி எந்த புராஜக்ட்டும் உன் வசம் கிடைக்க நான் விடப்போவது இல்லை!?''

''பெஸ்ட்ரோல் தருகிறேன் என்று கூட்டிப்போன டைரக்டர்...''

''மேலே சொல்லு''

''பெட்ரோல் போடும் ஊழியரா நடிக்க வைத்து ஏமாற்றிவிட்டார்!''

-சிவ.ராமலிங்கம், தூத்துக்குடி.



சிலிர்த்துக் கொண்டு திரும்பினாள் ஜனனி '' ஜெயநந்தன். இன்று உங்களை மன்னிப்பதே உங்கள் வீட்டில் ஒரு வேளை சாப்பிட்டேன் என்பதால்தான்! இனி நான் விட்டுத்தரப் போவதில்லை! நீங்களா? நானா? என்று பார்த்துவிடலாம்.

இத்தனை மோசமாய் பேசுவீர்கள்? என்று நான் எதிர்ப்பார்க்கவில்லை! வாங்கப்பா போகலாம். இனியும் இங்கே நிற்கக் கூடாது'' அவள் தந்தையுடன் வேகமாய் வெளியேறினாள். திரும்பிக் கூட பார்க்கவில்லை.

''விஜய் பிடிபட்டவனை நல்லாவிசாரி?! எனக்கு உண்மை தெரியணும்...! அப்படியே அப்பாவை பார்த்துட்டு பேசறேன்.''

''பீல் பண்ணாதேடா உன்னையும், அப்பாவையும் பற்றி எனக்குத் தெரியாதா? அப்படியே அவங்க கேஸ் கொடுத்தாலும் நானே பர்சனல் ஜாமீன் தந்திடுவேன்டா!''

''தேங்க்ஸ்டா! நான் ஊருக்கு கிளம்பறேன்.''

ஜெய் மனம் முழுவதும் பெரும் கொந்தளிப்பு! ஜனனி. ஜனனி ஏன் இப்படி பேசறே? மனதை குத்தி ரணமாக்கி விட்டாயே ஏன்? எத்தனை இன்பமாய் உன்னுடன் பொழுதுகள் கழிந்தன! ஆழமான பார்வையிலேயே என் அன்பும் உள்ளமும் புரிந்து இருக்குமே? வாழ்வின் ஆதாரமே நம்பிக்கைதானே! என்மேல் இத்தனை அவநம்பிக்கை வருமளவு எந்த செய்கை இருந்தது?

எதையும் ஆராயாமல் என்மேல் எப்படி கோபப்படலாம்? யாரிவள் வந்தாள், போனாள். அவளின் விருப்போ வெறுப்போ எனை இந்தளவிற்கு பாதிக்கும்படி ஏன் செய்ய வேண்டும். மனம் உலைக்களமாய் கொதித்தது.

அதற்கு மேல் நேரம் கடத்தாமல் உடனே ஊர் திரும்பினான்.

வழக்கமாய் கலகலப்பாய் இருக்கும் வீடு நிசப்தமாய் இருந்தது. காற்றில் மிதந்த மகிழம்பூவின் வாசனை எத்தனை இதம்! ஆனால், அதை ரசிக்கும் மனநிலை இப்போது இல்லை ஜெயநந்தனுக்கு!

அதிர்ப்பட்டது அம்மாதான்!

''வாப்பா...! என்னடா புதன்தான் வருவதாய் சொன்னே இப்பவே வந்திட்டே?!''


''அம்மா அப்பா எங்கே?''

''மாடியில் தம்பி! நீ போ நான் இருவருக்கும் காபி கலந்து வர்றேன்.'' அந்த பேச்சை காதிலேயே வாங்காமல் வேகமாய் நகர்ந்த மகனை வியப்பாய் கண்டார் அந்தத்தாய்!

எப்போதும் வெளியூர் சென்று வந்தால், குழந்தைபோல் காலைச் சுற்றி வரும் மகன் இன்று அவசரமாய் குதித்தோடும் காரணம் என்னவாய் இருக்கும் என்று யோசித்தபடியே தட்டில் இரண்டு மூன்று முறுக்கு, சீடைகளை எடுத்து காபியுடன் மாடியேறிட தந்தை மகனின் காரசாரமான விவாதம் கேட்டது.

''கண்ணா எனக்கு எதுவுமே தெரியாதுடா! சந்திரன்கிட்டே போனில் பேசியது உண்மை. ஆனால், வேறெதுவும் நான் செய்





யலை.''

''அப்போது வேறுயாரு? ஜெய்கிராபிக்ஸ் அப்படின்னு அழுத்தந் திருத்தமாய் அவன் ஏன் சொல்லணும்? எனக்குத் தெரியாம நம்ம கம் பெனிக்கு வேறே யாராவது எம்.டி. இருக்காங்களா?''

''என்னங்க பிரச்சனை?''

''ம்... உம்பிள்ளை துப்பறியும் சாம்பு வேலை பார்த்திருக்கான். ஆனா ஆனா உண்மை எதையும் கண்டுபிடிக்கலை.''

''நான் சொல்றேம்மா!'' ஜெயநந்தன் நடந்த அனைத்தையும் தாயி டம் விவரிக்க.

''அடக்கடவுளே! இப்படி ஒரு நம்வீட்டில் யாரும் செய்ய நினைத்து கூட இருக்க மாட்டார்களே தம்பி அப்பா சொல்வதைக் கேள்.''

''ஜெய் நமக்கும் அதே வயசுள்ள பொண்ணு இருக்கா. ஒரு பெண் ணைக் கடத்தும் அளவுக்கு அத்தனை கேவலமானவன்னா என்னை நினைக்கிறே?''

''அய்யோ அப்பா நான் உங்களை சந்தேகப்படலை. ஆனா எங் கேயோ தப்பு நடந்திருக்கு?''

''கவலைப்படாதே நாமே கண்டுபிடிக்கலாம் அதற்கு முன்பு நடந்த வைக்கும். நமக்கும் எந்த தொடர்பும் இல்லைன்னு நான் அவர் கிட்டே சொல்லிட்டு வரேன்''

கிளம்பியவரைத் தடுத்தான் மகன் ''வேண்டாம்ப்பா. எந்த விளக் கத்தையும் புரிந்து கொள்ளும் மனநிலையில் தந்தையும், மகளும் இல்லை?! விடுங்க, தப்பு நம்ப பக்கம் இல்லை. உண்மையை நெடு நாள் மூடிமறைக்க முடியாது. அது ஒருநாள் வெளியே வந்தே தீரும் அவங்களே உணரட்டும்.''

''சரிப்பா அலுப்பா வந்திருப்பே, போய் குளி நான் கொஞ்சம் வெளியே போயிட்டு வரறேன்.''

''அப்பா நம்ம பேர்ல பழிபோட யாரோ காத்து இருக்காங்க! அத னால நாம கவனமா இருக்கணும்!''

''ம்...!'' தலையசைத்தபடி கிளம்பினார் தந்தை.

''ஊரில் எல்லோரும் மது அருந்துகிறார்கள் என்பதற் காக நீயும் குடிக்கணுமா?''

''நீதானேம்மா ஊரோடு ஒத்து வாழணும்ன்னு அறி வுரை சொன்னே!''

-சிவ.ராமலிங்கம், தூத்துக்குடி





மகனின் தலையை வாஞ்சையோடு தடவினார் தாய்! ''அமைதியா இரு கண்ணா! நம்மை உணராதவங்க உதாசீனப்படுத்தினா அதை பெரிசா எடுக்கக் கூடாது. எல்லோருக்கும் எல்லா நேரத்திலும் நாம நல்லவங்களா இருக்க முடியாது. வாழ்க்கையை அதோட போக்கிலே விடணும். பேசாம ரெஸ்ட் எடு! அப்புறம் எல்லாம் சரியாயிடும்! வித் யாவோட கல்யாண வேலை தலைக்கு மேலே இருக்கு அதெல்லாம் நீதானேப்பா பார்க்கணும்?''

''சரிம்மா!'' தாயின் அரவணைப்பில் சிறிது கண்ணை மூடினான் ஜெயநந்தன். உலகின் எங்கே உறங்கினாலும் மனம் அமைதியே இழக்க வாய்ப்பு உள்ளது. ஆனால் தாயின் மடிக்கும், அன்பு மனைவியின் மடிக்கும் மட்டும் கவலைகளை மறக்கடிக்கும் சக்தி உண்டு. பெற்ற தாய்க்கு பிறகு குழந்தையாய் மனைவியிடம் சரணடைகிறான் ஆண்.



''அய்யா.. அய்யா.. !'' நாதனின் குரலில் பழைய நினைவுகளில் இருந்து மீண்டான்.

''என்ன நாதா?''

''அய்யா புறப்பட நேரமாகிடுச்சு. அதனால தான் உடம்பு டயர்டா இருந்தா நாளைக்கு பிர யாணத்தை ஒத்திப் போடலாம்.''

''வேண்டாம் நான் புறப்படறேன், ஜெயநந்த னின் மொபைல் அப்போது அழைத்தது. ''தம்பி சுரேஷின் எண்.''

''சொல்லுடா.?!''

''அண்ணா ஒரு முக்கியமான விஷயம். உங்ககிட்டே பர்சனலா பேசணும்.''

''என்ன விஷயம்?!''

''என் லைப்மேட்டர். நீ மட்டும்தான் இதில் உதவி செய்ய முடி யும். நான் ஒரு பெண்ணை விரும்பினேன். அவங்க வீட்டிலேயும் பிரச் சனை அதனால நான்..! அவளை ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிகிட் டேன்.''

''என்னடா சுரேஷ் பேசுறே?''

''உண்மைதான் அண்ணா...!''

''சுரேஷ் நீ அப்பாகிட்டே பேசி இருந்தா அவரே அந்த பொண்ணு வீட்டுக்குப் போய் பேசிடுவாரே! அதை விட்டுட்டு, சரிநான் வரும் வரையிலாவது காத்திருக்கலாமே?''

''அண்ணா சூழ்நிலை அப்படி வேற வழியில்லை நீ உடனே வாண்ணா.''

''சரி நான் சென்னை வந்ததும் எங்கே இருக்கேன்னு சொல்லு''

''ரஞ்சன் வீட்லே?''

''சரி..!''

செல்லை அணைத்துவிட்டு, தலையைப் பிடித்துக் கொண்டான்.

'இருக்கிற பிரச்சனை போதாதுன்னு இவன் வேறயா? கடவுளே! இதை வீட்டிலே எப்படித் தாங்குவார்களோ?'

நேசன், பார்வதியொன்றும் பிள்ளைகள் மனமறியா பெற்றோர்கள் இல்லையே?

''இத்தனைக்கும் வித்யாவின் மனம் கூட காதல் திருமணம் தானே! மணமகன் ரவி தூரத்து உறவு, ஒரு திருமணத்தில் வித்யா கண்டு தந்தையிடம் பேச உடனே மணமுடித்து தரவில்லையா? இவனுக்கு மட்டும் ஏன் இந்த அவசரம்?

வித்யாவிற்கு இரண்டு மாதங்களுக்கு முன்புதான் திருமணம் நடந்தது. ரவிக்கு ஸ்டேட்ஸில் பெரிய நிறுவனத்தில் வேலை கிடைத்துவிட, அவளும் ரவியும் அமெரிக்காவிலேயே குடித்தனம் செய்யத் தொடங்கி விட்டனர்.

''இவனுக்கு மட்டும் ஏன் இப்படி பிரச்சனை. ஒருகணம் யோசித்தாலும், இவனுக்கு காதலிலாவது வெற்றி கிட்டியதே! மனம் கவர்ந்தவளையே மனைவியாய் அடைந்திருக்கிறான். அவனுக்கு என்ன சிக்கல் என்றாலும் அவனுக்கு உதவத்தான் வேண்டும்'' எனும் முடிவோடு கிளம்பினான் ஜெயநந்தன். இனி தன் வாழ்வில் எழப்போகும் மாற்றங்கள் பற்றிப் புரியாமல்!

வாழ்வில் நடப்பதை முன்னரே அறிந்து விட்டால் சுவாரஸ்யம் குறைந்து விடுமே!

ரஞ்சனின் வீடு! கனிமொழி, சுரேஷின் தோளில் சரிந்து கொண்டிருந்தாள்.

''அழாதேம்மா!''

''இல்லேங்க, அப்பாவோட கண்டிப்புக்கு பயந்து முடிவெடுத்து விட்டோம். கட்டாயம் எங்கப்பா இந்தக் கல்யாணத்திற்கு ஒப்புக்க மாட்டார். உங்க வீட்டிலேயும் என்ன நிலைமைன்னு தெரியலையே? எனக்கு பயமா இருக்கு சுரேஷ், நாம அவசரப்பட்டுட்டோமோன்னு தோணுது!

இரண்டு பேரும் இன்னமும் படிப்பை முடிக்கலை. நாம என்ன பண்ணப் போறோம்.''

'' என்ன கனி இது? உன் அப்பாவைக் காரணம் காட்டி கல்யாணம் பண்ணியே தீரனமின்னு சொன்னே? இப்போ பயப்படறியே? அண்ணாவை வரச் சொல்லியிருக்கேன். என் சைடில் எந்தப் பிரச்சனையும் வராது. அப்படியே வந்தாலும் உனக்காக நான் எல்லாத்தையும் தாங்கிப்பேன் கண்ணம்மா. ''

வாசலில் அரவம் கேட்டது. தம்பியைக் கண்டவுடன் மெல்லிய கோபம் எழுந்தது ஜெயநந்தனுக்கு! அருகிலேயே நனைந்த புறாவைப் போல நடுங்கிக் கொண்டு இருந்தவளைக் கண்டான். அவளின் மிரண்டு போன முகத்தைக் கண்டதும் வேறு ஏதோ தோன்றியது ஜெயநந்தனுக்கு!

தம்பியிடம் பார்வையைத் திருப்பினான். '' என்னடா காரியம் செய்து வைச்சிருக்கே? நாங்க எல்லாம் இல்லைன்னு முடிவே பண்



ணிட்டியா? ''

அவன் தமையனின் கைகளைப் பற்றினான். '' அண்ணா நீயாவது என் நிலைமையைப் புரிந்து கொள். ''

'' அப்படியென்னடா அவசரமான நிலைமை? ''

'' நானும் கனிமொழியும் மூணு வருடங்களா விரும்பறோம். படிப்பை முடிச்சிட்ட பிறகு இரண்டு பேரும் வீட்டிலே சொல்லி கல்யாணம் பண்ணிக்கிற மூட்ல இருந்தோம். ஆனா விஷயம் தெரிஞ்ச அவளோட அப்பா அவளை வீட்டு காவலில் வைச்சிட்டார். வேற வழியில்லாம நான் ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிகிட்டேன். ''

'' வீட்ல பேச வேண்டியது தானே? ''

'' மூத்தவன் நீ இருக்கும்போது எனக்கு கல்யாணம் பண்ணி வையுன்னு நான் எப்படி கேட்க முடியும்? நான் இன்னும் படிப்பை கூட முடிக்கலையே?''

'' லூசு மாதிரி பேசாதே சுரேஷ். நாம ஒண்ணும் அன்னாடங் காய்ச்சி இல்லே! நமக்குன்னு ஒரு ஸ்டேட்டஸ் இருக்கு. அவங்கப்பாவிடம் போய் பெண் கேட்டா ஏன் தர மறுக்கணும் இலகுவாய் நடக்க வேண்டியதை இப்படி இடியாப்ப சிக்கலா மாத்திட்டீங்களே?''

'' அப்பாவுக்கு மட்டுமில்லைன்னா நீயும் ஒத்துக்கமாட்டே! ''

'' ஏன்? ''

'' இவள் சரயா கிராபிக்ஸ் வீட்டு இரண்டாவது மகள். ''

'' என்னது? '' அவனின் அதிர்வு தெளியும் முன்னரே

'' தெரிந்து கொண்டே தெரியாததைப் போல் நடிப்பது உங்களுக்கு கைவந்த கலையாயிற்றே ''

தனது முதுகிற்கு பிற்பாடு ஒலித்த குரலைக் கேட்டவனின் மனம் வியப்பும் அதிர்வும் ஒரே நேரம் தோன்றியது.

ஜனனி! அன்று வார்த்தைகளால் காயப்படுத்தி விட்டு சென்ற பிறகு இன்று தான் முழுதாய் ஆறு மாதங்கள் கழித்து இன்றுதான் அவளைக் காண்கிறான்.

அவளிடம் நிறைய மாற்றங்கள் தெரிந்தன. ஆரம்பத்தில் இருந்த அன்பு கனிந்த பார்வையில்லை. விழிகள் குற்றம் காட்டின. நடையில் ஒரு நிமிர்வு. குரலில் கூட முன்பிருந்த குழைவு மறைந்து கம்பீரம் எட்டிப் பார்த்தது. இன்று சரயாவின் எம்.டி. அல்லவா?

''வீட்டோடு மாப்பிள்ளையாக வந்துட்டீங்களே உங்க அப்பா, அம்மாவை யார் கவனிப்பாங்க?''

''என் தங்கச்சி மாப்பிள்ளை வரப்போகிறார் அவர் வீட்டோடு இருந்து கவனித்துக் கொள்வார்.''

-சிவ.ராமலிங்கம், தூத்துக்குடி.



அத்தனை பெரிய கம்பெனியை நிர்வகிக்க இந்த நேர்ப்பு அவசியம் தான்! அவனிடம் இருந்து இரண்டு புராஜக்ட்டுகளை தடுத்தவள் அல்லவா? அவள் வளர்ச்சி சந்தோஷம் அளித்தாலும் மறுபடி அப் பேச்சு தன்னையே மட்டம் தட்டுவதாய் தோன்றிட அதே வேகத்தோடு திருப்பிக் கொடுக்க எண்ணினான்.

ஆனால் அவளோ மறுபடியும் தங்கையிடம் பொரிந்து கொண்டிருந்தாள்.

'' அக்கா நீ வரமாட்டேன்னு நினைச்சேன் ''

'' உனக்குத் தான் யாரும் வேண்டாம். ஆனால் என்னால் அப்படியிருக்க முடியாதே! ஏண்டி இப்படி செஞ்சே? அப்பா நமக்கு என்ன குறை வைத்தார்? ''

கனிமொழியின் கண்களில் நீர் வழிந்தது.

ஜனனி கோபமாய் சுரேஷின் புறம் திரும்பினாள். '' ஒண்ணும் தெரியாத பொண்ணை இப்படி கெடுத்து வைச்சிருக்கீங்க? உங்க குடும்பமே இப்படி பெண்களை வைத்து தான் காரியம் சாதிப்பீர்களா? அன்று அண்ணன் இன்று தம்பியா? ''

'' மேடம் தவறு செய்தது நானும் உங்க தங்கையும். எங்களைப் பேசுங்க! வேறு யாரையும் பேச வேண்டாம். ''

'' கோபம் வந்து புண்ணியம் இல்லை. நல்லக் குடும்பத்துப் பிள்ளை செய்யும் காரியமா இது? அது சரி முன் ஏர் எப்படியோ அப்படித்தானே பின் ஏரும் போகும். ''

'' நடந்ததைப் பேசி எந்தப் பலனும் இல்லை. இனி நடக்க வேண்டியதைப் பற்றிப் பேசலாம். ''

'' என்ன ஆரத்தி எடுத்து கொஞ்ச சொல்லுறீங்களா? ''

'' எடுத்தால் என்ன தப்பா? ''

'' என் தம்பிக்கு என்ன குறை? ''

'' உங்கள் தம்பி அது போதுமே''

'' நடப்பை பேசுங்கள் ஜனனி! வீணான வாக்குவாதங்கள் வேண்டாம். எனக்கும் பேசத் தெரியும். ''

இருவரின் வாக்குவாதத்தை தடுத்திட சுரேஷ் அருகில் வந்தான்.

'' நீங்கள் இருவரும் எங்களைப் புரிந்து கொண்டு துணை நிற்பீர்கள் என்றால் நீங்களும் பெரியவர்கள் போல் சண்டையிடுகிறீர்களே ''

'' வெயிட் சுரேஷ்! தவறு இருவர் பேரிலும் தான்! ஒருவரை ஒருவர் ஏமாற்ற யாரும் குழந்தை இல்லை! அம்மா, அப்பாவை வரச் சொல்லி இருக்கேன். ''

'' அண்ணா! ''

'' சுரேஷ் இது சின்னப்பிள்ளை விவகாரம் இல்லடா. பெரியவங்களை வைச்சு பேசறது தான் நல்லது ''

அதன் பிறகு அங்கு எவ்விதமான பேச்சும் எழவில்லை. ஆளுக்கு ஒருபுறம் அமர்ந்தார்கள்.

ஜனனி யாரும் அறியாவண்ணம் அடிக் கண்களால் ஜெயநந்தனைக் கண்டாள். அவளும் பிரிந்த பிறகு இன்றே முதன் முறையாக அவனை



சந்திக்கிறாள். வலிக்க வலிக்க அவனைப் பிரிந்து வந்த வேதனையையும் மறக்க இயலாமல் அதை வலுக்கட்டாயமாக தவிர்த்து வேலைகளில் முழுக்கவனம் செலுத்தி அவனின் இரு புராஜக்டுகளையும் பிடித்து ஓரளவு உயர்ந்தே இருக்கிறாள்.

ஆனால் இத்தனை நாளில் அவனும் இவளை சந்திக்க இயலவில்லை. இவனும் பேசிட முற்படவில்லை. நான் என்ன தவறு செய்தேன்? அவனே பிழை செய்தவன் என்று ஆதாரமாய் சுட்டிக்காட்டிய பிறகும் அதை எதிர்த்து நிரபராதி என நிரூபிக்க முயற்சிக்காமல் என்னையும் மறந்து ஒதுங்கியவனின் மேல் உள்ள கோபத்தையே தன்னையும் மீறி வெளிப்படுத்தினாள்.

தாய் இறந்த பிறகு அந்த குறையே அறியாமல் வளர்த்தவர். ஒவ்வொரு முறையும் அவர்களின் வளர்ச்சியைக் கண்டு மகிழ்ந்தவர்! அவரை மனம் நோக விடவே கூடாது. சிறு வயது முதலே அவள் மனதில் பதிந்து விட்ட எண்ணமிது!

பள்ளிப் படிப்பில் இருந்து கல்லூரி- பிறகு அவளின் தொழில் எல்லாமே அவருக்காக எடுத்துக் கொண்டது தான். அவர் ஒரு குழந்தையைப் போல!

நீலகிரியில் ஜெய்யிடம் மனதைப் பறிகொடுத்து விட்டு அதை சொல்லிட வேண்டும் என்று எத்தனை தவிப்பு தவித்தாள். அந்த அன்பை வெளிப்படுத்தும் தருணத்தை ஆவலோடு நோக்கியபோது தான் தந்தை உள்ளே நுழைந்தது. தேக்கி வைத்திருந்த தைரியம் காணாமல் போய்விட, ஆனால் பின்னர் நிலைமை தலைகீழாக அல்லவா மாறிப்போனது. ஜெய் அப்படிப்பட்டவன் இல்லை என்று அவள் மனது அடித்து கூறினாலும் தந்தையிடம் தெளிவு படுத்திட தகுந்த ஆதாரம் வேண்டுமே! அதை தரும் வரையில் தந்தை அவனை ஏற்கப்போவதில்லை!

சரி தன் மேல் உள்ள பழி நீங்க ஜெயநந்தனும் எவ்விதமான முயற்சியும் எடுக்கவில்லை! அப்படியெனில் என்மேல் அவன் கொண்ட நேசம் உண்மையில்லையோ? ஆனால் அந்தக் கண்கள் அதிலிருந்த நேசம் அது நிஜம் என்றது.

சில உள்ளுணர்வுகள் பொய் சொல்லாது. அது நடக்கும் வரையில் வந்த அன்பை நெருப்பினை விழுங்குவது போல் விழுங்கி விட்டாளே! இன்றும் உள்ளே நுழையும் போது அவன் குரல் உயிர் வரை ஊடுருவிப் பார்த்ததே? ஆனால் ஏற்கனவே இரண்டு புராஜக்டுகளை தடுத்த போதும். அவன் அவளைச் சந்திக்கவே இல்லை!

அவனிடம் தோன்றிய நேசத்தை மறைத்திடத் தானே இத்தனை கடினத்தன்மையை வார்த்தைகளிலும், பார்வையிலும் கொண்டு வந்து இருக்கிறாள்?

அந்த மட்டில் கனி எத்தனையோ தேவலாம்! மனதில் நினைத்தவனை இணைய முடியாது என்று புரிந்தாலும் அடைந்தே தீருவேன் என்று முடிவெடுத்து விட்டாள்! கட்டுப் போட்டாலும் அந்த தைரியம் நமக்கு வராது!

அவர்கள் காத்திருந்த நேரம் இருவரின் குடும்பமும் வந்து சேர்ந்தது. நேசன், பார்வதி தம்பதியினர் அதிகம் பேசவில்லை. ஆனால் தந்தை சீனிவாசனை அடக்குவதற்கு மிகவும் பிரயத்தனப்பட வேண்டியிருந்தது ஜனனிக்கு! பேச்சு பிறரையே குற்றம் சாட்டும் தொனியில் இருந்தது.

'' அப்பா கத்தாதீங்க! உங்க உடம்பிற்கு அது நல்லது அல்ல? ''

'' பார்த்தியா? உன் அக்காவை என் மீது எத்தனை அன்பு கொண்டு இருக்கிறாள்? அவளையும் உன்னைப் போலத்தானே வளர்த்தேன். என் மேல் கல்லைத் தூக்கிப் போட்டுட்டியே? ''

'' அப்பா அன்பு எனும் பெயரில் மனதைப் பூட்டிக் கொண்டு வாழ்ந்தால் தான் நல்ல மகளா அப்பா? ஒருதரமேனும் எங்கள் ஆசை பற்றி கேட்டு இருப்பீர்களா? ''

'' தவறு செய்தது நீ! அப்பாவை எதிர்த்து பேசாதே! மன்னிப்பு கேள்!'' தமக்கை அதட்ட,

'' இவள் மன்னிப்பு யாருக்கு வேண்டும்? வயசு தொழுப்பில் யாரோ பரதேசிப் பயலை இழுத்துக் கொண்டு வந்து நிற்கிறாள். ''

'' நிறுத்துங்க என்னைத் திட்டுங்க. அதுக்கு உங்களுக்கு உரிமையிருக்கு. அவரைப் பேச வேண்டாம். நானே வேண்டாம் என்று விட்டீர்கள். பிறகு நான் எக்கேடு கெட்டுப் போனால் உங்களுக்கென்ன? ''

'' என்ன பேசுகிறாய் நாயே! '' அவர் கனிமொழியை அடிக்கப் போக நேசன் தடுத்தார்.

'' விடுங்க சீனிவாசன்! கோபத்தை விடுத்து நிதானமா யோசியுங்கள். இதுநாள் வரையில் அவள் உங்கள் பெண்! இப்போ என் மருமகள் எப்போ என் மகன் தான் முக்கியம் என்று பேசினாளோ அவன் கையால் கழுத்தில் தாலியை வாங்கிக் கொண்டாளோ அன்றே அவள் எங்கள் வீட்டுப் பெண்ணாகி விட்டாள். இனி அவளை அடிக்க யாருக்கும் உரிமை இல்லை.'' நேசனின் அழுத்தமான பேச்சு யாரையும் பேச விடாமல் செய்தது.



''டாக்டர் எனக்கு நமீதா மாதிரி கொழு கொழுனு ஒரு குழந்தை வேணும்''

''அதுக்கு நீங்க நமீதாவை கல்யாணம் பண்ணிக்கணும்''

-ஆர்.தங்கராஜ்,
திருப்பூர்.

'' நல்ல பிரசங்கம் செய்யறேப்பா! பிள்ளைகளை பெத்து வளர்த்திருக்கே பாரு! எங்கே பெண்கள் கிடைப்பாங்கன்னு அலையறாங்க. ''

'' அப்பா இவர் கிட்டே பேசி எதையுமே புரியவைக்க முடியாது. '' சுரேஷ் கத்தினான்.

'' சுரேஷ் அவரிடம் மன்னிப்பு கேளு! பெண்ணை பெற்ற தகப்பனின் ஆதங்கம்! அதை தவறாக எடுக்கக் கூடாது. ''

'' சரிப்பா ''

'' உங்க மன்னிப்பு இங்கே யாருக்கு வேணும்? '' ஜனனியை இழுத்துக் கொண்டு சீனிவாசன் கிளம்பினார்.

'' ஒரு நிமிடம் சீனிவாசா நாம பெரியவங்க! குழந்தைகளோட வாழ்க்கை இது! வாழப் போறது அவங்க! நாமே ஏன் தடை சொல்லணும்? ஏதோ சூழ்நிலை தவறு செய்திட்டாங்க. அதை மன்னிச்சு மறக்கிறது தான் பெத்தவங்க பண்பு. உன் அந்தஸ்திற்கு குறையாத இடத்தில் தானே திருமணமும் நடந்திருக்கு. பிள்ளைகளை ஆசிர்வாதம் பண்ணு! '' அவரின் பண்பட்ட பேச்சு ஜனனியை யோசிக்க வைத்தது.




தந்தை மகன் இருவருக்குமே அமர்த்தலான பேச்சு! அதே நேரம் அழுத்தமான பேச்சு. சரசு சொன்னதைப் போலவே அன்பான குடும்பம் தான் ஒரு பார்வைக்கு கூட யாரும் அந்நியராய் தோன்றவில்லை. இந்த குடும்பத்திற்கு போக கனி கட்டாயம் கொடுத்து வைக்க வேண்டும். ஜனனி நினைவில் இந்த களிப்பு ஏற்பட்டது.

இப்போது எந்த பேச்சும் தந்தையை மேற்கொண்டு கோபப்படுத்தும் என்பதால் அப்பாவை அழைத்துச் செல்வதே உத்தமம் என்று '' ''அப்பா இனி அவள் உங்க மகள் இல்லை என்று சொல்லி விட்டீர்கள். இனியேன் வீணான வாக்குவாதம்? அது உங்கள் உடம்பிற்கும் நல்லதில்லை. '' தங்கையிடம் கண்களாலேயே விடைபெற்று நகர்ந்தாள்.

இறுதியாய் ஜெயநந்தனிடம் ஒரு பார்வையை செலுத்தி விட்டு நகர்ந்தாள். வீடு நிசப்தமாய் இருந்தது.

இருப்பினும், பெற்றவர்கள் என்ன சொல்வார்களோ என்று பயந்து பயந்து உள்ளே நுழைந்தவர்களை வாசலிலேயே நிறுத்தினார் நேசன்.

''அப்பா ''

'' இருடா கல்யாணம் முடிஞ்சு முதமுத வீட்டுக்குள்ளே வர்றே! ஆரத்தி தட்டுடன் வரட்டும்! '' அப்பா சொன்னது போலவே அம்மா தட்டுடன் வந்தார். பிறகு பாலும் பழமும் தரப்பட்டது. அதன் பிறகு நேசன் பேசத் துவங்கினார்.

'' சுரேஷ் நீ சின்னப் பையன். அந்தப் பெண்ணும் சின்னவ. ஆனா கல்யாண விஷயத்தில் அவசரப்பட்டுட்டீங்க. ''

'' சாரிப்பா ''

'' நடந்ததைப் பேசுவதில் எந்த அர்த்தமும் இல்லை. ஆனா எங்கிட்ட பேசியிருந்தா சிறந்த முறையில் நடத்தி இருக்கலாம். பிள்ளைகள் மனதை புரிந்து அவங்களுக்குத் தேவையானதைத் தந்திருக்கிறேன் என்று நினைத்தேன். ஆனால் அது தவறோ என்று தோன்றுகிறது. ''

நேசன் உண்மையான வேதனையோடு கூற '' சாரி மாமா! அது அவருடைய தவறில்லை. அதுக்கு நான் தான் காரணம்! பெத்தவங்க பிள்ளைகளை அவர்களின் உணர்வுகளை மதிக்கணும். ஆனா அப்பாவுக்கு வறட்டு கௌரவம் தான் முக்கியம். அவருடைய விருப்பத்தைத் தான் எங்க மேல அக்கறைன்னு திணிப்பார். தாயில்லாமல் எங்களை வளர்க்க அவர் பட்ட வேதனை கொஞ்ச நஞ்சமில்லை. அதனால பிடிக்கலைன்னாலும் சில விஷயங்களை நானும் அக்காவும் ஏத்துக்கிட்டோம். ''

'' ஆனா சுரேஷ் விஷயத்தில் அப்படி முடியலை! நம்ம இரண்டு பேமிலி தொழிலில் இருக்கும் போட்டியால் கட்டாயம் அப்பா சுரேஷை ஏற்க மாட்டார். அதனால நான் தான் அவரை கட்டாயப்படுத்தினேன் அங்கிள் மன்னிச்சுடுங்க ''

'' விடும்மா! நான் தான் நடந்ததை பேச வேண்டான்னு சொன்னேனே! காதல்ன்னா பெற்றவங்க பயப்பட காரணமே பிள்ளைகள் எடுக்கும் அவசர முடிவு தான்! எல்லா விஷயத்திலும் யோசித்து முடிவெடுக்கும் ஆட்கள் வாழ்க்கை விஷயத்தில் மட்டும் அவசரமாய் முடிவு எடுத்து விடுகிறார்கள். ''

'' பெற்ற பிள்ளைகளுக்கு பிரச்சனை என்றால் பெற்றவர்களின் மனம் தன்னாலேயே வெந்து விடும். இனிமேல் இது உன் வீடு. நீ சுதந்திரமா இருக்கலாம். ஆனா ஒரு கண்டிஷன் இரண்டு பேருக்கும் இது கடைசி செமஸ்டர் இல்லையா? முதல்ல படிப்பை முடிங்க ''

'' சரிங்க அங்கிள் ''

'' சுரேஷ் இந்தா உன் செக்புக்! உன் கணக்குல இருந்து பணம் எடுத்து முதல்ல அவளுக்கு நல்ல ஆடைகள் வாங்கிக் கொடு, நகைகள் வாங்கிக் கொடு. ''

'' சரிண்ணா ''

'' கனி இங்கே வாம்மா! '' அதுவரையில் பேசாமல் இருந்த பார்வதி பேசினார்.

'' வாம்மா பூஜையறையில் முதல்ல விளக்கேற்று. பயப்படாதேம்மா. நிம்மதியா இரு. நிச்சயம் நான் உனக்கு ஒரு நல்ல அம்மாவா இருப்பேன். ''

'' அத்தே '' அவரைக் கட்டிக் கொண்டாள்.

'' நானும் பெண்ணைப் பெற்றவள் தாம்மா. நீ எம்மகன் எத்தனை அன்பு வைத்திருந்தால் எல்லாரையும் விட்டுட்டு வந்திருப்பே! நீ இயல்பா இரு. மாமா சொன்ன மாதிரி படிப்பை முடி. ''

'' அத்தே '' அவள் விழிகளில் நீர்.

'' இந்தாம்மா '' இது என் மகளோட சுடிதார். குளிச்சிட்டு உடை மாற்றிட்டு வா. நீயும் சுரேஷும் முதல்ல கோவிலுக்குப் போயிட்டு அப்படியே கடைத் தெருவுக்குப் போய் வேண்டியதை வாங்கிட்டு வாங்க ''

'' உங்க விருப்பம் இல்லாம வர்ற என்னை ஏத்துப்பீங்களோ இல்லையோன்னு பயந்தேன். ஆனா நீங்க எல்லாருமே '' அவள் குரல்



தழுதழுக்க ஆறுதலாய் ஒரு அணைப்பை தந்து அழைத்துப் போனார் மருமகளை!

மூன்று நாட்கள் நகர்ந்தன. கனிமொழி அங்கு சுதந்திரமாய் வளைய வந்தாள். யாரும் அவள் மனம் நோக விடவில்லை. நேசனும், பார்வதியும் அன்பை பொழிந்தார்கள். ஜெயநந்தன் எப்போதாவது பேசுவதோடு சரி. அவன் உலகம் தனி! சுரேஷ் முன்பைக் காட்டிலும் அதிக நெருக்கம் காட்டினான்.

வித்யாவும் அமெரிக்காவில் இருந்து போனில் தொடர்பு கொண்டு வாழ்த்துகளைப் பரிமாறினாள்.

திருமணம் பற்றி தொலைபேசியில் சகோதரியுடன் தெளிவுபடுத்தினாள் கனிமொழி.

தங்கையின் குரலில் தென்பட்ட உற்சாகம் ஜனனியின் மனதில் இருந்த கவலையைப் போக்கியது.

அன்று விடுமுறை தினம் என்பதால் குடும்பத்தினர் அனைவரும் ஒன்றாய் அமர்ந்து உணவருந்திக் கொண்டிருந்தார்கள்.

'' அப்பா இவங்க இரண்டு பேரையும் நாம ஏன் ஹனிமூனுக்கு அனுப்பக் கூடாது? ''

'' பேஷா செய்யலாம்! ஆனா அவங்க படிப்பு முடியட்டுமே. எதிர்காலம் வளம் எனும்போது சந்தோஷம் இருமடங்காகும் இல்லையா? ''

'' ஆமாண்ணா! அப்பா சொல்றது தான் சரி!படிப்பு முடிய இன்னும் ஒரு மாதம் தானே இருக்கு. என்ன கனி? ''

'' நான் என்ன சொல்றதுங்க? நீங்க எது செய்தாலும் சரி தான். ''

'' ஏங்க அதைவிட முக்கியமான விஷயம் நாம பேசிகிட்ட படி பிறந்த நாளைக் கூட அருமையா கொண்டாடுவோம். கல்யாணமின்னு ஒரு பெரிய வைபவம் நடத்திருக்கு. ரொம்பவும் நெருங்கினவங்களுக்கு மட்டும் ஒரு ரிஷப்சன் வைக்கலாமே? ''

'' அம்மா சொல்றதும் சரிதாம்பா. கூடிய விரைவில் அதற்கான ஏற்பாடுகளை செய்து விடு ஜெயா. ''

'' கண்டிப்பா ''

'' அய்யா சின்னம்மாவோட அக்கா வந்திருக்காங்க. ''

'' வரச் சொல்லுப்பா ''

அடுத்த சில நொடிகளில் அமர்த்தலான காட்டன் புடவையில் உள்ளே நுழைந்தாள் ஜனனி! கூடவே ஐந்து வேலையாட்கள் சில பொருட்களை கொண்டு வந்து வைத்து விட்டு நகர்ந்தனர்.

'' வாம்மா! '' வாஞ்சையுடன் வரவேற்றார் பார்வதி.

'' வணக்கம். உங்க அனுமதி இல்லாமல் நான் இங்கே வந்திருக்கேன். ''

'' உறவினர் வீட்டுக்கு வர அனுமதி தேவையில்லை அம்மா '' நேசன் பாசமிருந்தவராய், '' கனியைப் போல நீயும் எனக்கொரு மருமகள் தானே. உள்ளே வாம்மா. ஆமா இவை எல்லாம் என்ன? ''

'' மாமா என்ன தான் காதல் கல்யாணமா இருந்தாலும் முறைன்னு

ஒண்ணு இருக்கு இல்லையா? மணமாகி போகும் போதும் என்ன தர ணுமின்னு என் அறிவுக்கு எட்டியதை செய்து இருக்கிறேன். தவறு இருந்தால் மன்னியுங்கள்.''

'' சீர்வரிசை எதுக்கும்மா? கனிக்கு இங்கே எந்தக் குறையும் இல் லையே?''

'' அது அவளோட முகத்தைப் பார்த்தாலே தெரியுது மாமா. நாங்க இரண்டு பெண்கள். எங்களுக்குன்னு சில உரிமைகள் இருக்கு. அதை அவகிட்ட சேர்ப்பது என் பொறுப்பு இல்லையா? என்ன தான் நீங்க வேண்டான்னு சொன்னாலும் தருவது எங்கள் கடமை! ''

'' பிறந்த வீட்டை பிரிந்து வர்ற பெண்கள் கூட எடுத்து வரும் சீர் வரிசையில் தான் தன் பிறந்த வீட்டு நினைவுகளை சுமக்கிறாங்கன்னு நீங்க உணராதது இல்லை. அதனால மறுக்காம ஏத்துக்கோங்க.''

'' சரிம்மா உன் இஷ்டம். கனிக்கு விருப்பம் என்றால் எடுத்துக் கட்டும்.''

'' தேங்க்ஸ் மாமா! ''

'' முதல்லே உள்ளே வா! சாப்பிடு! ''

'' இல்லத்தே வேணாம். ''

'' அதெப்படிம்மா. நீ முறையோட எல்லாம் செய்யும்போது நாங் களும் எங்க வீட்டு மருமகளோட உறவுகளை திறம்பட கவனிக்க ணுமே! '' என்று வற்புறுத்தி அமரவைத்தார். அதுவும் சரியாய் ஜெய நந்தனின் இருக்கைக்கு அருகில்.

சாப்பிட முடியவில்லையென்றால் இத்தனை நல்ல உள்ளம்ப டைத்தவர்களை மதிக்கவில்லை என்றாகிப் போகுமே! அப்பா பேசிய பேச்சிற்கும், மகளின் திரு மணம் அநாதைப் போல் நடந்து விட்டதேயென்ற வருத்தமும் இருப்பினும் அனைத்தையும் மறந்து அன்பு பாராட்டும் இவர்க ளிடம் என்ன சொல்வது?

ஆனால் உணவு தொண்டைக் குழியில் இறங்கிட மறுக்கிறது. ஜெயநந்தனின் அருகில் அமர்ந்து உணவருந்துவது என்பது நடக்கக் கூடிய காரியமா? கடவுளே இதென்ன சோதனை? அவளுக்கு நீலகிரி காட்டேஜில் ஒருவரை யொருவர் சீண்டியபடி உணவருந் தியது நினைவிற்கு வந்தது. அவனை அரைக் கண்களால் கவ னித்தாள். அவனுமே உணவை அளந்து கொண்டு தான் இருந்



''பார்வை நேரம் முடிஞ்சு போச்சே, டாக்டர் ஏன் இன்னும் கிளம்பலே''

சில பாவைகள் அவரைத் தேடி வருவாங்க. அது வரைக் கும் அவரு கிளம்பமாட்டாரு''

-ஆர்.தங்கராஜ். திருப்பூர்.



தான்.

தினங்களும், சந்தித்த பொழுதுகளும் குறைவே என்றாலும் நினை வுகள் பசுமையாய் அதன் தேடல்கள் ரணமாய், கடவுளே உணவிற்கு உள்ளே தடை போட்டது போலிருக்க. பார்வதியோ மேலும் சாப்பி டும் படி வற்புறுத்தினார்.

'' இல்லேம்மா. உண்மையிலேயே போதும்! '' அவள் எழுந்தாள்.

'' இப்ப உள்ள பிள்ளைங்க எல்லாம் சாப்பாட்டை கொறிக்கி றாங்க! டயட் இல்லையா? ஆனா நான் பார்வதியைக் கல்யாணம் பண் ணப்போ நல்லா சாப்பிடுவா. இப்பவும் நிறுத்தறதே இல்லை. ''

'' சும்மாயிருங்க! என்னை கிண்டல் பண்றதே வேலையா போச்சு! நீ வாம்மா! '' ஜனனியை அழைத்துப் போய் குங்குமம் வைத்து விட அவள் அவரின் காலில் விழுந்து வணங்கினாள்.

'' நல்லாயிரும்மா. கூடிய சீக்கிரம் உனக்கும் ஒரு நல்ல வாழ்க்கை அமையணும். '' அமைதி வழியும் அவர் முகம் பார்த்ததும் ஆறுதல் அடைந்தது அவள் மனம்.

'' அத்தை தாய்ப்பாசம் என்றால் என்னென்னே தெரியாது. அப்பா எங்களுக்கு எவ்வளவோ செய்தார். ஆனால் ஒரு எல்லைக்கு மேலே எங்களின் மன உணர்வுகளை அப்பாவிடம் சொல்ல முடியலை. அப்பா என்றாலும் ஆண் மகன் இல்லையா? ஆனா இப்போ கனிக்கு நீங்க கிடைச்சி இருப்பது திருப்தியா இருக்கு. அவ முகத்திலே இத்தனை சந்தோஷத்தை நான் பார்த்ததே இல்லை. நன்றிம்மா. ''

'' தப்பு பண்ணிக்கிட்டாங்கன்னு யோசிக்காம அன்பை மட்டுமே ஆதாரமா வாழுற உங்க குடும்பம் ரொம்பவே ஏக்கத்தைக் கொடுக்குது. ''

பார்வதி புன்னகையுடன் ஜனனியை தோளில் சாய்த்துக் கொண் டார். ''இங்கே பாரும்மா. கனி வேற, நீ வேற இல்லை! உனக்கு எப்போ இங்கே வரணுன்னு தோணுதோ உடனே இங்கே வரலாம். இந்த வீடு உனக்காக எப்போதும் திறந்தே இருக்கும். ''

'' நன்றி அத்தே ''

கண்கள் பனிக்க, அவள் வெளிவர நேசன் அழைத்தார். '' ஜனனி இவங்க கல்யாணம் நடந்திட்டது. ஆனா சமூகத்தில் நமக்குன்னு ஒரு கௌரவம் இருக்கு. அதனால வீட்டோட ஒரு சின்ன ரிஷப்சன் நடத் திடலாம்னு முடிவு பண்ணியிருக்கேன்! ''

'' சந்தோஷம் அங்கிள் ''

'' கூடிய விரைவில் அழைப்பிதழோடு உங்க வீட்டுக்கு வருவோம். ''

'' வாங்க '' என்றாலும் மனம் எதையோ யோசிப்பதை உணர்ந்து, ''உன் தந்தையைப் பற்றிய கவலை உனக்கு வேண்டாம். நான் பார்த் துக்கிறேன். ''

'' அப்போ நான் வர்றேன் அங்கிள். வரேன் ஆன்ட்டி! '' அவள் ஜெய்யின் பக்கம் திரும்பாமல் நடந்தாள். ஆனால் மனம் அங்கேயே வட்டமிட்டு மிதந்தது. ஏற்கனவே அவனிடம் மனதைப் பறிகொடுத்து

பாதி உயிரை இழந்துவிட்டாள், இப்போது இந்தக குடும்பத்தினர் அன்பையும், அக்கறையும் காணும்போது ஏதோ இழந்த வேதனை கண்களில் நீராய் துளிர்க்க வேகமாய் காரைக் கிளப்பினாள்.

## 7

ஜெயநந்தனின் ஏற்பாட்டின் படி விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வீட்டிலேயே அலங்காரமும், பூங்கொத்துகளும் அணிவகுத்தன. சுற்றிலும் பூவினால் ஆன மேடையில் எல்லாம் கிடைத்ததைப் போன்ற மகிழ்வும், பூரிப்பும் கனிமொழியின் முகத்தில்!

நேசன் சொன்னபடி அவரும் தன் துணைவியோடு அழைப்பிதழைக் கொண்டு வந்து தந்தார்.

ஆனால் ஜனனி அப்பாவோ அவர்களை வீட்டு வாசல்படி கூட ஏறவிடவில்லை. '' அவ என் பொண்ணே இல்லை. அப்படியிருக்கும் போது விருந்து விழாவென்று என்னை அழைக்க வேண்டிய அவசியம் இல்லை. '' என்று கடுமை காட்டினார். அவரை சமாளிப்பதற்குள் போதும் போதுமென்று ஆகிவிட்டது ஜனனிக்கு.

'' அப்பா வீடு தேடி வருகிறவர்கள் விரோதியாகவே இருந்தாலும் வரவேற்பது தான் மரபு என்று எங்களுக்கு சொல்லித் தந்துவிட்டு வந்த உறவுகளை துரத்தியடிப்பது நியாயமா? பிடிக்கவில்லையென்றால் பேசாமல் இருங்கள். ''

'' நீங்க வாங்க அங்கிள். '' அவர்களை வரவேற்பறையில் அமர வைத்து பழச்சாறு தந்து உபசரித்தாள். பத்திரிகை பெற்றுக் கொண்டு ''அப்பா பேசியதை தவறாக எண்ண வேண்டாம் '' என்றாள்.

'' பரவாயில்லைம்மா அவசியம் வரணும். '' என்று முகச்சுளிப்பின்றி கிளம்பினார்கள் மூத்த தம்பதியினர்இருவரும்.


அவர்கள் சென்றபிறகு, தந்தையிடம் வந்தாள். '' என்னப்பா இது? கோபம் இருக்க வேண்டியது தான். அது மனித பண்புகளைக் கூட மறக்கடிக்கும் அளவிற்கா? நீங்கள் செய்வது தப்புப்பா. நம் பெண் அங்கே வாழ்கிறாள். நினைவிருக்கட்டும். '' திரும்பி இருந்த தந்தையிடம் அருகில் போக அவர் கண்களில் நீர்.

'' அப்பா '' பதறினாள் மகள்.

'' அம்மா ஜனனி! என்னால முடியலைம்மா! தொழிலில் தான் அவன் போட்டியென்றால் இப்போது என் உறவுகளையும் எனக்கு எதிராய் கொண்டு வந்து விட்டானே! யாரோ ஒருவன் உன்னைக் கடத்துகிறான்! நம் தொழிலில் நஷ்டம் ஏற்படுத்துகிறான். என் மகளை மயக்கி கல்யாணம் பண்ணிக் கொண்டு போகிறான். என் புகழ், கௌரவம் எல்லாமே பாழாய் போய்விட்டதே? ''

'' உன் பொண்ணு அவருடன் ஓடிப் போயிட்டாளேன்னு கேட்கும் சமயம் என் மனம் என்ன பாடுபடும் சொல்லு. எப்படியெல்லாம்





உங்களை வாழ வைக்க வேண்டும் என்று நான் எண்ணியிருப்பேன்? ''

அதற்கு சற்றும் குறையில்லாமல் தான் சகோதரி வாழ்கிறாள் என்பதை சொன்னால் தந்தை சந்தோஷம் அடைவாரா? என்று புரியவில்லை. மனம் உடைந்து போயிருக்கும் இந்நேரத்தில் எந்தவொரு சிறு வார்த்தையும் அவர் மனதை பாதிக்கும். தவிரவும் அவரே உணரும்போது பாரம் நீங்கி விடும். அதுவரையில் அமைதி காப்பதே நலமென்று பேச்சை விடுத்தாள்.

ஆனால் இதே அளவு பாதிப்பு ஜெயநந்தனின் குடும்பத்தினருக்கும் இருக்கும் தானே! அவர்களையும் இப்படி யாரும் விசாரித்து இருப்பார்கள் தானே! ஆனால் அங்கிள் அதை கனியிடமோ சுரேஷிடமோ காட்டவில்லை. அவர் அந்தளவு பக்குவம் அடைந்திருக்கிறார். இப்போது அப்பா அறியாமல் எப்படி செல்வது? என்று அவளின் யோசனைக்கு ஏதுவாய் வந்தது ஒரு விஷயம்!

தனியார் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்று பழைய இதிகாசக் கதைகளை கிராபிக்ஸ் மூலம் குழந்தைகளுக்குப் புரியும்படி வடிவமைத்துத் தரும்படி கேட்டிருந்தார்கள்.

'' இது முடியுமாப்பா? ''

'' உன் மேல் எனக்கு நம்பிக்கை இருக்கும்மா. கட்டாயம் வெற்றி பெற முடியும். இதை மட்டும் நாம திறம்பட செய்திட்டா நம்ம கம்பெனிக்கு நல்ல பேரு கிடைக்கும். என் கனவும்மா. ''

'' உங்க இஷ்டம்ப்பா. அவங்க அலுவலகம் எங்க இருக்கு? ''

'' மும்பையில்! ''

'' சரி நேரில் போய் பேசலாம். ''

'' வேண்டாம்மா. நானே நேரில் போய் பேசிட்டு வர்றேன்: இங்கே அவங்க நாம்ம ஆபீசையும் பார்த்தாப் போல இருக்குமே. ''

தங்கையின் வைபவத்திற்கு செல்ல நல்ல வழியென்று தோன்றிட சரி எனத் தலையசைத்தும் விட்டாள். அதேபோல் அங்கு வந்து சுற்றிலும் உறவுகளை கண்டபோது தந்தையும் வந்திருக்கலாமே என்று மனம் அலைபாய்ந்தது. மணமக்களைச் சுற்றிலும் ஒரே கூட்டம். வந்தவர்கள் அனைவருக்கும் ஒரு சின்ன அறிமுகப்படலத்தோடு பரிசுகளை பெற்றுக் கொண்டனர். பின்புறம் சூழ்நிலையைக் கலைக்காதபடி அற்புதமான சாக்ஸபோன் இசை மனதை நெகிழ வைத்தது.

அனைவரும் பபே ஸ்டைலில் உணவுகளை கையில் ஏந்தியபடி குழுமமாய் பேசத் துவங்கினார்கள். முன்னோக்கி நகர்ந்தாள் ஜனனி! மஞ்சள் நிற மைசூர் சில்க் அதற்கு பொருத்தமாய் வளையல் ஒரு கோல்ட் பென்டன்ட் கழுத்தில் டைமண்ட் பதித்த பிளாட்டினம் செயின் அற்புதமாய் இருந்தாள்.

சில வம்பு பேச்சுகளும் இல்லாமல் இல்லை.

'' ஜானகிக்கா பொண்ணு நல்ல அழகு இல்லை? நல்ல பொருத்தம் இரண்டு பேருக்கும். ''

'' ஆமாமாம். ஆனா பெரியவனை விட்டுட்டு இவனுக்கு ஏன்? ''





''முன்னெல்லாம் குவார்ட்டர் தான் சாப்பிடுவே, இப்போ ஆப் சாப்பிடறே?''

''குவாட்டர் சாப்பிட்டால் என் பொண்டாட்டி கத்தறது நல்லா தெரியுது. ஆப் சாப்பிட்டால் அது தெரியாது அதான்''

-ஆர்.தங்கராஜ். திருப்பூர்.

'' உனக்கு விஷயமே தெரியாதா? அவளை இழுத்திட்டு வந்திட்டான். ''

'' அப்படியா? ''

'' இதே நடுத்தர வர்க்கமின்னா மாஞ்சி மாஞ்சி பேசுவாங்க! பணம் உள்ள இடம் பாரு எல்லாம் மறைஞ்சிடும். ''

'' யாருக்கு தெரியும் இப்படி அவசரமாய் நடக்க என்னாச்சோ? ''

'' நல்ல ஆள் மயக்கி போல ''

அந்த பெண்களின் வம்பு பேச்சில் மனம் குமைந்த ஜனனியை பார்வதி அழைத்தார்.

'' விடும்மா நானும் கவனித்தேன் அவர்கள் பேச்சை

எதையுமே நல்ல எண்ணத்தோடு பார்க்கும் எண்ணம் சில பேருக்கு கிடையாது. ஏதோ ஒரு பொறாமை உணர்வை இப்படி வெளிப்படுத்துவார்கள். இதை எல்லாம் பார்த்தால் நிம்மதி இருக்காது. நல்லதை ஆசீர்வாதமாகவும், கெட்டதை திருஷ்டி கழிப்பதாகவும் எடுத்துக் கொள்ள வேண்டும். நீ வா கனி காத்திருக்கிறாள் பார். ''

ஜனனி மேடையேறவும் கனி அவள் காலில் விழுந்து விட்டாள்.

'' என்னடாம்மா இது? ''

'' எனக்கு நீ தானே அம்மா மாதிரி இருந்து செய்தே? ''

'' கழுதை நல்ல நாளும் அதுவுமாய் கண் கலங்கிட்டு கண்ணைத் துடை. அங்கே பார் நீ வந்து என் மனைவியை அழ வைத்து விட்டாயே என்று உன் கணவர் என்னை முறைப்பதை? ''

'' அட என்னை வில்லன் ஆக்குறீங்க? '' சுரேஷ் சிரித்தான்.

'' அப்பா வரலையே? '' என கனி கண் கலங்க,

'' விடு! உலகில் எந்தப் பிரச்சனையும் நிரந்தரம் இல்லை. அவர் விரைவில் மாறுவார். '' தமக்கையை ஆறுதல் படுத்திட அதன் மூலையில் ஜெயநந்தன் வேறு சுற்றி சுற்றி நின்றான் அவளை வைத்த கண் வாங்காமல்.

'' அக்கா நாம எல்லாரும் ஒரே குடும்பம் ஆயிட்டோம். வாயேன் ஒரு போட்டோ எடுக்கலாம். '' குடும்பம் மொத்தமும் மேடையேறிவிட அனைவரும் சேர்ந்து புகைப்படம் எடுத்தனர். அருகில் ஜெய் மறுபடியும் அவளின் வைராக்கியம் தவறிப் போனது. '' ஜனனி இந்தாம்மா '' பார்வதி அம்மாள் பெரியதும், சிறியதுமாக இரு பெட்டிகளைத் தந்தார்.

'' என்னத்தே இது? ''

'' ஷ்! ஏதும் பேசக்கூடாது. போ போய் இதை அணிந்து வா. ''

'' எனக்கு எதுக்கு இது? ''

'' போம்மா! நான் பெரியவள் இல்லையா? மறுத்துப் பேசாதே. உங்கம்மாவைப் போல் நினைத்து அணிந்து வா. பார்க்க ஆசையாக இருக்கோம். ''

கூட ஒரு பணியாளை அழைத்து அறைக்கு கூட்டிப்போக பணித்து விட்டு நகர்ந்தார்.

## 8

அந்த அன்பை மனம் அசை போட்ட வண்ணம் அறையில் நுழைந்தாள். பச்சையும், இள ஆரஞ்சும் நிறைந்த ஆரணிப்பட்டு. சிறிய பெட்டியில் முத்துக்கள் பதித்த தங்க நகை செட் ஒன்று. மல்லிகைச் சரம்! மனம் நெகிழ்ந்தே போனாள் அவர்கள் அன்பை எண்ணி!

புடவை அணிந்து தளர்வாய் பின்னிய கூந்தலில் பூவை சூடி விட்டு நகையை அணியும் சமயம் கதவைத் தட்டும் ஒலி கேட்டது.

எதிரே ஜெயநந்தன்.

அவனைக் கண்டு ஒதுக்கிய கண்ணாமூச்சு ஆட்டம் எல்லாம் முடிந்து போய் அவனிடமே மாட்டிக் கொண்டாகி விட்டது.

தலையைக் குனிந்தாள்.

என்ன பேசுவதென்றே தெரியவில்லை இருவருக்கும். '' மன்னிக்கணும் இது என் அறை. நீங்கள் இங்கே இருப்பீர்கள் என்று எதிர்பார்க்கவில்லை.''

அவனின் 'நீங்கள்' எனும் மரியாதை வார்த்தை குடைந்தது. அத்தனை அன்னியமாகி விட்டேனா ஜெய்! பேசாமல் நின்றாள்.

அவன் அவளை பார்த்தான். எத்தனை அழகு பச்சைப்பட்டில் அது பன்மடங்காகி இருந்தது. என்னைப் பார்த்தவுடனே மலரும் முகம். இன்று உணர்ச்சிகளைத் துடைத்து இருக்கிறதே? ம்... பெருமூச்சோடு '' ஒரு மெயில் அனுப்ப வந்தேன் ''

'' ம்... '' அவள் நகர,

'' எனக்காக நீங்கள் போக வேண்டாம். நான் நிமிடத்தில் போய் விடுவேன் '' என்று கணினியை ஆன் பண்ணியதும் பாஸ்வேர்டு கேட்டது. அவன் ஒற்றியெடுத்த எழுத்துக்களை உற்று நோக்கியதும் திகைத்தாள் அது அவளின் பெயர்.

லாக் திறந்ததும் தாமரை மலர் ஒருமுறை மொட்டு விரிந்து மூடும் போது விரிந்த இதழ்களுக்கு நடுவில் அவளின் முகம்! இது எப்படி? அவள் குழம்பிய போதே அவன் தேவையானவற்றை எடுத்துக் கொண்டு ஒரு மெயில் அனுப்பி விட்டுக் கிளம்பினான்.

மானிட்டரையே வெறித்தபடி நின்றவளிடம் மானசீகமாய் என்னை



மட்டும் ஏன் ஒதுக்குகிறாய் என்ற கேள்வியுடன் நகர்ந்தான்.

அவளின் இதயத்துடிப்பு தாறுமாறாய் எகிறியது. இன்னும் சற்று நேரம் நின்றாலும் தன் உறுதி வெடித்து விடும் எனத் தோன்ற வேகமாய் அவ்விடம் விட்டு நகர்ந்தாள் ஜனனி!

தன் மனதில் உள்ளவற்றை சொல்லி தனக்கும் அந்த நிகழ்விற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொல்ல வேண்டும் போல் இருந்ததை எல்லாம் மனதிற்குள் போட்டு மறைத்துக் கொண்டான். பேசத் தோன்றவில்லை. தன்னை மீண்டும் அவள் தவறாய் எண்ணிவிடக் கூடும். சமயம் கிடைத்ததும் அவளிடம் பேசிவிடலாம் என்று. அதனால் அமைதியாய் வெளியேறினான்.

வாழ்வில் அநேக விஷயங்கள் இப்படித்தான். பிறர் மனதில் உள்ளவற்றை வெளிப்படையாய் அறியமுடியாமல் அது அன்பா, நல்லதா கெட்டதா என்று ஆராய முடிவதில்லை. எத்தனை பூட்டுகளை உடைத்தாலும் மௌனம் தான். பல்வேறு கூண்டுக்குள் பக்குவமாய் ஒளிந்து கொள்ள வைத்ததும் மௌனம் தான்.

காதலர்களிடையே அது மன்மத மொழி!

விழா முடிந்தவுடன் பார்வதி பிள்ளைக்கு சுற்றிப் போட்டாள்.

''சரிங்க நான் கிளம்புறேன். ஏற்கனவே தாமதம் ஆயிட்டது.''

'' நீ வந்தது மனதிற்கு நிறைவா இருக்கு ஜனனி! உங்கப்பாவும் வந்திருந்தா சபை இன்னமும் நிறைஞ்சு இருக்கும்.''

''சில விஷயங்களில் உங்களுக்கு இருக்கும் பக்குவம் அவரிடம் இல்லை. அங்கிள், சரி நான் வரேன்.''

''டயமாயிடுச்சும்மா?! நீ யெப்படி தனியா போவே? நான் டிராப் பண்ணவா?''

''உங்களுக்கு ஏன் வீண் சிரமம் அங்கிள்?''

''இதிலென்னம்மா சிரமம்.''

''ஏற்கனவே பங்ஷன் ஏற்பாடு வேறு ரொம்பவும் சோர்ந்து போயிருப்பீர்கள்?''

''பரவாயில்லைம்மா!''

''ஏங்க பேசாமா நம்ம ஜெயாவை விட்டு வரச் சொல்லலாமே?'' பார்வதியம்மாள் சொல்லவும்.

வேண்டாம் என மறுக்க வாயெடுத்தாள். ''எனக்கா நீ? அத்தையும், மாமாவும் இத்தனை மெனக்கெடறாங்களே?'' என்று கூறவும் அமைதியானாள்.

ஆனால் அடுத்த 45 நிமிடங்கள் பயணத்தில் இதே மௌனம் சாத்தியமா? என்று தோன்றவில்லை.

ஆரம்பத்தில் பத்து நிமிடங்கள் ஏதும் பேசாமல் இருந்தனர். ஆனால், எத்தனை நேரம் அப்படியே பேசாமல் வருவது? முன்பு நண்பன் என்றால் இன்று உறவினன் வேறு! அமைதி காப்பது நல்லது இல்லையென்று தோன்றியது.

''நீங்க சாப்பிட்ட மாதிரியே தெரியலையே'' தானாகவே பேச்சைத் துவங்கினாள்.

அவன் புருவம் உயர்ந்தது. ''என்ன திடீர் அக்கறை?''

அதன் பிறகு என்ன பேசுவது என்று தெரியாமல்! ''பிறகு கனி ரொம்பவும் சின்னப் பொண்ணு! அவ ஏதாவது தப்பு செய்தால் தவறாய் எடுத்துக் கொள்ள வேண்டாம்! இன்றைய விருந்தில் கூட உங்க முகமே சரியில்லை. என்மேல் உள்ள கோபத்தை அவளிடம் காண்பிக்க வேண்டாம்.''

''எனக்கு யார் மேலும் கோபம் இல்லை? பயப்பட வேண்டிய அவசியமும் இல்லை. நம்பி வந்த பெண்ணை ஏமாற்றும் அளவிற்கு மோசக்காரர்கள் யாரும் எங்கள் வீட்டில் இல்லை. எத்தனை பழகினாலும் ஆட்களை அளக்கும் குணம் இல்லாது போனது வருத்தமே!''

''ஜெய்! நான் கனியைப் பற்றி மட்டுமே பேசுகிறேன். நீங்க பழைய விஷயங்களை?''

''அதெல்லாம் உனக்கு நினைவிருக்கிறதா? ஜனனி? நினைவிருந்தும் தான். முன் பின் அறியாதவன் போல் ஒதுக்கம் காட்டினாயா? நடந்தது என்ன? யார் செய்த பிழை என்று அறியாமல், தந்தையின் சொல்லே வேதவாக்காக கொண்டு என்னவெல்லாம் பேசிவிட்டாய்?''

''நீங்களும் வரைமுறை இன்றி தான் ஜெய் பேசினீர்கள்?''

''என்ன நம்பவில்லையே என்ற கோபம்''

''நம்பவில்லை என்று உங்களுக்கு தெரியுமா ஜெய்?!'' மனதிற்குள்ளேயே கேள்வி கேட்டுக் கொண்டாள். இதற்கு மேலும் பேச்சை வளர்ப்பது நல்லது அல்ல?! என்றெண்ணி ''எனக்குக் களைப்பாக இருக்கிறது!'' என்று கண்களை மூடி இருக்கையில் சாய்ந்து கொண்டாள்.

அவள் மனதில் தன்னைப் பற்றி எந்த எண்ணமும் இல்லை. எனவே பேச்சை மாற்ற எண்ணுகிறாள். அந்த அளவிற்கா அவள் மனதில் இருந்து நான் மறைந்து விட்டேன். கண்களை மூடி உறங்குவது போன்று இருக்கிறாள். முதன் முதலில் அவளைக் கண்டதை மனம் நினைவிற்கு கொண்டு வந்தது. அதே தோற்றம் அன்று மயங்கிய நிலையில் இன்று எனக்கு மயக்கத்தைத் தரும் நிலையில்!

மல்லிகையின் மணம் காற்றில் பரவி நாசியைத் தழுவியது. மேலும் கீழுமாய் எழுந்த அவளின் சீரான மூச்சு மேலும் சங்கடத்திற்கு உள்ளாக்கியது.

தவிப்போடு கண்களைத் திருப்பினான். இன்னமும் பதினைந்து நிமிடங்களில் அவளின் வீடு வந்து விடும். அத்தோடு அவனின் மன ஏக்கங்களும் முடிந்து விடும். முதன் முதலாய் அவளின் அருகாமையை எண்ணி பயம் வந்தது ஜெயநந்தனுக்கு!

அவளின் அழகில் தன்னையும் மீறி விடுவோமோயென்ற நினைப்பில் பயத்தில் ஆழ்ந்தான் அவன். ஆனால், அவன் உறுதியை முற்றிலும் குலைக்கும் விதமாய் அடுத்தது நிகழ்ந்தது.

உறக்கம் மிகுதியில் அவளின் தலை ஜெயநந்தனின் தோள் மேல் சாய்ந்தது. அவளின் பட்டு கன்னம் இவனில் தோளில்! முகம்வெகு அருகாமையில் அவளின் சூடான மூச்சுக்காற்று அவன் நெஞ்சில்



அறைந்தது. மெத்தென்ற ஸ்பரிசம் வீடு வந்த பிறகும் அவள் அசையவில்லை. அந்நிலை அவனை மொத்தமாய் அடித்து விட்டிருந்தது.

அவனுமே அவளை எழுப்ப முடியவில்லை. அன்று போலவே ஆனால் இம்முறை வலி இவன் மனதில்!

முத்து சிப்பியென கண்கள் மொட்டாய் மூடியிருந்தது. அளவான நாசி, வரைந்து வைத்தாற் போல அற்புதமான உதடுகள். தொடச் சொல்லி ஈர்த்தன. அவள் உதடுகளை நோக்கி தன்னால் நீண்ட கைகளை பின்புறம் இழுத்துக் கொண்டான்.

வேண்டாம்! செய்யாத தவறிற்கே: முகம் திருப்புகிறாள். இனியும் அவளை காயப்படுத்திடக்கூடாது. எனும் நிலையில் அமைதி காத்தான்.

மேலும் அரைமணி நேரங்கள் கடந்திருக்கும். அவள் துயில் கலையவில்லை. ஜனனியின் மொபைல் போன் அலறியது.

உலுக்கியபடி கண்களைத் திறந்தாள். அப்பாவின் அழைப்பு, ஓய்ந்திருந்தது.

சிறு குழப்பத்திற்கு பிறகு, தானிருந்த நிலை உறைத்தது. நான் அவன் தோளிலே?! கடவுளே என்ன எண்ணியிருப்பான். மணிக்கட்டைப் பார்த்தாள்.

எத்தனை மிதமாய் வந்திருந்தாலும் நாம் அரைமணிக்கு முன்னதாகவே வந்திருக்க வேண்டும். அப்படியென்றால், இத்தனை நேரம் அவனின் தோளில்!

''மன்னித்து விடுங்கள் ஜெய்.''

''எதற்கு?''

''தெரியாமல்...! எழுப்பி இருக்கலாமே?!''

''ஏற்கனவே பண்ணிய பாவம் போதாதா? இன்னும் தூங்குபவர்களை வேறு எழுப்பி பாவத்தை சம்பாதித்துக் கொள்ள வேண்டுமா?''

அவள் புன்னகையுடன் ''நன்றி!'' என்றாள். ''வாங்களேன் ஒரு காபி சாப்பிடலாம்.''

''இல்லே வேண்டாம் நான் கிளம்பறேன்.''

''உறவினன் எனும் முறையில் அழைக்கிறேன்.''

''நம்மிருவருக்குள் வேறேதும் இல்லை என்று உணர்த்துகிறாளா?''

''எம் மேல கோபமா ஜெய்?!''

''நத்திங்! காலம் வரும்



''நம்பர் ஒன்பது யாருக்கு பிடிக்கும்?''

''நயன்தாராவுக்கு பிடிக்கும் சார்''

-ஆர்.தங்கராஜ், திருப்பூர்.

போது எல்லாமே புரியும் போது புரியட்டும்.''

''புரிய வைப்பது உங்கள் கடமையில்லையா?''

அவன் புரியாமல் பார்க்க, ''இல்லே! முன்பே நாம் அதிகம் நெருங்கி விட்டோமே. உறவு முறையில். அதனால் அந்த தவறுக்கு காரணம் இல்லையென்று நிரூபணம் செய்து விட்டால் அப்பாவும் மனம் மாறி விடுவாரே?''

''அது என் வேலை இல்லை?''

''ஓஹோ.. அக்கறை இருந்தால், செய்யலாம்! அப்பா..''

''வேண்டாம் ஜனனி. நேருக்கு நேர் கேட்கிறேன். என் மேல் உனக்கு நம்பிக்கை இல்லையா? அவர் பேசியது நியாயமா?''

''நியாய அநியாயம் பேசுவதை விட என்ன நடந்தது என்று அவரை உணர வைக்கலாமே?''

''நிரூபணம் பண்ணாமல் நம்ப மாட்டாரோ?! அதற்கு அவசியம் இல்லை''

''நாம் இப்பேச்சை பேசியே இருக்க வேண்டாமே?''

அவன் முறைத்த வண்ணம் வண்டியைக் கிளப்பினான். ஏக்கம் வழியும் பார்வையோடு அவன் போகும் திக்கையே வெறித்தாள் ஜனனி.

என்று தான் தன்மன உணர்வுகளை அவன் புரிந்து கொள்வானோ? மறக்க கூடிய முகமா?

இணக்கமான அந்த நேரங்களின் நினைவு அதை மறைய விட இன்னமும் மனமில்லையே! விழிகளைத் தழுவிய விழிகளும், விரல்களைப் பற்றிய விரல்களும், தோளோடு தோள் உரசியபடி நடந்ததும், தெரிந்தும், தெரியாமலும் ஒருவரைஒருவர் ஸ்பரிசித்ததும் அதன் உணர்வுகளும் மறக்குமா?

ஜெய்! நீங்களும் என்னை மறக்கவில்லை என்று நானறிவேன். ஆனால், அந்த அன்பை என் மனதில் வளர்ந்த நேசப்பயிரை வளர்க்க மட்டும் தான் முடியும் என்னால்! அதுவும் யாரும் அறியாமல்?! உண்மை ஜெய்! நினைவுப்படுக்கையில் நித்தம் உங்களை நெஞ்சில் சுமக்கிறேன். உங்களை காணாத இந்த மூன்று மாதங்களும் நான் கண்ட வலி, காதல் எத்தனை அமிர்தமோ? அத்தனை விஷமாகவும் கொட்டித் தீர்த்து விட்டது.

உங்களை கண்டபோது ''ஏதோ ஒரு உள்ளுணர்வு காதலை வார்த்தைகளில் வெளிப்படுத்திட வேண்டியதில்லை'' என்ற சரசுவின் வாதம் எத்தனை உண்மையானது!

உங்கள் அருகில் இருக்கும் சமயம் மட்டுமே நான் பாதுகாப்பாய் உணர்கிறேன் ஜெய்! இதோ வெகு நாட்களுக்குப் பிறகு என்னையும் அறியாமல் உங்கள் தோளில் சாய்ந்து உறங்கியிருக்கிறேன்!

அப்பாவை விட்டு வெளிவர இயலுமா?! ஜெய் அந்த அளவிற்கு எனக்கு தைரியம் இல்லை. முதன் முதலாய் நான் தொழிலில் இறங்கி வெற்றி கண்டு இருக்கிறேன். அதை உங்களிடம் சொல்லி சந்தோஷப் படக் கூட முடியவில்லை. எத்தனை ஆனந்தப்பட்டார் தெரியுமா அப்பா?!



அந்த சிரிப்பில் நான்பட்ட துன்பங்கள் எல்லாம் கரைந்து விட்டன ஜெய். உங்களுக்கும் குடும்பம் உள்ளது. என் அன்பை உணர உங்களால் இயலும் என்றே நினைக்கிறேன். நமக்குக் காலம் கனிந்து வரும் வரையில் நான் காத்திருப்பேன் ஜெய்.'

வெகுநேரம் அவன் நினைவுகளிலேயே மூழ்கியிருந்தாள் ஜனனி!

## 9

ஆனால் ஊரிலிருந்து கிளம்பி வந்த தந்தை சீனிவாசன் ஒட்டுமொத்தமாய் அவள் சந்தோஷத்தை கெடுக்கும் விதமாய் திட்டத்துடன் வந்ததை அவள் அறியவில்லை.

''ஜானும்மா!''

அப்பா! இத்தனை தெம்பும் தெளிவுமாய் இருப்பதை நீண்ட நாளைக்குப் பிறகு இன்று தான் காண்கிறாள். அவருடைய உற்சாகம் அவளையும் ஒற்றிக் கொண்டது. ''என்னப்பா இத்தனை சந்தோஷம்?!''

''சந்தோஷம் தாம்மா!'' கையிலிருந்த இனிப்பை மகளுக்கு ஊட்டினார். ''டிஸ்னி கிட்ஸ் சானலின் ஆர்டர் நமக்கே கிடைச்சிட்டது. அதுவும் தொடர்ந்து ஒரு வருடத்திற்கு தினமும் ஒரு மணிநேரம் ஒளிபரப்பாகும். 3-டி அனிமேஷன் தொடர் இதற்கான அக்ரிமெண்ட் கூட ரெடி. அந்த சேனலின் எம்.டி. சுதன் அடுத்த மாதம் சென்னை வருகிறாராம். அவர் வரும் போது அக்ரிமெண்ட் கூடவே வரும்.''

''அந்த சுதன் இருக்கிறானே யங் அன்ட் சாமிங் பாய். உன் போட்டோவையும், லாஸ்ட் ப்ராஜெக்ட்டையும் பார்த்திட்டு அசந்து போயிட்டான். நேரிலே பாக்கத்தானேப் போறே?! இதை ஒரு சவாலாய் ஏற்று நீ வெற்றியடைய வேண்டும் ஜானும்மா!''

''உங்க ஆசீர்வாதம்பா!''

''இனி அவன் என்ன செய்கிறான் பாரு?''

''யாரு?''

''அதான் அந்த நேசனும் அவன் மகனும்?''

''இதில் அவர்கள் எங்கிருந்து வந்தார்கள் அப்பா?!''

''இந்த புராஜக்ட்டுக்கு அவனும் மெயிலில் கொட்டேஷன் பண்ணியிருக்காம்மா. அதுவும் நியாயமான விலை தான்.''

''அப்படியா?'' அவள்மனதில் வேறு யோசனை தோன்றியது: இதனால் மீண்டும் ஜெய்யின் வெறுப்பை சம்பாதித்துக் கொள்ள இயலுமோ என்று?!

ஆனால், அதையும் தாண்டி நமக்கு கிடைத்திருக்கிறது என்றால் வயிறெரிந்து போய் விடமாட்டானா? ஏனோ தந்தை அவர்களை இதழ் வாய் பேசுவதை அவளுடைய மனம் ஏற்கவில்லை?! இதனால் பேச்சை திசை திருப்பினாள்.

''விடுங்கப்பா! அவங்களைப் பற்றி நாமயேன் பேசணும்! நமக்கு நிறைய வேலை இருக்கிறது. நான் போய் சில குறிப்புகள் எடுத்துக்

கொள்கிறேன். அப்போதுதான் மிஸ்டர் சுதனிடம் பேசிட ஏதுவாய் இருக்கும்.''

இதை ஜெய்யிடம் சொல்லுவோமா? என்ற யோசனையோடு சென்றாள். அதனால் விளையப்போகும் குழப்பம் பற்றி அறியாமல்.. சுதனிடம் தந்தை வியாபாரம் மட்டும் பேசிடவில்லை. தன்னையே வைத்துச் சம்பந்தம் வரை போய் விட்டார் என்பதை அவள் அறியவில்லை.

சுதனின் டிஸ்னி கிட்ஸ் சானலில் புது நிகழ்ச்சிகளுக்கு முன்னணி கிராபிக்ஸ் கம்பெனிகளுக்கு அழைப்பு அனுப்பப்பட்டது. அதை முன்னரே அறிந்து தான் நேரடியாய் கிளம்பிப் போனார். ஜனனியின் முதல் மூன்று புராஜக்ட் சி.டி.க்களைத் தந்து முன்னேறத்துடிக்கும் அவளின் உறுதியையும் கூறிப் புகைப்படத்தையும் காண்பித்தார்.

அசந்து தான் போனான் சுதன், இத்தனை அழகாயென்று? இருப்பினும் இது தொழில் விஷயம் அல்லவா? எனவே அவளுடைய புராஜக்ட்டுகளையும் பார்த்து விட்டுக் கூறுவதாய்ச் சொன்னான். சீனிவாசனுக்கு ஒரு புறம் நம்பிக்கை இருந்தாலும், மறுபுறம் இதுவும் கைநழுவிப் போய்விடுமோயென்று தோன்றியது. திகைப்பைக் கையில் ஏந்திய படி சென்றார்.

சுதன் இரவு யோசனையாய் இருந்தான்? ஏனோ போட்டோவில் பார்த்த அந்தப் பெண்ணின் முகமே கண்முன் வந்தது. யார் இவள்? இப்படி மனதைக் கொள்ளை கொண்டு போய் விட்டாளே?! கதவு அசையும் சத்தம் கேட்டது. ''அம்மா.. வாங்கம்மா!''

''என்னடா இது! வேலை முடிஞ்சு களைப்பா வந்துருப்பே. சாப்பாடும் வேண்டாம் என்று சொன்னியே? இந்தப்பாலாவது குடி!''

''அப்பா தூங்கிட்டாரா?''

''ம்.. பி.பிமாத்திரை சாப்பிட்டாரு''

''அம்மா! நானே உங்க கிட்டே பேசலாம்னு இருந்தேன். நீங்களே வந்திட்டீங்க அம்மா! நம்ம டிஸ்னி சேனல் புரோகிராம் ஒன்றிற்காக இன்னைக்கு ஒருத்தரைச் சந்தித்தேன். அவர் மகள் தான் நம்ம புராஜக்ட் ஒன்றை செய்யப்போகிறார்.''

''மகனே பேசட்டும்!'' என்று அமைதியாய் இருந்தார் அந்தம்மாள்.

''அந்தப் பெண்ணோட முந்தைய புராஜக்ட் பார்த்தேன் குறை சொல்ல முடியாதபடி தான் இருந்தது. அதனால அவங்களையே இதுக்கு செலக்ட் பண்ணப்போறேன்.''

''சரி! அதான் முடிவு பண்ணிட்டியே? அப்புறம் ஏன் யோசிக்கிற?''

''அம்மா.... அந்த பொண்ணைப் பற்றிப் பேசினேனே! அவளைப் பார்த்தவுடனேயே பிடிச்சிட்டது. இப்பவும் அவ நினைப்புதான்! எனக்கென்னமோ அவளை.. அதாவது அவ எனக்கு ஏற்றவளா இருப்பாளோன்னு தோணுது!''

''அப்படியா விஷயம்?''

''ம். நீங்க பாருங்க. உங்களுக்கும் அவளைப்பிடிக்கும். அத்தனை அழகு! திறமை!''

''எனக்குப் பொண்ணு தேடி அலையற வேலை மிச்சம்டா. அந்



தப் பொண்ணோட அப்பா இங்கே இருப்பதா தானே சொன்னே! வரச் சொல்லு இல்லே நாமளே போய்ப் பேசி முடிவு பண்ணிடலாம்.''

''இல்லேம்மா. இது வாழ்க்கை. இதில் இத்தனை அவசரம் தேவையில்லை.''

''பின்னே என்ன தான் செய்யப்போறே?''

''நான் இந்த புராஜக்ட் விஷயமா சென்னை போக வேண்டியிருக்கு. அப்படியே அந்தப் பெண்ணையும் பார்த்தா, மேலும் அவளைப் பார்த்ததும் பல விஷயங்களைத் தெரிஞ்சுகிட்டு பேசுவோம்.''

''ஏண்டா நேரம் கடத்துறே?''

''அம்மா எனக்குப் பிடிச்ச மாதிரி அவளுக்கும் என்னைப்பிடிச்சு இருக்கணுமே?''

''உனக்கென்னடா குறை?''

''அது உன் பார்வை. விழிக்கு விழி பார்வை மாறுபடும் பார்க்கலாம். என் ஆசை நிறைவேறுமா என்று?''

''உலகத்திலேயே லவ் பண்ணற விஷயத்தை முதல்ல அம்மாவிடம் சொன்னது நீதான்டா?!''

''அம்மா! ஆணின் எல்லாச் செயலுமே பெண்ணைச் சார்ந்தது தான். அவனுடன் இருக்கும் பெண்களின் நிலைதான் அம்மா, சகோதரி, மனைவி, மகள்ன்னு மாறுதே தவிர உறவு இல்லை. அப்பாவிடம் பேசி நீங்க தான் சம்மதம் வாங்கித்தரணும்.''

''உன் விருப்பம் தான்டா எங்களுக்கு முக்கியம் நீ தூங்கு!'' அம்மா வெளியேற அந்தப் பெண்ணையே நினைத்திருந்தான் சுதன்.

மறுநாள் ஆபீஸில் தன் முன் படபடப்போடு அமர்ந்து இருந்த சீனிவாசனிடம் பேசினான். ''ரொம்பவும் அற்புதம் சார். நிச்சயம் உங்க பொண்ணுக்கு பிரைட் பியூச்சர் உண்டு. இவ்வளவு சின்ன வயசிலே திறமையா செயல்படறாங்கன்னா நான் கட்டாயம் பாராட்டியே ஆகணும்.''

''நன்றி ஸார்.''

''நான் ஓப்பனா பேசிடறேன். எல்லா கிராபிக்ஸ் கம்பெனிகிட்டே இருந்தும் கொட்டேஷன்ஸ் வந்திருக்கு. நீங்கள் உங்க அமௌண்ட்டை கோட் பண்ணிட்டா முடிவு பண்ணிடலாம்.''

''சரி என் ஆபீஸுக்கு ஒரு மெயில் அனுப்பிடலாமா?''

''நான் கிச்சன் பக்கம் போக மாட்டேன். என் புருஷன் டி.வி.பக்கம் வரமாட்டாரு''

''ஏன்?''

''உரிமை மீறல் ஆயிடுமாம். என் புருசன் சொன்னாரு''

-ஆர்.தங்கராஜ், திருப்பூர்.



''ஷ்யூர் ஸார்.'' லேப்டாப்பை அவரின் புறம் திருப்பி விட்டு அவன் அன்னையிடம் இருந்து வந்த போனில் பேசினான்.

''இல்லேம்மா.''

''........''

''அய்யோ! உங்கிட்டே சொல்லியே இருக்கக்கூடாது. விடுங்கம்மா. அவர் என் எதிரிலேயே இருக்கார் அப்புறம் பேசறேன்.''

அதே நேரம் அவனது மெயிலில் இன்பாக்ஸ் ஓப்பனில் இருந்தது மறந்தே போயிற்று. அதில் ஜெய்யின் பெயரில் வந்த கொட்டேசனை சீனிவாசன் கூர்மையாய் கவனித்து தொகையைக் குறித்துக் கொண்டார். அதிலிருந்து 50 ஆயிரம் ரூபாயைக் குறைத்துக் கூறிட வேண்டுமென்று எண்ணம் கொண்டார்.

சரியான தரத்தில் தர வேண்டும் என்றால் அந்த தொகை தான் சிறந்தது. ஆனால் கையைக் கடித்து லாபமே வரவில்லையென்றால் கூடப் பரவாயில்லை! அவனுக்கு மட்டும் அந்த ஆர்டர் போகக்கூடாது. என் பெண்ணைப் பிரித்து ஜெயித்ததாய் மார்த்தட்டிக் கொண்டானே! இதில் அவன் முகம் கறுப்பதைக் காண வேண்டும்.

''மெயில் அனுப்பிட்டீங்களா ஸார்?!''

''இல்லை உங்க இன்பாக்ஸ் ஓப்பனில் இருந்தது''

''ஓஹோ! ஸாரி!'' அவன் சைன் அவுட் செய்து விட்டு மீண்டும் லேப்டாப்பை அவர்புறம் திருப்பினான். அவர் மெயில் அனுப்பிவிட்டு சொன்ன தொகை திருப்தியளிக்க, சம்மதமாய் தலையாட்டி விட்டு, அதுவரையில் உருப்போட்டு இருந்த விஷயத்தை கொட்டி விட்டான். சீனிவாசன் அதிர்ந்து போனார்.

''ஸார்!''

''புரியுது! இன்பேக்ட் நானுமே இப்படிக் கேட்பேன்னு எதிர்பார்க்கலை. தொழில் பேச வந்த இடத்தில் சம்பந்தம் பேசறேன்னு தப்பா நினைக்க வேண்டாம். உங்களுக்குச் சம்மதம்ன்னா முறையோட வந்து பேசத்தயார்''

''சம்மதம் தான் தம்பி! என் மகளுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமையும் போது நான் குறுக்கே தடையாய் இருப்பேனா! நானே அவளிடம் பேசறேன்.''

''வேண்டாம் ஸார்! அன்பு கட்டளையில் மலரக்கூடாது நீங்கள் பேசினால், உங்களுக்காய் அவர்கள் ஒப்புக் கொள்ளக்கூடும். எனக்கு அது வேண்டாம். நான் உங்கள் மகளைச் சந்தித்து, அவர்களுக்கு என் செயல்கள் பிடித்து இருமனமும் இணைந்தால் மட்டுமே எங்கள் மணம் இருக்க வேண்டும். நான் எப்படி ஈர்க்கப்பட்டேனோ, அதே போல் அவங்களும் இயல்பான அன்போட இருக்கணும். நான் புராஜக்ட் விஷயமாய்ச் சென்னை வர வேண்டி உள்ளது. அப்போ பார்க்கலாம்.''

''நான் எதையும்.. என்னால் நம்ப முடியலை ஸார். கனவு மாதிரி இருக்கு. ஆனா நிறைவா இருக்கு.'' அவர் சந்தோஷமாய்க் கிளம்பினார். ஆனால் அவரால் போடப்பட்ட முடிச்சு இன்னமும் இறுகிப்



போய் இருந்தது.

''வாட் நான்சென்ஸ்! டிஸ்னியின் ஆர்டர் நமக்கு ஏன் கிடைக்கவில்லை? நான் தரமான விலையைத் தானே குறிப்பிட்டு இருந்தேன். மார்க்கெட்டில் நம்ப கம்பெனிதானே முதல் அப்புறம்...!''

''ஸார்! அது அந்த சரயா கிராபிக்ஸ். நம்மைக் காட்டிலும் கம்மியா கோட் பண்ணிட்டாங்க. தவிரவும் சீனிவாசனே நேரில் போனதாய் கேள்வி!''

''இதில் ஏதோ உள்ளது தனா?! நான் கோட் பண்ணியது மிகவும் குறைந்த பட்ஜெட், அதை விடவும் குறைத்து அவர் செய்தால் நம் தொகை எப்படித் தெரிந்திருக்க முடியும்.'' ஜெய்யின் மனம் குறுகுறுத்தது.

''ஸார்! சீனுதான் ஸார் ஏதாவது தகிடுதத்தம் பண்ணியிருக்கணும். ஏன்னா? அவன் புத்தியே அப்படித்தான்.''

மானேஜர் தனசேகர் சீனிவாசனிடம் வேலை பார்த்தவர். அனுபவசாலியும் கூட, ஏதோ காரணத்திற்கென சரயாவை விட்டு விலகி வர ஜெய்யும் ஏற்றுக் கொண்டான். அன்றிலிருந்து உண்மையாய் உழைப்பவர்.

''ஸார்!''

''சொல்லுங்க தனா!''

''அவர் பொண்ணுதானே! உங்க தம்பி மனைவி! ஒருவேளை அவங்க ஏதாவது?''

''இருக்காது தனா. கனி நல்ல பெண்! முதுகில் குத்தமாட்டாள். தவிரவும் கல்யாணத்திற்குப் பிறகு தந்தை மகளுக்குள் பேச்சுவார்த்தைக் கிடையாது.''

''வேறு எந்த வழியில் ஸார் நாம் கோட் பண்ணிய தொகை தெரிந்து இருக்கும். கட்டாயம் நாங்க கோட் பண்ணும் போது யாராவது பார்த்து இருக்கணும்.''

உலுக்கிய படி நிமிர்ந்தான் ஜெய். அன்று டிஸ்னிக்கு மெயிலை அனுப்பும் போது கம்ப்யூட்டர் ஸ்கிரீனை வெறித்தபடி ஜனனி அவன் அறையில் இருந்தது நினைவிற்கு வந்தது. ஜனனி? நீயா? உன்னிடம் இருந்து இப்படியொரு இழி செயலா? ஆனால் நம்பமுடியவில்லை.

''சரி நீங்க போங்க'' என்றான் ஜெயநந்தன். தனா சாந்தமான முகத்துடன் வெளியே வந்தார்.

அவர் மனதில் வன்மம் புகைந்தது. சரயாவில் பதினைந்து வருடமாய் வேலை பார்த்தும் தன் மனைவியின் உடல் நிலைமைக்கென விடுமுறை எடுத்திருந்தார். ஒரு முக்கியமான ஆர்டர் அதனால் கை நழுவிப் போய் விட்டது. அதனால் மிகவும் கடிந்து கொண்ட சீனிவாசன் அவர் மனைவிக்கு உடல் நலமில்லையெனப் பண உதவி கேட்க அதையும் மறுத்து சீரியஸ் என்று வந்த டெலிபோன் தகவலையும் மறைத்து விட, மனைவியை இழந்த வேதனையிலே அங்கிருந்து வேலையை விட்டார் தனசேகர்.

பிள்ளைகளின் எதிர்காலம் சூன்யமானது. இத்தனை வருட உழைப்

பிற்கு எந்தப்பலனும் இன்றிப்போகவும், உரிய நேரத்தில் தகவல் தெரிவிக்காததால்தான் தன் மனைவி இறந்து போனார் என்ற கோபத்தில் போய் குமுறினார்.

உன்னால் ஏற்கனவே எனக்கு நட்டம். அன்னைக்கு நீ போய் இருந்தால் மேலும் நட்டமே ஆகி இருக்கும். இப்போயென்ன உமக்கும் மனைவியிடம் இருந்து விடுதலைதானே!

அன்பான மனைவி இறந்த வேதனையைத் தாங்க இயலாமல் துடித்தாலும் சீனிவாசனை எப்படியும் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்துடன் தான் ஜெய்யிடம் வேலைக்குச் சேர்ந்தார்.

அப்போதுதான் ஜனனி முதல் புராஜக்ட் துவங்குவதாய் இருந்தது. ஜனனியின் திறமை பற்றி அவர் அறிந்ததே! இருப்பினும் சீனிவாசனுக்குப் பாடம் புகட்ட வேண்டும் எனும் நினைப்பில் தோழியின் திருமணத்திற்கென அவன் ஊட்டி சென்ற நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டார்.

கூலிப்படையிடம் பேசி அவளைக் கடத்தி 5 நாட்கள் வைத்து விட்டால் அந்தக் கான்ட்ராக்ட் போய் விடும். தொழிலில் அது சீனிவாசனுக்குப் பெரிய சரிவு என்று தோன்றிட, தன் திட்டத்தினை செயல்படுத்திடவும் செய்தார். ஆனால் தான் இதில் சம்பந்தப்பட்டு இருக்கிறோம் என்று தெரிந்தால் சீனுவிடம் இருந்து தப்பிக்கும் அளவிற்குத் தனக்கு ஆள்பலம் இல்லை என்பதனால் கூலிப்படையிடம் ஜெய்கிராபிக்ஸ் எம்.டி. என்று கூறினார்.

அப்படிப் பின்னாளில் ஏதும் பிரச்சனையெனில் ஜெய் சமாளித்துக் கொள்வான். தவிரவும், தொழிலில் ஆயிரம் போட்டி இருப்பினும் யாரையும் பகையாளியாய் எண்ண மாட்டார் நேசன். ஆனால் ஜெய் இளரத்தம் சரியான நேரத்தில் தூண்டி விட்டால் அவன் மூலம் நிச்சயம் சீனிவாசனை அடக்கி விட முடியும் என்ற நினைப்பில் தான் அவர் செய்ததே!

அதுவும் வேற மாதிரி ஆகிவிட, இப்போது கனிமொழியை கெட்டவள் ஆக்கிவிட்டால், சீனிவாசனுக்கு கட்டாயம் கோபம் வரும் அது அவனுக்கு மட்டுமின்றி அவன் பெண்ணின் வாழ்வையும் புரட்டிப்

"அந்த ஹாஸ்பிட்டல் நர்ஸை ஒஹோன்னு பாராட்டுறியே ஏன்?"

"குளுகோஸ் பாட்டில்ல கொஞ்சம் சாராயம் கலந்து ஊத்துவாங்கடா!"

-எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.





போடும் என்ற எண்ணத்தில் தான் அவர் ஜெய்யிடம் பேசினார்.

ஜெயநந்தன் அதைப் பெரிதாய் எடுக்கவில்லையென்றதும் சப்பென்று ஆகிவிட்டது. தனசேகருக்கு! நினைப்பதெல்லாம் நடந்து விட்டால் வாழ்வில் வேறு நிலையே இல்லையே?!

ஜெய்யின் நிலைமையோ முற்றிலும் மாறுபட்டதாய் இருந்தது. என்ன முயன்றும் கனிமொழியை அவனால் குற்றவாளியாய்க் கருத முடியவில்லை. கள்ளமில்லா அந்தக் குழந்தை முகமும், பெரியத்தான் என்று அன்போடு அழைத்து உபசரிக்கும் பாங்கும்.!

அவள் அன்பு கட்டாயம் போலியாய் இருக்க வாய்ப்பில்லை. அதைவிடத் தம்பியின் காதல் மனைவி! இதில் சிறு சந்தேகம் என்று கோடிட்டுக் காட்டினால் கூட அவர்களின் குடும்ப சந்தோஷமே அழிவது போல்! எனவே தொழிலைக் காட்டிலும் குடும்பமே பெரிது என்றெண்ணிக் கனிமொழியிடம் கேட்கும் நினைப்பை விடுத்தான் ஜெயநந்தன்.

## 10

சுரேஷும், கனியும் ஹனி மூன் கிளம்பத் தயாராயினர். அவர்களின் செமஸ்டரும் முடிவடைந்த நிலையில் ஸ்விஸ்சிற்கு இரண்டு டிக்கெட்டுகள் புக் பண்ணித் தந்த போது கனியின் முகத்தில் இருந்த மகிழ்ச்சியும் அது பொய்தானென்று அடித்துச் சொல்லியது.

பெரியவர்கள் காலில் விழுந்து ஆசீர்வாதம் பண்ணிடச் சொன்னாள் கனிமொழி!

"எங்க ஆசீர்வாதம் உனக்கு எப்பவும் உண்டும்மா!"

"வரோம் அத்தை, மாமா!"

"பார்த்தும்மா!"

"அத்தான்! கிளம்பட்டுமா?!"

"ம்.. சுவிஸில் என் பிரண்டு இருக்கான். உங்களுக்குத்தேவையான உதவிகளை அவன் செய்வான் டேக் கேர்!"

"தேங்க்ஸ் அத்தான்!"

அவர்கள் சந்தோசமாய் விடைபெற ஏர்போர்ட் வரை விட்டு வருவதாய்க் கூறி ஜெய்யும் உடன் சென்றான்.

"கனி!"

"என்னத்தான்?"

"நீ ஹனிமூன் போவதைப் பற்றி உன் அக்காவிடம் சொல்லி விட்டாயா?"

"ம்... சொன்னேன். ஆனா அக்காவுக்கு ஏதோ முக்கியமான வேலை இருப்பதால் வர முடியாதுன்னு சொன்னாங்க?"

"ம்.. புது ஆர்டர் கிடைச்சி இருக்கே?!"

அதுவும் ஏமாற்றித் தட்டிப் பறித்த ஆர்டர் ஆயிற்றே?!"

''ஏமாற்றினாளா? என்ன சொல்றீங்க அத்தான்?''

''டிஸ்னின்னு ஒரு குழந்தைகள் சானல் எங்க கிராபிக்ஸ் சம்பந்தப்பட்ட எல்லா கம்பெனிக்குமே வந்தது. நான் தரமான குறைவான தொகை கோட் பண்ணி இருந்தேன். ஆனா அதை அவங்க கம்பெனிக்குத் தந்திட்டாங்க.''

''அது எப்படி அத்தான் ஏமாற்றம் செய்ததாகும்!''

''பாதிக் கதைதானே சொல்லி இருக்கிறேன் கனி! அன்று உங்கள் ரிசப்சனின் போது உங்க அக்கா என் ரூமில் இருந்தாங்க. அப்போதான் நான் அந்த தொகை கோட் பண்ணி மெயிலில் அனுப்பினேன்.''

''அத்தான்! பிளீஸ் உங்களை எதிர்த்துப் பேசறேன்னு நினைக்காதீங்க. அவ ரொம்பவும் நல்லவ! யாரையும் அழிச்சு முன்னுக்கு வரணும்னு நினைக்க மாட்டா. இது அவளுடைய திறமைக்குக் கிடைச்சதா இருந்தா மட்டுமே அவதிருப்தியா ஈடுபடுவா...!''

அவன் முகத்தில் எழுந்த நம்பகமில்லாத தன்மையைக் கண்டவுடன், ''நம்புங்க அத்தான். அக்கா ரொம்பவும் நல்லவங்க! அப்படியே எந்தத் தவறு நடந்து இருந்தாலும், கண்டிப்பா அதுக்கு அக்கா காரணமா இருக்க மாட்டா! சட்டுன்னு கோபப்படாம கொஞ்சம் யோசிங்க அத்தான். நான் வேணும்னா அக்காகிட்டே பேசறேன்.''

''வேண்டாம்மா! எத்தனை இக்கட்டுக்குப் பிறகு நீயும், சுரேஷும் இப்போது தான் சந்தோஷமாக வாழ்க்கையைத் துவங்கப் போறீங்க. எந்த யோசனையும் இல்லாம நிம்மதியா இரு! இப்ப கூட நான் இதைப் பற்றி பேசி இருக்க மாட்டேன்.''

அவள் ஏதும் பேசவில்லை. பேசிவிட்டோமோ என்ற உறுத்தலில் சுரேஷிடம் கேட்டான்.

''கனிக்கு அவங்க அக்கான்னா ரொம்ப இஷ்டம்ண்ணா! ஆனா உண்மைக்கு எதிரா நடக்க மாட்டா. எனக்குக்கூட ஜனனியைப் பார்த்தா தவறோ, துரோகமோ செய்யறவளா நினைக்க முடியலை!''

ஜெய்யின் மனமும் குழம்பிப் போய் இருக்கிறதே!

அவர்கள் கிளம்பிடவும் ஜெய்யும் கிளம்பினான். ''ஜனனி! உன் விஷயத்தில் மட்டும் என்னால் எந்த முடிவும் எடுக்க முடியவில்லையே! நீ என்னை விட்டு விலகிப் போகிறாய் என்பதே நிதர்சன உண்மை'' ஒரு பெருமூச்சோடு காரைக் கிளப்பினான் ஜெயநந்தன்.

இங்கே ஜனனியின் நிலையும் அதுவேதான். வேலைக்கு நடுவில் தங்கையைப் பார்க்க முடியவில்லையே என்ற ஆதங்கம் இருந்தது. அவளும் ஹனிமூன் போய் விட்டாள் இனி, திரும்பி வரும் வரையில் ஜெய் வீட்டிற்கும் போகவும் முடியாது.

அதற்கு நடுவில் சுதனின் வரவிற்கென அப்பா மேற்கொண்ட ஆர்ப்பாட்டங்கள் எல்லாமே ஒரு வித எரிச்சலைக் கொண்டு வந்தது ஜனனிக்கு! அவன் விஷயத்தில் அப்பாவுக்கு இத்தனை ஆர்வம் ஏன் என்று புரியவில்லை?!

இரவு எல்லோருக்கும் பொது தான். ஆனால், அது ஒவ்வொருவருக்கும் ஒரு விதமாய்?! சிலருக்கு இன்பமாய், இதமாய், சிலருக்கு,



துன்பமாய் துயரமாய் இப்படி நீளும். ஆனால் எதிர்வரும் விடியலை ஆனந்தமாய் ஏற்றுக் கொண்டபடியே இரவு உறக்கத்தைத் தழுவுகிறார்கள் மனிதர்கள்.

பைல்களோடு சுதன் தங்கி இருந்த ஹோட்டலில் அமர்ந்திருந்தனர். சுதனும், ஜனனியும்! தந்தை ஏதோ முக்கிய வேலை என்பதை காரணம் காட்டி அவளுடன் வருவதை தவிர்த்து விட்டிருக்க, இவள் மட்டுமே வந்திருந்தாள். சுதனின் பார்வையும், தோற்றமும் கண்ணியமாக இருந்தாலும், ஏதோ உள்ளர்த்தம் இருப்பது போல் தோன்றியது ஜனனிக்கு!

அதிக அலட்டல் இல்லை, புன்னகை ததும்பும் முகம், வசீகரன் தான், பேசும் விதம், இவற்றிலும் ஒரு நேர்த்தி இருந்தது. எவ்வித பந்தாவும் இன்றி கருப்பில் காட்டன் குர்தா அணிந்திருந்தான்.

''வணக்கம் ஸார்''

''வணக்கம் ஜனனி! உங்கள் புராஜக்ட்ஸ் பார்த்தேன். ரொம்பவும் அற்புதம். இத்தனை சிறிய வயதில், அழகு, திறமை, அடக்கம் எல்லாம் ஒரே மாதிரி அமைந்து இருப்பது எல்லாருக்கும் வாய்க்காது.''

''நன்றி ஸார்''

''உங்கள் திறமைக்கு இதுவும் ஒரு நல்ல தீனியாக இருக்கும்.''

''இந்த வாய்ப்பை தந்ததுக்கு நன்றி ஸார்.!''

''அதற்கு உண்டான தகுதி உங்களுக்கு உண்டு ஜனனி! அதிலும் நன்றி நவில வேண்டியது நான் தான்''

அவள் புரியாமல் பார்த்தாள்.

''இன்றைய அவசர உலகில் நாம் சொல்ல வந்த விஷயம் பற்றி உணரக்கூட நேரம் இருப்பதில்லை. போட்டியும் அதிகம். அப்படியிருக்க, இதிகாசக் கதைகளை கார்ட்டூனா எடுக்க எப்படி தோணித்து?''

''ஜனனி! ஒரு நாட்டின் பெருமையையும், சிறப்பையும் தெரிந்து கொள்ள மனிதனால் படைக்கப்பட்டது தான் வரலாறு. அதை இன்றைய சூழ்நிலையில் யாரும் தெரிந்து கொள்ள விரும்புவதில்லை. சினிமா நட்சத்திரத்தின் வாழ்க்கை வரலாற்றை அறியத்துடிக்கும் ஆர்வம் நம் நாட்டு மக்கள் பெருமகான்களைப் பற்றி அறிவதில்லை! வரலாறு என்றாலே தேவையில்லாத விஷயம், போர்! என்று பேசுவதே இன்றைய இளைஞர்களுக்கு பேஷனாய் போய் விட்டது. அதை மாற்ற வேண்டும் என்று மனதில் ஓர் எண்ணம்.''

''படிக்கும் ஆர்வம் குறைந்து போனதால் புத்தகங்கள் அலங்காரப் பொருள் போலாகிவிட்டது. சரி இனிவரும் தலைமுறையாவது சிறுவயதில் இருந்தே இதிகாசக் கதைகளை அறியட்டுமே! அதுதான் கார்ட்டூன் மூலம் உலவ விடலாம் என்று இருக்கிறேன்.''

''நல்ல யோசனை ஸார்! என் மனதில் இன்னுமொரு கான்சப்ட்!''

''கமான், டெல் மீ!''

''ஸார் அடிப்படை கல்வியில் அறிவில் அதாவது 2 முதல் 10 வரை உள்ள பிள்ளைகள் தான் கார்ட்டூனை விரும்பிப் பார்க்கிறார்கள். அதனால் சின்ன குவிஸ் மாதிரி, இப்போ ரீசன்டா ஆக டோரா தி எக்ஸ்ப்

ளோரர், சூப்பர் ஐ இம்மாதிரி ஷோவில் எல்லாம் ஸ்டோரி டெல்லிங், சின்ன சின்ன கணக்குகள், பழமொழி என்று நல்லா போகுது. அதை விடவும் பெட்டராய் குழந்தைகளை கவரும் வகையிலும், அவர்களுக்கு பயனளிக்கும் வகையிலும் ஒரு கான்ஸப்ட் வடிவமைத்து இருக்கிறேன்.''

''இஸிட்!''

''இது அதோட க்ாப்பி'' என்று ஒரு சி.டி.யை தந்தாள்

''ஓஹோ..! தரம் இருப்பின் வாய்ப்பு நிச்சயம் ஜனனி.'' அவன் ஆர்டர் பண்ணிய பீஸாவையம், கோக்கையும் சாப்பிட்ட பின்னர். சுதன் அக்ரிமெண்ட் பைலை நீட்டினான். ''அமௌண்ட் பற்றி உங்க அப்பாவிடம் பேசி விட்டேன். இப்ப நீங்க தந்த புராஜக்ட்டுக்கு நாம் தனியா டீல் பேசிக் கொள்ளலாம்.''

''தாங்க்ஸ் ஸார்! ''அவன் அக்ரிமெண்டில் பார்வையைப் பதிக்க, அவள் போனில் வந்த அழைப்பை ஏற்க சற்றே நகர்ந்து போனாள்.

''கங்கிராட்ஸ்! ஒருவழியாய் இதையும் தட்டிப் பறித்து விட்டாய்?!''

''ஜெய் நீங்களா? நானே உங்க கிட்டே இதைப் பற்றி பேசனும்னு நினைச்சேன். பெரிய புராஜக்ட். நான் செய்யப்போகிறேன். ஜெய்! கண்களில் ஒளி மின்னிட சாதிக்கப்போகிறோம்'' என்ற துள்ளலோடு அவள் பேசிட,

''நான் உன்னைத் தோற்கடித்து வெற்றி பெற்று விட்டேன் என்று மட்டம் தட்டி மார்த்தட்டிக் கொள்கிறாயா?''

''நீங்க என்ன சொல்றீங்கன்னு எனக்குப்புரியலை ஜெய்?!''

''நல்லா நடிக்கிறே ஜனனி...! உன்னிடம் இருந்து இத்தகைய துரோகத்தை நான் எதிர்பார்க்கவில்லை?!''

''துரோகமா? புரியும்படி பேசுங்கள்.''

''உன்னை நம்பி நான் செய்ததற்கு ஒரே விநாடியில் ச்சே!'' அவன் மேற்கொண்டு பேசும் முன் சுதன் அருகில் வந்தான்.

''யார் ஜனனி?''



''ஒரு புடவை எடுக்க இத்தனை கடைகள் ஏறி இறங்கிறியே ஆதிகாலத்தில் ஏவாள் ஒரே ஒரு இலையைத் தான் சுற்றி இருந்தாளாம்''

''அந்த இலையை பறிக்க அவளும் பல மாதங்கள் ஏறி இறங்கி இருப்பாள்''

-சிவ.ராமலிங்கம்,
தூத்துக்குடி



''என் உறவினர் ஜெயநந்தன்.''

''அவர் நம்ம கிளைண்ட் தான். நானும் பேசவா?'' மொபைல் வாங்கி பேசினான்.

''ஹலோ ஸார்! ஐயம் சுதன் டிஸ்னி'ஸ் எம்.டி. பிரம் மும்பை.''

''ஐயம் ஜெயநந்தன். ஜெய் கிராபிக்ஸ் ஜி.எம்.''

''உங்க அப்பாவை நல்லாத்தெரியும். இப்போ கூட உங்க கொட்டேஷன்ஸ் மெயிலில் வந்தது.''

''எஸ் ஸார். அனுப்பியிருந்தேன்.''

''பை திவே மேடம் தான் நெக்ஸ்ட் புராஜக்ட் பண்ணப்போறாங்க.''

''ம்.. அழகும், திறமையும் உள்ள யங்கேர்ள் இல்லையா? அவ சாதிப்பதற்கு இன்னமும் நிறைய இருக்கு.''

''குட் மிஸ்டர். ஜெயநந்தன். நம் நட்பு தொடர வேண்டும். கட்டாயம் உங்களின் பொன்னான நேரத்தை வீணாக்கிட நான் தயாரா இல்லை. பை ஸார்!''அவளிடம் போன் தரப்பட பை ஜனனி! ஏளனமான அவன் மொழியும், வெறுப்பை உமிழும் குரல் தொனியும் ஜனனியைக் குழம்பிடச் செய்தன.''

அதன் பிறகு, சுதன் பேசிய எந்தபேச்சிலும் மனம் ஒட்டவில்லை.

சுதனோ அவன் வளர்ந்த விதம், தொழில், எதிர்காலம் என்றெல்லாம் பேசிட வெறுமனே தலையை மட்டும் அசைத்து வைத்தவள். ஒரு கட்டத்தில் ''ஸார் நான் கிளம்பிட வேண்டும்.'' என்று அவசரமாய் அக்ரிமெண்ட் சைன் பண்ணிவிட்டு கிளம்பினாள்.

''நான் டிராப் பண்ணட்டுமா? ஜனனி!''

''இல்லை. நான் காரில் தான் வந்தேன்.''

''ஷெல்ப் டிரைவிங்கா குட்!''

''இதென்ன ஆச்சரியம் ஸார்! உங்கள் மும்பையில் பார்க்காத பெண்களா?!''

''இருந்தாலும் சில விஷயங்கள் நமக்கு எப்போதுமே ஸ்பெஷலாய்த் தோன்றுமே?! அதைப் போல்தான் நீங்களும் எனக்கு''

''ஸாரி ஸார்! நான் வரேன் ஸார்.'' அவனிடம் இருந்து விடை பெற்று திரும்பினாள். அவள் எதிர்பார்த்தது போலவே தந்தையும் அவள் வரவை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டு இருந்தார் போலும், அவரின் உற்சாகத்தில் கலந்து கொள்ள முடியாமல் போனது ஜனனியால், ஜெய்யின் வெறுப்பை உமிழும் பேச்சை நினைக்க நினைக்க வண்டாய் குடைந்து கொண்டே இருந்தது.

என்ன துரோகம் செய்துவிட்டேன் நான்! எதைத்தட்டிப்பறித்தேன். ஆனால் அவனுமே இந்த புராஜக்ட்டுக்கு கொட்டேஷன் தந்திருப்பதாய் சுதனும், தந்தையும் சொன்னது நினைவிற்கு வர, ஆனால், இவ்வாய்ப்பை தான் அவனிடம் இருந்து தட்டிப்பறிக்கவில்லை தானாகவே கனிந்த வா்ய்ப்பு அல்லவா! இதில் கோபப்படவோ, பொறாமைப்படவோ என்ன இருக்கிறது?'' என யோசித்தாள்.

## 11

மறுநாள் காலை சுதனை முன்தினம் சந்தித்த விவரங்களையே மறந்து போனாள்.

ஆர் யூ பிரீ என்று மொபைலில் வந்த மெஸேஜைக் கண்டதும், புதிய எண்ணா யிற்றே? திரும்பவும் ''ஹூ ஆர் யூ'' என்று கேட்டு ரிப்ளை செய்தான்.

பதிலுக்கு சுதன் என்ற பதிலோடு கூடவே அழைப்பும் வந்தது.

''ஓ... வெரி ஸாரி! ஸார் உங்கள் நம்பரை இன்னமும் செல்லில் பதியவில்லை''

''இட்ஸ் ஓகே ஜனனி! நான் உங்க கான்சப்ட் பார்த்திட்டேன். அதைப்பற்றி பேசிட ஓட்டலுக்கு வரமுடியுமா?''

''இப்பவா மணி 8.30 ஆகிவிட்டதே!''

''ஸோ வாட்? மும்பையில் விடிய விடிய பெண்கள் வருவார்கள்''

''இது சென்னையில்லையா?!''

''ஓ.கே .நான் உங்கள் வீட்டுக்கு வரலாமா?''

சில நொடிகள் தயங்கினாள். ''உங்களுக்கு விருப்பம் இல்லையெனில் வேண்டாம்''

''தாராளமாய் வாருங்கள். ஆனால் முகவரி மற்ற விபரம் நீங்கள் இந்த பகுதிக்கு புதிது இல்லையா?''

''ஜனனி ஏதோ கனவில் உள்ளீர்களா? மதியம் சந்திப்பிலேயே சொன்னேனே. நானும் சென்னை வாசிதான். தொழில் நிமித்தம் வெளியூர் சென்று 12 வருடங்கள் ஓடிவிட்டன! என்று!''

''ஸாரி! ஸார் நினைவிருக்கு! ஆனால், பன்னிரெண்டு வருடங்களில் நிறைய இடம் மாறி இருக்கும் என்றுதான்!''

''கவலையை விடுங்கள்! முகவரி உள்ளது நான் வந்து விடுவேன். இன்று டின்னர் உங்களுடன் தான்!'' அவன் இணைப்பை துண்டிக்க இவளுக்கு ஆயாசமாய் இருந்தது. ஜெய்யிடம் பேசிய பிறகு சுதன் பேசிய எவ்விவரமும் அவள் நினைவில் இல்லை. அந்தளவிற்கு ஜெய் அவள் மனம் முழுவதுமே வியாபித்து இருக்கிறான்.

''சந்தர்.....!''

''என்னம்மா?''

''சமையல் முடிஞ்சிட்டதா?''

''ஆச்சும்மா, வெஜ் மஸ்ரூம் சூப், நெய் தோசை, காரசட்னி, வெங்காய அடையும், மிளகு சாம்பாரும் செய்து ஹாட்பாக்ஸில் போட்டு மேஜையில் வைத்து இருக்கிறேன்''

''அப்பா எங்கே?''

''இன்னும் வரலைம்மா! நான் கிளம்பட்டுமா? நேரமாகுது. எம் பொண்டாட்டி சீக்கிரம் வரச்சொன்னாம்மா.'' அவன் தலையை சொறிய



''சரி போங்க!'' என்று தந்தையின் எண்ணிற்கு தொடர்பு கொண்டாள், சுதன் வருவதையும் அறிவித்தாள்''

''நான் வெளியே பழைய நண்பன் வீட்டில் இருக்கேன்மா! இங்கேயே டின்னர் முடிச்சிடுவேன்''

''நான் மட்டும் எப்படிப்பா? சந்தர் கூட இல்லையே''

''ஸோ வாட்? நீ யென்ன பட்டிக்காட்டு பெண்ணா? தொழில் நிமித்தம் எத்தனையோ பேர்களை சந்திக்க வேண்டியது இருக்கும். அப்படியிருக்கும் பட்சத்தில் இது ஒண்ணும் பெரியவிஷயமே இல்லையே? நீ பேசிகிட்டு இரு நான் கூடிய விரைவில் வந்து ஜாயின் பண்ணிக்கிறேன்''

அவரும் இணைப்பைத் துண்டித்துவிட்டார். முதன்முதலில் அந்நியன் ஒருவன் வீடு வருவதும் தந்தை அதை ஊக்குவிப்பதும் இதுவே முதல் முறை!

எதற்கும் இருக்கட்டுமேயென்று அலுவலக அறையை பார்வையிட்டாள். அதுவும் சற்றே ஒதுங்கிய இடம் என்பதால், அதை விடுத்து ஹாலிலேயே பேசலாம் என்று மோடாவை இழுத்து லேப்டாப் சின்ன பைல் அடங்கிய கவர் குறிப்பேடு என எடுத்து வைத்ததும், தான் இரவு உடையில் இருப்பது தோணிற்று!

பீரோவைத் திறக்க, பல உடைகளை கடந்த பார்வை அந்த வெள்ளை சல்வாரில் நின்றது. ஜெய் அவளுக்கென தேர்வு செய்த உடை அதை அணிந்து கொண்டாள் அவனே துணை நிற்பதைப் போல் இருக்கும் என்ற எண்ணத்துடன் அதையே அணிந்தாள்.

கலைந்திருந்த கூந்தலை ஒரு கிளிப்பினால் அடக்கினாள். முகம் கழுவி, இலேசாய் பவுடர் ஒற்றி, மெரூன் நிற ஸ்டிக்கரை ஒட்டினாள்.

கண்ணியமும், கூடவே ரம்மியமான தோற்றம். ஹாலில் காத்திருக்கலானாள். வாசலில் ஹாரன் ஒலி கேட்டது. கதவைக் கடந்து வந்தவள். இருளில் நடந்து வந்த உருவம் ஏற்கனவே பழகியது போல் இருகக, வியப்புடன் கவனிக்க வந்து நின்றது வேறு யாரும் இல்லை ஜெயநந்தன்தான்!

அவளுள் இன்ப அதிர்ச்சி.

டெலிபதி என்று சொல்லுவார்களே?! அதைப் போல நாம் யாரை நினைக்கிறோமோ அவரே கண்முன் வருவார் என்பதைப் போல!

''வாங்க!'' எதிர்பாராத சந்திப்பு என்பதால் தடுமாறினாள்

''அழையா விருந்தாளி! பூஜை வேளைக் கரடி என்றாலும், அழைக்கிறாய். அடித்துத் துரத்தாமல்!''

''ஏன்? இப்படி பேசுகிறீர்கள்?''

''போதும்! வேஷம்? இரவு நேரம் அந்நியன் வரவிற்காய் அலங்கரித்துக் கொண்டு நிற்கிறாய்? இதைவிட!''

''ஸ்டாப் இட் ஜெய்? வருவது அந்நியன் அல்ல''

''ஓஹோ.... நெருக்கமானவரோ?'' அவன் குத்தலில் அவள் பொறுமை பறக்க.

''தொழில் நிமித்தம் பேசவே சுதன் இங்கு வருவதாய் சொல்லி

இருக்கிறார்'' என்று விளக்கியவளுக்கு மேலும் ஒன்று உறைத்தது. சுதன் வருவது இவனுக்கெப்படி தெரியுமென்று!

அவளின் எண்ணம் அறிந்தவன் போல் ''அவன் வந்த வண்டி வழியில் மக்கர். நான்தான் அவரை அழைத்து காரோட்டி வந்தேன்'' என்றான் வியப்புடன்.

''சரி அதற்கு ஏன் இத்தனை வெறுப்பு? சுதன் எங்கே?''

''பயப்படாதே! வருவான். முதல் சந்திப்பில் வெறுங்கையோடு காணக் கூடாதம்! மறக்க முடியாத ஒன்றைத் தர பொட்டிக்கில் இறங்கினார்.

சுதனின் வருகையை இவன் விரும்பவில்லையா? இத்தனை பொறாமை உள்ளம் படைத்தவனா ஜெய்? அவர்கள் பேச்சை தடை செய்யும் வகையில் உள்ளே வந்தான் சுதன்.

''நைஸ் ஈவ்னிங் ஜனனி'' என்று ஒரு மலர்க்கொத்தை நீட்டினான்.

நெருப்பென கனன்ற விழிகளோடு நின்ற ஜெய்யிடம் ஒரு பார்வையை திருப்பி பின் சுதனிடம் நன்றி என்றாள்.

''மிஸ்டர், ஜெய்நந்தன் இல்லையென்றால் நான் வந்தே இருக்க முடியாது. நைஸ் மேன்!''

''அப்போ நான் கிளம்பறேன் சுதன். உங்கள் இருவருக்கும் இடையில் நானேன்? இந்த இரவு சுவாரஸ்யமாய் இருக்க வாழ்த்துக்கள்!'' என்றான் ஆங்கிலத்தில்!

''நீங்களும் எங்களுடன் ஜாயின் பண்ணலாமே? என்ன ஜனனி?''

''ஆமாம்! ஜெய் பிளீஸ்!'' அவன் முன்னர் எந்த பிரச்சனையும் காட்ட வேண்டாம் கூடுமானவரையில் ஜெய் அருகில் இருந்தாலவாது உண்மையை உணருவானே என்று அழைத்தாள்.



''துடைப்பமும் கையுமாக எங்கே கிளம்பி விட்டீர் மந்திரியாரே?''

''நீங்கதானே அவசர ஆலோசனைக்காக அரசவையை கூட்டச் சொன்னீங்கள் மாமன்னா''

-சிவ.ராமலிங்கம், தூத்துக்குடி.

''பரவாயில்லை, நீங்கள் பேச ஆயிரம் விஷயங்கள் இருக்கும். தொழில் நிமித்தமாய்'' அவன் பேசியபடி நடக்க, பின்னாலே ஓடினாள் ஜனனி!

''கனியை கேட்டதாய் சொல்லுங்கள். ஜெய் சுதன் வந்திருப்பது தொழில் விஷயம். கற்பனை வேண்டாம் நான் உங்களிடம் சில விஷயங்களை பேச வேண்டும். எங்களுடன் இருங்கள்''

''எனக்கென்ன வேறு வேலையில்லையா? ஏன் உன் தந்தையே அனுமதிக்கும் போது இடையில் நான் யார்? பெண்களை நம்பாதே என்று எழுதி வைத்தது எல்லாம்





உண்மைதான். நேரம் தாழ்த்தாதே உன் சுதன் கோபிக்க போகிறான்!''

கோபமாய் நடந்தவனின் கோபம் அர்த்தமில்லாதது. அங்கே சுதன் காத்திருப்பது நினைவிற்கு வர வேகமாய் நகர்ந்தாள்.

''வெல்கம் ஸார்''

''அவர் உங்கள் உறவினரா?''

''ஆமாம் என் தங்கை கணவரின் அண்ணன்''

''இஸிட்? நீங்கள் ஒரே பெண் என்று நினைத்தேன்''

அவள் சூப்பைப் பருக பறிமாறினாள்.

''தேங்க்ஸ்''

''நான் சென்னையில் பிறந்தவன் தான் ஜனனி! அம்மா மும்பையில் பேமஸ்காஸ்ட்யூம் டிசைனர்! அம்மாவின் கைவண்ணம், அவார்டுகள் கூட நிறைய வாங்கி இருக்கிறார்கள். அப்பா ஆர்ட் டைரக்டர் ஸோ, இயல்பிலேயே கலையார்வம் எனைத் தொற்றிக் கொண்டது. மும்பை கலாச்சாரம் பற்றிய பயமோ என்னவோ? நான் இங்கே ஹாஸ்டலில் தான் என் மேற்படிப்பை முடித்தேன். அதோடு சேனல் துவங்கும் ஆர்வம் உண்டானது''

அதில் பத்தாண்டுகள் வெற்றிகரமாய் லீட் பண்றேன். இந்த குழந்தைகள் சேனல் தொடங்கி இரண்டு ஆண்டுகள் ஆகிறது. வீட்டில் திருமணம் பற்றி பேசுகிறார்கள். ஆனால் நான் இன்னும் ஒப்புக் கொள்ளவில்லை''



''இந்த கடிதத்தை கொண்டு போய் உன் அக்காவிடம் கொடு உனக்கு 1 ரூபாய் தருகிறேன்.''

''100 ரூபாய் கொடுத்தால் டெலிவரி ஆகும். இல்லேன்னா போய்ட்டே இரு விலைவாசி உயர்வு தெரியாது போல''

-சிவ.ராமலிங்கம், தூத்துக்குடி

அவனின் அத்தனை பேச்சிற்குமே.

''ம்...'' கொட்டினாள் ஜனனி.

''ரொம்பவும் போரடிக்கிறேனோ?''

''நோ... நோ... நத்திங்''

''நீங்கள் காதல் திருமணங்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் ஜனனி!''

''நினைப்பதற்கு ஒன்றும் இல்லை வெற்றியடைந்தால் நலம். இல்லையேல் நரகம்!''

''உங்களுடைய திருமணம் எப்போது?''

''நான் சாதிக்க வேண்டியது இன்னமும் நிறைய இருக்கு சார்''

''ஜனனி! ஒன்று கேட்டால் தப்பா எண்ணக் கூடாது. கண்டதும் காதல் உருவானால் இது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?



அதை நாம் நேசிப்பவர்களிடம் எப்படிச் சொல்வது?''

அவனின் ஒவ்வொரு கேள்வியும் ஜெய்யை நினைவூட்டியது.'' அன்பை சொல்லிதான் உணர வைக்க வேண்டுமெனும் அவசியம் இல்லை ஸார்! காதலும் நேசமும் உண்மையென்றால் அது நேசிப்பவர்களை கட்டாயம் சென்று அடையும்''

பேச்சு எங்கெங்கோ திசை திரும்புவதைப் பற்றி உணர்ந்த அவள் ''ஸார் நேரமாகிறது டின்னர் சாப்பிடலாமே?''

''இன்னும் கொஞ்ச நேரம் பேசலாம்! அதற்குள் உங்கள் தந்தையும் வந்திடுவார். சரி உங்க சேனல் புராஜர்ட் பார்க்கலாமா?''

''ஷ்யூர்!'' அவள் லேப்டாப்பை இயக்கினாள்.




''நான்கு சிறுவர்கள் டீம் கொண்ட ஸ்கிரிப்ட் ஒவ்வொரு ஊராக பயணம் போகும்போது வழியில் சந்திக்கும் விஷயங்கள்! அதில் சிறுசிறு ஆங்கில வார்த்தைகள், அதன் உச்சரிப்பு அர்த்தம், சிறிய கணக்குகள், பொது அறிவு கேள்விகள் படம் வரைதல் என்றும், ஒரு மணி நேரம் பயணுள்ளதைப் போல, எபிசோட் முடியும் பத்து நிமிடம் இருமுயல்கள் கதை பேசுவது போல் நல்ல மெஹேஜ் உடன் திருக்குறளைக் கூறி முடிப்பதைப் போல் இருக்கு''

வண்ணங்களும், பங்கு பெறும் கார்ட்டூன் கதாபாத்திரமும் பின்னணி இசையும் இடமும், பேச்சும் வெகுவாய் கவர்ந்தன. சுதன் பிரமிப்பாய் பாராட்டினான்.

''கிரேட் ஜனனி! உங்கள் தந்தை சொன்னபோது கூட நான் இத்தனை எதிர்பார்க்கவில்லை, அற்புதம். இந்த எபிசோட் நல்லபடியால் வரும் என்று நம்பிக்கை வந்துவிட்டது. பர்ஸ்ட் இம்ப்ரஸன் இஸ் ஏ பெஸ்ட் இம்ப்ரஷன்! நான் அடுத்த 15-ந் தேதி விஜயதசமியில் இருந்தே ஒளிபரப்பலாம் என்று இருக்கிறேன். ஆனால், நேரம்தான் யோசிக்க வேண்டும். மாலையில் ஒளிப்பரலாமா ஜனனி? இல்லை காலை நேரம் உசிதமா?''

''ஸார்! இது குழந்தைகளுக்காய் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சி! காலை நேரம் வேண்டுமானாலும் மறுஒளிப்பு செய்துக்கலாம். மதியம் 3 மணிக்கு பிறகுதான் குழந்தைகள் ஸ்கூல் விட்டு வருவாங்க. கொஞ்சம் பிரேக் அப். அப்புறம் படிப்பு இப்படி எல்லாம் முடிஞ்சு பிரி ஆவறதே 7 மணிக்கு மேல்தான். அதிலும் 7 முதல் 8 வரை எல்லா சேனலிலும் நியூஸ் மட்டும்தான்.''

''ஸோ லேடீஸின் சீரியல் போயிடுமேன்னு கவலை இல்லை. தவிரவும், மாலையில் விளையாடும் சிறிது நேரமும் ஏன் டிவிபெட்டி முன்பு அமர வேண்டும். 7 -8 ரிலாக்ஸா டின்னர் சாப்பிட்டுடே பார்க்கலாமே!''

''குட் ஜனனி. நல்ல ஐடியா. இதிகாசக் கதைகள் பற்றி பேசி னோமே? என்ன கதைகள் போடலாம் அதையே நீங்கள் சொல்லிவி டுங்கள்''

''ஸார்! ராமாயணம், மகாபாரதம், விநாயகர் என்று எல்லாமே காட் டூனில் வந்துவிட்டது. அதனால, விக்கிரமாதித்தன், தெனாலிராமன் இவை இரண்டிலுமே, சிந்தனைத் தூண்டும் கருத்துக்கள்- சுவாரஸ்ய மான கதைகளுடன் முடிவுரையில் தலைவர்களின் சிறு முன்னுரை போடலாம். அதன் பிறகு மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டிய மன்னர்களைப் பற்றி செய்யலாம். உங்க சாய்ஸ் என்ன?''

''விளையாட்டும்... விஷயமும் ஒண்ணா போய் சேரணும்ன்னா. நீங்க சொல்ற விக்ரம், தெனாலிராமன் கதைகள் தான் பெஸ்ட். ஆனா இதையெல்லாம் எப்படி கலெக்ட் பண்ணுவீங்க?''

''கவலையை விடுங்க புத்தகங்கள் சிறந்த நண்பன்! வளர்ந்து வரும் இண்டர்நெட் உலகம் படிப்பதை நிறுத்திடுதுன்னு சொல்றாங்க. ஆனா, அது பொய்? நெட் மூலம் கவின்மீடியா, போன்ற நல்ல வெப்ஸாம் இருக்கு அதைச் செய்வோம்''

''எனக்கு இப்பவே நம்பிக்கை வந்துவிட்டது. எப்போ ஆரம்பிக் கப் போறீங்க''

''நாளைக்கே''

''எனி ஹெல்ப்! அமௌண்ட் எதும் தேவைப்பட்டால், இதோ நிரப்பப்படாத செக்லீபை.'' நீட்டினான்

''நன்றி ஸார்''

அதேநேரம் சீனிவாசனும் உள்ளே நுழைந்தார். அதன்பிறகு அவர் கள் இருவரும் சுவாரஸ்யமாய் பேசிட இவள் உறக்கம் வருகிறது என்று நகர்ந்தாள். ஜனனியின் மனம் மட்டும் ஜெய்யிடம் போய் மண்டியிட் டது.

அங்கே அவன் நிலையும் அதுவேதான் போலும்! ஆனால், தேவை யின்றி மனம் குடைந்து கொண்டிருந்தது.

சுதனின் மேல் அவன் கோபம் பொங்கியது. அந்த புராஜக்ட் கட் டாயம் தனக்கே கிடைக்க வேண்டியது. ஆனால் அதுயெப்படி ஜன னிக்குப் போய் சேர்ந்தது? அதுவும் நான் கோட் பண்ணிய தொகை யில் இருந்து சரியாய் 50000 ரூபாயைக் குறைத்து...! அங்கேதான் நெரு டலாய் இருந்தது. அதிகம் தொகை எதிர்பார்க்கிறார்கள் என்று சில புரா ஜக்ட்டுக்கள் இங்கே வந்திருக்கிறது சூர்யாவில் இருந்து அப்படியிருக்க ஒருவேளை இது கனி பேசியதைப் போல் ஏதேச்சையாய் நடந்து இருக் குமோ! ஆனால், தனா சொல்லியது என்பதையும் யோசிக்கத்தான் வேண்டும். அங்கே வேலை பார்த்தவர் எனும் முறையில் அவரின் கணிப்பில் தவறில்லைதான். அதிலும் சீனிவாசன் இருக்கிறார் போய் முடித்துக் கொண்டு வந்து இருக்கிறார் என்றால்....! யோசிக்க வேண் டிய விஷயம்தான்!

அன்று சுரேஷ்- கனியின் வரவேற்பு விழா முதல் நாளே அலுவல கம் செல்ல இயலாமல் போய்விட்டது. தனா சொல்லியிருக்காவிடில்



மெயில்கூட மறுநாள் தான் அனுப்பி இருந்திருக்க முடியும்! அன்று டிஸ்னி சேனலுக்கு மெயில் அனுப்பிடத்தான் அறைக்கு வந்தது அங்கே ஜனனியைப் பார்த்ததும் மெயில் கோட் பண்ணியது தான் தவறு! அப் படியெனில் அவள் தானே சொல்லியிருக்க வேண்டும். இது துரோ கம் இல்லையா?

முதுகில் குத்திவிட்டு, சின்ன உறுத்தல் கூட இல்லாமல் அந்த சுதன் வந்திருக்கும் போது என்னையும் வரவேற்கிறாள். நடுரோட்டில் இருக் கிறானே என்று அக்கறைப்பட்டால், காரில் அமர்ந்து கொண்டு அவன் ஜனனியைப் பற்றி புகழ்ந்து பேசுவதும், சீனிவாசனிடமும் அவன் அன் னையிடமும் பேசி சம்மதம் பெற்று விட்டதாகவும் சொல்ல, ஜெய்க் குப் பற்றிக் கொண்டு வந்தது.

அதைவிடவும் ஜனனிக்கும் தன் மேல் ஈடுபாடு இருக்கலாம் என்று சுதன் சொல்லியபோது உள்ளுக்குள் எழுந்த கோபத்தைக் கட்டுப்படுத் தச் சிரமப்பட்டான். ச்சே! ஜனனியா இப்படியென்று!

நீலகிரியில் நம்முள் பூத்த நேசமெல்லாம் மறைந்துவிட்டதா? என் அன்பை உணரவில்லையா? அல்லது வேண்டாமென்றே முடிவு கட்டி விட்டாளா? இருப்பினும் இவ்விஷயத்தில் அவள் நடந்து கொண்டது தவறுதான், அவன் மனம் உறுதியாய் நின்றது.

இரவு, இவற்றையெல்லாம் கவனித்தபடியே நகர்ந்தது.

சுரேசும் கனிமொழியும் 20 நாட்கள் கழித்து ஹனிமூன் முடித்து வந்திறங்கினார்கள். ஆரவாரமாய் வரவேற்றுத் தழுவிக் கொண்டது குடும்பம். பாசமான விசாரிப்புகள் வேறு!

''விடுங்கம்மா! நாங்க என்ன குழந்தைகளாம்மா? பெரிய மனுஷ னாயிட்டோம்...''

''என்னடா சொல்றே?'' அம்மா யோசனையாய்க் கேட்க,

''அம்மா உக்காருங்க!''

கனிமொழி வெட்கத்தில் சும்மாயிருங்க என்று அவன் கைபிடிக்க,

''விடு! கல்யாணம் ஆயிட்டாலும் நான் அம்மா பிள்ளைதான். நீ வாம்மா! உங்க மருமக இருக்காளே! போன வாரம் திடீர்னு மயக்கம் போட்டு விழுந்துவிட்டாள். ஒரே வாந்தி''

''அச்சச்சோ! அப்புறம் டாக்டரிடம் அழைத்துப் போனாயா?''

''ம்... டெஸ்ட் பார்த்தார்கள்''

''ரிசல்ட் என்னடா?''

''அது அம்மா. உனக்கு மட்டும் ஏன் நரைமுடியில்லை?''

''மை தடவுவான்!'' அப்பா இடக்காய்ப் பேச,

''சும்மாயிருங்கள். டாக்டர் என்ன சொன்னார்?''

''உங்கள்ள எல்லாம் ஆட்டிப்படைக்க யாரோ ஒருவர் வரப்போ வதாய்... அவ்வளவுதான்!'' பார்வதி குழந்தையாய் துள்ளிக் குதிக்க, குடும்பம் மொத்தமும் சந்தோஷத்தில் ஆழ்ந்தது. ஜெய் தம்பியின் கையைப் பற்றிக் குலுக்கினான்.

''வீட்டுக்கு சொல்லியாச்சா?''

''இல்லே முதல்ல நம்ப வீட்டுல எல்லார்கிட்டேயும் சொல்லிய

பிறகுதான் அக்காவிடம் பேச வேண்டும் என்று!''

''சரி. ரெஸ்ட் எடு, நான் போய் உனக்கு புரூட்ஸ் வாங்கிட்டு வர்றேன்'' ஜெய் நகர, இளைய தம்பதி புன்னகைத்துக் கொண்டார்கள். ஜனனி தவறு செய்து இருப்பாள் என்று சகோதரன் சொல்லியதும், சுரேஷும் நம்பவில்லை! எனவே இருவரும் ஹனிமூன் சென்ற இடத்திலேயே அதைப் பற்றிப் பேசவும் செய்தார்கள்



''திருட்டு முழிமுழிச்சுக்கிட்டு வெளியே ஒருவர் நிற்கிறாரே யார் அவர்?''
''அவர்தான் இந்த வீட்டு மாப்பிள்ளை''
-சிவ.ராமலிங்கம்.
தூத்துக்குடி.

''சுரேஷ்! அக்கா அப்படிப்பட்டவள் இல்லை. ஆனா பழியோ சந்தேகமோ ஒன்று வந்தபிறகு நிவர்த்தி செய்ய வேண்டியது என் கடமை இல்லையா? ஏற்கனவே நம்ம கல்யாணத்தில் நடந்த விவகாரத்தில் ரொம்பவும் மனது உடைந்து போய்விட்டாள் தான். இப்போ புராஜெக்ட்டில் வெற்றி பெற்றாலும் பழிதான்! அது ஜனனி-அத்தானின் எதிர்காலத்திற்கு நல்லது அல்ல!''

''என்னது ஜனனி அத்தானா? என்ன சொல்றே?''

''எனக்கென்னமோ ஜனனியும் உங்க அண்ணனும் ஒருத்தரை ஒருத்தர் விரும்புறாங்களோன்னு தோணுது''

''எதை வெச்சு சொல்றே?''

''ரஞ்சன் வீட்டில் அவங்க நம்மமைப் பற்றி பேசியதை விடவும் பூடகமா ஏதோ பேசினாங்க! அவர்களுடைய பார்வையில் என்ன இருந்ததுன்னு என்னாலே அப்போ யூகிக்க முடியலை, ஆனா வீட்டுக்கு சீர் கொண்டு வந்தப்போ அதுவரையில் இயல்பா பேசிகிட்டு இருந்த உங்க அண்ணன். ஜனனி வந்த பிறகு பேசவே இல்லை. ஜனனியின் பார்வை அவர் மேலேயே இருந்தது ஆனா மறந்து கூட இரண்டு பேரும் பேசவே இல்லை''

''அப்புறம்?''

''நானென்ன கதையா சொல்றேன்?'' அவன் தாடையில் இடித்தாள்

''இப்படி நீ அடிப்பதையெல்லாம் மொத்தமாய்க் கணக்கில் வைத்து என் பிள்ளைகளிடம் சொல்கிறேன் இரு!''

''சமர்த்து! அதன்பிறகு, நம் ரிஷப்ஷன் அன்று மேடையில் ஜனனியும், ஜெய் அண்ணாவும் நடந்த விதம், ஆடை அணிகலனோடு இருவரும் ஒன்றாய் நிற்க, அவள் வெட்கியதும், அண்ணாவும் பார்வையால் தழுவியதையும் வைத்துச் சொல்கிறேன். யாராவது தன்மனச் சந்தேகத்



தைப் போக்கி ஜனனி தவறு செய்யவில்லை என்று சொல்லிட மாட்டார்களா எனும் ஆதங்கம் இருந்தது''

''பாரேன்! கனி நான் எதையுமே கவனிக்காமல் லகான் பூட்டிய குதிரை மாதிரி உன்னை மட்டுமே பார்த்திருக்கிறேன்.''

''அப்பாவிதான் நீங்கள். இப்போ இவர்கள் இருவருக்கும் உள்ள கசப்பு என்னவென்று!''

''அது அய்யாவுக்குத் தெரியுமே?''

''இஸிட்!''

''ம்... முன்னோர் எவ்வழியோ பின்னோர் அவ்வழி! பெண்களைத் தேடி அலையும் பிள்ளைகள், அன்று பெரியவன் இன்று இவனா? என்று உன் அப்பா பேசினாரே? அது என்னவென்று விசாரித்தேன். அப்போதுதான் சொன்னான். அவன் நடந்தவற்றை விளக்கினான்''

''இத்தனை நடந்திருக்கிறதா நீலகிரியில்? ஜனனி இதைப்பற்றி சொல்லவே இல்லையே? இது ஒரு சின்னபிளவு? சுரேஷ் நாமதான் எப்படியாவது தீர்க்கணும்''

''அது நம்மால் ஆகாது. ஒரேயொரு ஆள்தான் பேசமுடியும்''

''யாரது?''

''என்தங்கை வித்யா. அவ மனது வைத்தால் நாம நினைத்த காரியம் நடக்கும் நைட் வெப்பில் அவளுடன் பேசுவோம் சரியா?''

சொன்னது போலவே இரவு வித்யாவைத் தொடர்பு கொண்டு விஷயத்தைத் தெரிவிக்க, ''நான் இந்தியாவிற்கு வரும் போது அதைப்பற்றி விரிவாய் பேசுவோம்'' என்றாள் வித்யா!

''ஒரு வழியா உன் அண்ணனும் தன் இணையைக் கண்டுபிடித்து விட்டான் போல்!'' கணவன் ரவி வித்யாவின் தோளைப் பற்றினான்.

''ம்... ஏதோ குழப்பம் இருக்கும் போல!''

''காதல் என்றாலே குழப்பம் இயல்புதானே! பார் நான் அந்தக் கல்யாண வீட்டிற்கு வந்திருந்து உன்னைக் கண்டு பிடித்துப் போய் நல்லா மாட்டிக் கொண்டேன். அவனாவது குழப்பிக் கொள்ளாமல் ...''வார்த்தையை முடிக்கும் முன் முதுகில் அடித்தாள் வித்யா..

''கொழுப்பா! இதை முன்பே யோசித்து இருக்க வேண்டும். ரவி! நாம இப்போ இந்தியா போகிறோம்.''

''விசாவுக்கு அப்ளை பண்ணனும்?''

''யாருக்கு?''

''உனக்கு நிகரா இன்னும் ஒன்னை பிக் அப் பண்ணிட!'' அவள் மறுபடியும் கையைத் தூக்கிட

''வேண்டாம் தாயே? பீஸாவும் பர்கருமாய்த் தின்று தெம்பா இருக்கே. என்னாலே அடிவாங்க முடியாது. உண்மையைச் சொல்லணுன்னா வாழ்க்கையை அனுபவிக்கிறது பெண்கள் தான் தெரியுமா?''

''எப்படி?''

''குழந்தைகள் பள்ளிக்கு போய்விட, கணவனை அலுவலகம் துரத்திவிட்டு ஹாயா கால்மேல் கால் போட்டு சீரியல் பாக்குறீங்க?''

''ஸ்டுப்பிட் புருஷா! வேலைன்னு வெளியே போயிட்டா அதுக்கு

ஒரு குறிப்பிட்ட நேரமிருக்கும். அதேமாதிரி நேரத்தோட நாங்க வேலை பண்ண முடியாது. ஒரு வேலை முடிய மற்றொன்னு வரிசையில் நிற்கும். ரொட் டீன் ஒர்க். வீட்டிலே சும்மாதானே இருக்கேன்னு ஈஸியா சொல்றீங்க. ஆனா ஓய்வு இல்லாத அலுவலகம்தான் வீடுன்னு புரியலை''

''பெண் எத்தனை படிச்சு முன்னேறினாலும், அவளை இன்னும் பாமரத்தனமாய் இந்தச் சமூகம் பார்க்குது ஒரு சில வீடுகளில் பாரேன். தன் மருமகள் நிறைய திறமைகளோடு இருந்தாலும் அதை எல்லாம் பெரிசா எடுக்கமாட்டாங்க. ஆனா சாம்பார் வைக்க தெரியலைன்னா ருத்ரதாண்டவம்தான். பெண்களுக்கென்னு தனியா சிலதை ஒதுக்கி அவங்க மேலே திணிச்சு..!''

''எங்கேயோ ஆரம்பிச்சு பேச்சு எங்கேயோ நிக்குது வித்யா!''

''இன்னொரு கதை சொல்றேன் கேளுங்க!''

''கடவுள் இந்த உலகை சிருஷ்டிக்கும் போது ஆண் பெண் என்று இரண்டு உருவங்கள் செய்யப்போகிறேன். தைரியமும், தன்னம்பிக்கையும் எதையும் தாங்கும் மனவலிமையும் உடைய பெண்களையும், உடல் வலிமையும், பொருள் சேர்க்கும் திறன் உடைய ஆண்களையும் படைக்கப் போவதாய் சொன்னாராம்''

''அந்த மாதிரி பெண்கள் எப்பவுமே மனோதிடம் மிக்கவர்கள். எந்த சூழ்நிலையிலும் அவளால் வாழ முடியும்''

''அம்பேல்!'' ரவி கையைத் தூக்க புன்னகைத்தாள் வித்யா.

இப்படி எல்லாரும் சேர்ந்து ஜெய்- ஜனனியைச் சேர்க்கும் முயற்சியில் இருக்க, அவர்கள் இருவரும் விலகியே நின்றனர்.

## 13

நாட்கள் மெல்ல நகர்ந்தன. ஊமையாய் மனம் சுற்றியலைந்தாலும் ஜெய்யின் நினைவு ஜனனியை பாடாய் படுத்தியது. கனி மாதமாய் இருப்பது அறிந்து வீட்டிற்குப் போக ஜெய் முகம் திருப்பிட மிகவும் நொந்துதான் போனாள். நூறு கத்திகள் கொண்டு உடலைக் கீறுவதைப் போல் எரிந்தது.

அவன் மட்டுமே அப்படி! மற்றபடி கனியுடன் போனில் பேசும் போது பார்வதியும் நேசமும் அன்போடு பேசி வீட்டிற்கு அழைப்பது உண்டு. மனம் சும்மா இருந்தால் மட்டுமே ஆற்றுப்படுகுழியாய் எண்ணங்கள் மூழ்க செய்துவிடும். எனவே வெறித்தனமாய் உழைத்தாள் உண்ண உறங்கக் கூட நேரம் இன்றி!

அம்மாதிரி சமயங்களில் சுதன் கோபித்தான்! இத்தனை ஸ்ட்ரெயின் வேண்டாம். ரிலாக்ஸா வெளியே போகலாம்! என்றால், ஏதாவது காரணம் காட்டி மறுத்துவிட்டாள். திரும்பவும் ஜெய்யின் கண்களில் மாட்டுவதை விரும்பாமல்!



ஆனால், சுதனோ மாலை நேரம் அலுவலகம் வந்து அன்பாய் அனுசரண்ணயாய் பேசுவான். ''பிளீஸ் சுதன்! உங்க அன்பு புரியுது. இது மும்பை இல்லை சென்னை. இங்கே ஆணும் பெண்ணும் நெருங்கி பழகினால் தேவையற்ற பேச்சுகள் வரும்''

''அப்போ நான் வரவே கூடாதா ஜனனி...!'' என்பான் பாவமாய்! அப்படியும் கேளாமல், அவளை கவனிக்க பெண் ஒருத்தியை ஏற்பாடும் செய்தான்.

அவன் அன்பு அவளை திக்கு முக்காட செய்தது. அப்படியே ஒரு முறை அலுவலகத்தில் முதல் 15 நாட்கள் எபிசோடுகளைப் போட்டுக் காட்ட அற்புதமாய் வந்துவிட்ட பூரிப்பில் பாராட்டுதலோடு ஜனனியின் தோளைப் பற்றி வாழ்த்து சொன்னான் சுதேன். சரியாய் அந்நேரம் உள்ளே நுழைந்தான் ஜெயநந்தன்.

ஒரு விநாடியில் திகைத்து மெல்ல சுதனிடம் இருந்து பின்வாங்கி ''வாங்க ஜெய்! ''என்று அமர இருக்கையைக் காட்டினாள்.

''அம்மா இதை உன்னிடம் தரச் சொன்னார்கள்''

''என்னது?'' ஆவலாய் அவள் வாங்கிப் பிரிக்க சுதனும் அருகில் வந்தான். உள்ளே இனிப்பும் காரமுமாய் பட்சணங்கள்.

''வாயும் வயிறுமா இருக்கும் உன் தங்கைக்கு செய்தது உனக்கும் பிடிக்கும் என்று கனி சொன்னாள். அம்மா தரச்சொன்னார்கள், நீயென்னமோ அவர்களையே நினைத்து உருகிக் கொண்டு இருப்பதைப் போல்! உனக்கு ஆயிரம் வேலைகள் இருக்கும். அது புரியாமல் என்னை விரட்டினார்கள்.''

''நன்றி! நான் அத்தையிடம் பேசுகிறேன்''

அவன் ஒரு வெறித்த பார்வையோடு நகர, ''கனி எப்படி இருக்கிறாள்?''

''இதே அக்கறை இருந்தால் நேரில் வந்து பார்க்கலாமே''

''ஜெய் புரிந்து கொள்ளுங்கள்! என் வேலை அப்படி!''

''ஓகே டீ யுவர் டியூட்டி!'' அடிக்குரலில் சீற்றலாய் சொல்லவிட்டு கிளம்பினான்.

இப்படிப் புரியாமல் பேசி என்னைக் காயப்படுத்துவதால் என்ன கிடைத்து விடப்போகிறது. ஜெய் உங்களுக்கு? தனக்குள்ளேயே வேலையைப் போட்டுக் கொண்டு அவனும் வேதனைப்பட்டு என்னையும் வேதனைப்படுத்துவது எந்த வகையில் நியாயம்? தவிப்போடு மறுபடியும் வேலையைத் துவங்கினாள் ஜனனி!

உல்லன் நூலையும் ஸ்வெட்டர் பின்னும் கம்பியையும் கொண்டு வந்து தந்தான் ''சுரேஷ் என்ன சுரேஷ் இது?''

''பிள்ளை உண்டான பெண்கள் ஸ்வெட்டர் பின்னுவது வழக்கம்''

''எனக்கு பின்னத் தெரியாதே?''

''அம்மாகிட்டே கேளுடியர்!''

அந்நேரம் மானேஜர் தனசேகர் உள்ளே நுழைந்தார்.

''தம்பி''

''வாங்க மானேஜர்!''

''வாங்க அங்கிள்!''

''நல்லாயிருக்கியாம்மா!''

''ம்.... அமுதா, கீர்த்தி சுகமா? இப்போ இரண்டு பேரும் காலேஜ் போறாங்க இல்லே?''

''ஆமாம்மா.. அப்பா இல்லையா?''

''இருக்கார்!..நான் காபி எடுத்து வர்றேன். இலேசாய் மேடிட்ட வயிற்றைப் பற்றியபடி நடந்தாள்

நேசன் வரவும் மரியாதை நிமித்தம் எழுந்து நின்றவரை மீண்டும் அமரச் செய்தார்.

''என்ன விஷயம்? ஸார்!''

''நீலகிரியில் எஸ்டேட் ஒன்று விலைக்கு வருது. நாம இரண்டு பேரும் போய் பார்த்து விட்டு வரலாம். மதியம் நீங்கள் ஆபீஸ் போக வேண்டாம். இரவு பயணத்துக்கு ஏற்பாடுகளைச் செய்யுங்கள்''

''சரி ஸார்!''

கனி தந்த காபியைக் குடித்துவிட்டு நன்றி சொல்லிக் கிளம்பினார்.

அவர் மனதில் சொல்லொண்ணா கோபம் கிளர்ந்தது. சீனிவாசனின் இரண்டு மகள்களும் நல்ல நிலையில் இருக்கிறார்கள். பெரியவள் தொழிலில் நிலைத்து விட்டாள். சின்னவளுக்குத் திறம்பட வாழ்க்கை அமைந்துவிட்டது. ஆனால், என் மனம் மட்டும் மனைவியை எண்ணிப் படாதபாடு படுகிறது. சரி! அவர் செய்த பாவத்திற்குக் கடவுள் தண்டனை தரட்டும்! பெருமூச்சோடு வெளியேறினாள்.

தனசேகர்!

விதியானது ஏமாளி அல்லவே! நாம் வேண்டாம் என்று எதை ஒதுக்குகிறோமோ அதை நம்மிடம் தந்து விளையாடிப் பார்ப்பது தானே அதன் வேலை! அப்படித்தான் நடக்கும் ஆனால் அநேக விஷயங்களுக்கு உண்டான விளக்கங்களைப் புரிய வைக்க முடிவதில்லை என்பதே நிதர்சன உண்மை.

தனசேகர் அப்படித்தான். சீனிவாசனைக் கெடுக்க வேண்டும் என்று எண்ணியவை எல்லாமே தோல்வி அடைந்துவிட்ட நிலையில், இனியேதும் வேண்டாம் என யோசித்த போது பிரச்சனையில் மாட்டிக் கொண்டார்.

நீலகிரிக்கு வேலை விஷயமாய்ச் சென்றவர்கள் தங்கியஇடம் ஏற்கனவே ஜனனியைக் கடத்திச் சென்றவனின் இருப்பிடம் அருகில் குழந்தைகளுக்கு சில பொருட்களை வாங்கப்போன தனசேகரைக் கச்சிதமாய்ப் பார்த்துவிட்டு போலீஸ் ஸ்டேஷன் விரைந்தான்.

ஜனனி விஷயமாய் வாங்கிய அடிகள் அவனுக்குத் தானே தெரியும்? இன்றும் கூட என்றாகிலும் இன்ஸ்பெக்டர் விஜய் தன்னைத் தேடி வந்து கேள்வி கேட்கிறார். இந்த பகுதியில் இருந்து கொண்டே அவர்களைப் பகைத்துக் கொண்டு வாழ்வது முடியாத விஷயம். எனவே வேகமாய் ஓடினான் அவன்.

''அய்யா!''

அப்போது தான் யாரோ ஒரு கைதியை நையப்புடைத்துவிட்டு



வெளியே வந்த விஜய் மூச்சிரைக்க ஓடிவந்த அவனைக் கண்டதும் புருவம் உயர்த்தினான்.

''என்னடா கூப்பிட்டு விட்டா கூட வரமாட்டே! இன்னைக்கு ஓடி வர்றே? என்ன விஷயம்?''

''அய்யா, அந்த கிட்நாப்பிங் கேஸ்?''

''எது?''

''அதான்ய்யா! உங்க பிரண்ட் டால் காப்பாற்றப்பட்ட பெண்ணுன்னு என்னைப் போட்டுப் புரட்டி எடுத்தீங்களே? சென்னையில் இருந்து...!''

''ம்... சொல்லு என்ன விஷயம்?''

''ஸார்! அன்னிக்கு என்கிட்டே வந்து கடத்தல் செய்யச் சொன்ன ஆளை இங்கே பார்த்தேன்...''

''எங்கேடா?''

''இங்கே மௌண்ட் ஹோட்டல் வாசலில்''

''பொய் சொல்லலையே?''

''இல்லே ஸார்?''

''வா போகலாம்! டிரைவர் வண்டியை எடுங்க!'' விஜய் வேகமாய்க் கிளம்பினான்.

விஜய் சொன்ன போது நேசனால் நம்பவே முடியவில்லை. ஆனால் தனா குற்ற உணர்வுடன் தலைகுனிந்தபடி, நடந்த அனைத்தையும் உண்மை என்று ஒப்புக் கொண்டார்.

''ஏன் தனா? என் மகன் ஜெய் உங்களை நல்லாத்தானே கவனிச்சிக்கிட்டான். அவன் மேலே ஏன் பழிபோட்டீங்க?''



''கணவன் சாப்பிட்ட பின் தான் மனைவி சாப்பிடறாங்களே ஏன்?''

''சோதனை அடிப்படையில் கணவன் ஒரு கருவி அவ்வளவே''

-சிவ.ராமலிங்கம்,
தூத்துக்குடி.

''இல்ல ஸார்! சத்தியமா நான் தம்பி மேலே பழிபோட எதையும் செய்யலை. என் மனைவி இறக்கக் காரணம் சீனிவாசன்னு உங்களுக்குத் தெரியும். அந்தப் பொண்ணு பேரில் அந்த புராஜக்ட் துவங்கத் திட்டம் போட்டு இருக்காருன்னு தெரிஞ்ச உடனே நான் அதைத் தடுக்கத்தான் ஒரு இரண்டு நாள் அவளை வேறு இடத்தில் வைக்கலாம்னுதான் அப்படிப் பண்ணேன்.

அய்யா உங்களுக்கு ரொம்பவும் நல்ல மனசு! இதே சீனிவாசன் எத்தனையோ இடர்பாடுகள் கொடுத்த போதும், நீங்க ஒரு முறை கூட எந்த இடைஞ்சலும் தரலை! ஆனா ஜெய் தம்பி! இரத்தம் கொஞ்சம் வேகமும் ஜாஸ்தி.

அவர் மேலே பழிபோட்ட கட்டாயம் சீனிவாசனை உண்டு இல்லாம பண்ணிடுவாருன்னு நினைச்சேன். ஆனா அதுவும் பொய்யாய் போச்சு. அய்யா நான் இப்போ மனம் திருந்திட்டேன். ஆனா செய்தது தவறு என்று உணர்ந்து விட்டேன். அதற்கான தண்டனையை நான் அனுபவிக்கணும் ஸார்!''

''நீங்க போங்க. நான் உங்களை ஜாமீனில் எடுக்கிறேன்.''

விஜய் போன் செய்து சீனிவாசனிடம் விஷயத்தை சொல்லிட! அவர் மகளிடம் தெரிவித்தார்

''பார்த்தீங்களாப்பா! அவசரப்பட்டுத் தீரவிசாரிக்காம என்னென்னவோ பேசிட்டீங்க! இப்போ நிலைமையே தலைகீழாப் போச்சு! குற்றம் சாட்டுதல் சாதாரணமானது இல்லை. பழி போடும் போது அதைச் செய்யாத அவர் மனசு என்ன பாடுபட்டு இருக்கும்''

''தப்புதாம்மா! ஆனா என் நிலைமையில் இருந்து யோசிப்பாரு! ஒரு தகப்பனா நான் கோபப்பட்டது சரிதானம்மா?''

''அப்பா! ஒரு பிரச்சனைன்னு வரும்போது நம்மோட நிலைமையை போல அடுத்தவங்க நிலைமையும் யோசிக்கணும்பா!''

''உண்மைதாம்மா...! நான் அவசரப்பட்டுட்டேன்''

''இதில் மட்டும் இல்லேப்பா. கனிமொழி விஷயத்திலும் தான். அவமேல எத்தனை அன்போடு இருந்தீங்க? அவ என்னப்பா தப்பு செய்தா? நீங்களா ஏற்படுத்தித் தந்து இருந்தா கூட இத்தனை அருமையா வாழ்க்கையை ஏற்படுத்தி தந்து இருக்க மாட்டீங்க? அப்படியொரு அற்புதமான உறவுகளோட வாழ்த்துக்களோடு வாழ்ந்திட்டு இருக்கிறாள். இப்ப அவ உண்டாயிருக்காப்பா?''

''உண்மையாகவா?''

''ம்... நாங்க எங்க போனாலும் உங்க அன்பும் பாசமும் எங்களை வாழ்த்தும்ப்பா!'' அவள் நகர குழப்பத்தோடு நகர்ந்தார் சீனிவாசன்.

தந்தையின் மூலம் அத்தனை விஷயங்களையும் அறிந்து கொண்டனர் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும். சுரேஷ்- கனிக்கு அவர்கள் இருவருக்கும் உள்ள சில ஊடல்களில் ஒன்று மறைந்துவிட்டது. ஜெய்யின் மனமும் அப்படியே சந்தோஷப்பட்டது.

இதே போல் மற்றச் சிக்கலும் தீர்ந்துவிட்டாலும், அந்த இமெயில் கோட் பண்ணிய பண விவகாரம், இதற்கும் மேலாய் ஜனனி சுதன் விருப்பம் இவையெல்லாம் லேசில் தீருபவையா? திகைப்பும் வியப்புமாய் வேலையைக் கவனிக்க முனைந்தான்.

## 14

ஜனனியின் புராஜக்ட்டுக்கு நல்ல ஆதரவு இருந்தது. ஒரு சர்வேயில் பெற்றோர்களும் பிள்ளைகள் அதை விரும்பிப் பார்ப்பதாய் கூறியிருந்தான். ரேட்டிங்கிலும் முதலிடம் சந்தோஷமாய் பணத்தை தந்



தான் சுதன்.

''சாதிச்சிட்டீங்க ஜனனி? சந்தோஷமா இருக்கு, நான் ஊருக்குத் திரும்பறேன். முக்கியமான வேலை இருக்கு''

''ஓகே!''

''எத்தனையோ நாள் நான் உங்ககிட்டே சில விஷயங்கள் மனசு விட்டுப் பேசணும்னு அருகில் வந்தப்போ, ஏனோ அதற்கு நேரமே வாய்க்காம போயிடுச்சு! ஆனா நான் ஊரிலிருந்து வரும்போது கட்டாயம் ஒரு இனிப்பான செய்தியோடு வருவேன். வரட்டுமா'' ஜனனி புன்னகையுடன் விடையளித்தாள். சுதனுடன் ஏர்போர்ட் போகும் பொறுப்பைத் தந்தை ஏற்றார்.

''என்ன ஸார்? அமைதியா கிளம்பறேன் என்று நினைக்கறீங்களா?''

''நீங்களும் இன்னமும் பேசலை, என்னையும் பேச வேண்டாம்னு சொல்லிட்டீங்க?''

''இல்லே ஸார்! ஜனனி சாதாரணப் பெண்ணில்லே. நான் அவளிடம் என் விருப்பத்தை வெளிப்படுத்தும் தருணம் வித்தியாசமானதாகவும், அவளுக்கு இன்பம் தருவதாகவும் இருக்க வேண்டும். போட்டோவில் பார்த்தபோது அவள் உருவம் மட்டும்தான் ஈர்த்தது. ஆனால், இப்போ நேரில் பார்த்தவுடன், அவங்க அன்பும், திறமையும், வேலையில் துடிப்போடு நேரம் காலம் பார்க்காமல் செய்யும் பாங்கும். இதை விடவும் அவங்க பழக்க வழக்கமும் ரொம்பவும் கவர்ந்து விட்டது. அம்மாவிடம் நான் ஏற்கனவே பேசிவிட்டேன். நல்ல முடிவோடு வருவேன்''

நம்பிக்கையுடன் விடைபெற்றான் சுதன்.

வழியில் ஏதாவது ஸ்நாக்ஸ் வாங்கிப் போகலாம். ஜனனிக்கு ஐஸ்கிரீமும் வெஜ்ரோலும் பிடிக்கும் என்பதால் அருகில் இருந்த ஒரு கடைக்கு சீனிவாசன் செல்ல, அங்கே ஒரு நாற்காலியில் சுரேசும் கனிமொழியும்!

அவளின் புன்னகை நிறைந்த முகமும், பார்வையும் கண்களை நிறைத்தது. என்னதான் பிடிக்காத மகளாகப் போனாலும் பெற்றவன் கண்ணுக்குக் கண்ணாய் வளர்த்தவன் ஆயிற்றே! சுற்றுப்புறம் மறந்து இருவரும் ஒருவருக்கொருவர் ஊட்டி விடுவதையும் பிறகு கைத்தாங்கலாய் அரவணைத்து அவளை அழைத்துச் செல்வதையும், அவர்களிடையே நடந்த அந்நியோன்யமும் கண்டு, தாமாய் கண்கள் நிறைந்தன சீனிவாசனுக்கு.

நீங்களே ஏற்பாடு பண்ணினால் கூட, இந்த மாதிரி ஒரு நல்ல வாழ்க்கையை ஏற்படுத்தித் தர இயலாது என்று ஜனனியின் குரல் மோதியது செவிப்பறையில்! நிறைவோடு வீடு வந்தார் சீனிவாசன். அதே போல் சுதன்- ஜனனி திருமணமும் நடந்தேறி விட்டால் பெரும் பாரம் நீங்கிவிடும் என்று எண்ணினார்.

அடுத்த மாதத்திற்குத் தர வேண்டிய எபிசோட் வேலைகள் அனைத்தும் முடிந்து விடுபட்டுப்போன டப்பிங் வேலையைக் கவனிக்க அப்

போதுதான் முதல் பகுதிகளை பேசிய மல்லிகாவையே கேட்க வேண்
டும் என்று டப்பிங் தியேட்டர் சென்றாள். அழகான குழந்தைக் கண்டு
சில குழந்தைகளுக்கு குரல்களை தேர்வு செய்து கொண்டு இருந்தனர்.
மல்லிகா வைக்கண்டதும் "இந்த ஸ்கிரிப்ட் நீதான் பேசித்தரணும்.
எப்போ எவ்வளவு டைம் இருக்கும் சொன்னால் நல்லது!" என்றாள்
ஜனனி.

"ஸாரி மேடம் என்னால முடியாது!"

"இதென்ன மல்லிகா, அட்வான்ஸ் வாங்கி ஒப்புக் கொண்டாயே!
இப்போ முடிவடையும் வேலையில் மாறக் காரணமென்ன?"

"மேடம்! அது என்னோட பெர்ஸனல் மேட்டர் உங்களுக்குத்தான்
ஒப்பந்தப்படி ஒரு எபிசோட் முடிச்சிட்டேனே!"

"சரிம்மா! நீ ஒரு டப்பிங் ஆர்டிஸ்ட். உனக்கு நான் சொல்லிப் புரி
யவைக்கணுமின்னு இல்லே. போன முறை நீதான் பேசினே! இப்போ
வேற ஆளைப் போட்டா வாய்ஸ் டிபர் ஆகாதா? கொஞ்சம் யோசி
யேன்"

"ஸாரி மேடம்! இப்ப கையில் உள்ள வேலை முடிஞ்சதும் நான்
ஜெய்சார் கம்பெனிக்குப் போவதாய் ஒப்புக் கொண்டேன்"

"சரி! ஈவ்னிங் பேசேன். கண்டினியூடி விட்டுடும்மா!"

"நோ மேடம்! அது ஜெய் சாருக்குப் பிடிக்காதே?"

"கரெக்டா சொன்னே மல்லிகா. நீ கிளம்பி இருப்பேன்னு இல்லே
நினைச்சேன்!" பேசியபடியே உள்ளே நுழைந்தான் ஜெய்!

"இதோ இப்பவே கிளம்புறேன் சார்" பணிவுடன் அவளறைக்குச்
செல்ல..

"ஜெய்! ப்ளீஸ்... மல்லிகா! எனக்குப்பேசணும் கண்டினியூட்டி
விட்டுடும்.!"

"இதை அவளிடம் சொல்ல வேண்டியதுதானே!
நாளென்ன உன் அஸிஸ்டென்டா?" அவன் கிண்டலைப் பொருட்
படுத்தாமல்...!

"ப்ளீஸ் ஜெய்!"

" பிஸினஸில் ஒரே ஸ்கிரிப்டில் உயரம் தொட்டிருக்கும் பெண்
மணி நீங்கள் என்னிடம் போய்க்கொஞ்சலாமா?"

"என் வெற்றியில் உங்களுக்கு இன்பம் இல்லையா? அதைப்
பாராட்டி ஒரு வார்த்தை பேசக்கூடாதா?"

"நீ முறைப்படி தெரிவிக்கவில்லையே?"

"சொல்லி வாழ்த்த நீங்க அந்நியர் இல்லை!"

"நான் யார் ஜானு உனக்கு?" அக்கேள்வியில் ஒரு கணம் மனம்
குமிழியாய் உடைந்தாலும், "என் உறவினர் " என்றாள்.

"இதைக்கேட்டுப் புளித்து விட்டது. எங்கே உன் காதலன்?"

"மும்பை போயிருக்கார்!"

"அவன் பாராட்டினானா?"

" அவரிடம் வார்த்தைகளுக்குப் பஞ்சமில்லை, நல்லதைப் பாராட்
டாமல் இருக்கத்தியமனமும் இல்லை."



"பணத்திற்கும் பஞ்சமில்லை ஜனனி! அதை மறந்து விட்
டாயே?!"

"நான் பணத்திற்கு அலைபவள் இல்லை"

"பணம் யாரையும் மாற்றும் ஜனனி!"

"ஜெய்! பேசியே மனதைப் புண்ணாக்குகிறீர்கள்?"

"நீ செய்யவில்லை உன் அப்பாவின் பேச்சைக் கேட்டுக்கொண்டு!
இன்று உண்மை விளங்கிவிட்டதே!"

"தவறுதல் மனித இயல்பு ஜெய்!"

"அந்தத்தவறு மற்றவரை நோகடிக்காமல் இருக்க வேண்டும்
ஜனனி! எத்தனை காயப்படுத்தி இருப்பாய்? எல்லாவற்றிற்கும்
மேலாக.... உன்னை நம்பி உனக்கு நான் கோட் பண்ணினேன். நீ
மானிட்டரையே பார்த்துக்கொண்டு இருந்த போதும் நான் அதைப்
பற்றி பெரிதாக கவலைப்படவில்லை., ஆனால், நான் கோட் பண்ணிய
தொகையில் இருந்து சரியாய் 50 ஆயிரம் ரூபாய் குறைவாய் எப்படி
கோட் பண்ணினே? உன்னிடம் இருந்து இப்படியொரு துரோகத்தை
நான் எதிர்பார்க்கவில்லை ஜனனி!"

"அய்யோ! ஜெய் பண விவகாரம் பற்றி எதுவுமே தெரியாது! உண்
மையைச் சொல்லப்போனால், இதையெல்லாம் அப்பாதான் பார்த்துக்
கிட்டார். என்னுடைய புராடக்ட்ஸ் பார்த்துதான் அதன் இந்த
வாய்ப்பை தந்த தாய் சொன்னார்."

"பொய் சொல்லாதே?"

"இல்லே ஜெய்! என்னமோ ஆரம்பத்தில் இருந்த அன்பும் நேச
மும் இப்போது நம்மிடம் விடைபெற்றுக் கண்ணாமூச்சி ஆடுகிறது.
எப்பவும் நமக்குள் பிணக்கு ஏற்பட, அதைத்தெளிவுபடுத்த இயலா
மல், உங்களிடம் வார்த்தைச்
சாட்டைகளில் எத்தனை முறை
மனது ரத்தக்களறி ஆகி இருக்
கின்றது. தெரியுமா?"



"நர்ஸைக் கட்டிக்கிட்டது
தப்பாயிடிச்சா ஏன்?"

"முதலிரவின் போது
டம்ளரில் உள்ள பாலை மூன்று
வேளையாக பிரித்து குடிக்கச்
சொல்லி விட்டாள்"

-சிவ.ராமலிங்கம்,
தூத்துக்குடி.

அவள் விழிகளில் நீர் அவ
ளின் கண்ணீர் ஜெய்யின்
மனதை அசைத்திட "பை
ஜனனி" என்று சுருக்கமாக
விடைபெற்று தயாராகி வந்த
மல்லிகாவுடன் கிளம்பினான்
ஜெயநந்தன்.

"என்னமோ, ஏதோ தீவிர
மான விவாதம்? இரண்டு
பேரும் சேர்ந்து ஏதாவது அரசி
யல் கட்சி ஆரம்பிக்கப்போ
றீங்களா?"

" கனிக்கு ஏழாவது மாதம்.
வளைகாப்பு போடணும். தாய்

வீட்டுச் சீதனமாய்ச் செய்வது வழக்கம்.''

''அவங்க அப்பா இருக்கும் நிலைமையில் இது தேவைதானாம்மா?''

''அப்படியில்லப்பா! பிரசவங்கிறது ஒரு பெண்ணுக்கு மறுபிறப்பு, செத்துப்பிழைக்கிறது. அவ மனசிலே ஆயிரம் ஆசைகள் முளைக்கும் சிலது நியாயமானதாகவும், சிலது அல்பமானதாகவும் கூட இருக்கும். அதை நிறைவேத்தணும்பா. இப்போ நாமளே வளைகாப்பை விமரிசையா நடத்திடலாம். வித்யாவும் அடுத்த வாரம் வர்றதா சொல்லியிருக்கா,''

''பேஷா செய்திடலாம்.''

''முதல்ல புரோகிதர் பார்த்து நாள் கேட்டு பட்சணம் தயார் பண்ணணும், ரொம்பவும் நெருக்கமானவர்களை கூப்பிடணும், அந்தப் பொண்ணு ஜனனியையும் கூப்பிடணும்.''

''அதுக்கென்ன கூப்பிட்டா போச்சு!''

''என்னங்க?''

''அவ முதல்ல பிள்ளையாண்டு இருக்கா.. இந்த நேரத்தில பெத்தவங்க அரவணைப்பு வேணும். என்னதான் தாய்க்குத்தாயா நாம பார்த்துக்கிட்டாலும் அவ மனசு பெத்தவரை தேடும், அதனால அவர் என்ன பேசினாலும், அதைப்பெரிசா எடுத்துக்காம வளைகாப்பிற்கு கூப்பிடணும். அவர் வந்தால் அவ மனசும் குளிரும்.

''இது எனக்கு தோணுச்சிம்மா, மருமகளை மகளா பாவிக்கிற உன்னைக்கண்டா பெருமையா இருக்கு!''

'' நானும் ஒரு காலத்தில் மருமகளா இருந்தவ தானே 'அத்தே! கனிமொழி பெரியவளைக் கட்டிக்கொண்டாள்.

''மனசுக்கு ரொம்ப நிறைவா இருக்கு அத்தே. இத்தனை அன்பான உறவுகள் என்னைச் சுற்றி இருக்கும் போது, நிச்சயம் எனக்கு எந்தக்குறையும் வராது. நீங்க கிடைச்சதுக்கு நான் சுரேசுக்கும், கடவுளுக்கும் நன்றி சொல்லணும்'' அவள் பார்வதியின் தோளில் சாய்ந்து விம்மினாள்.

''உங்க உறவுகளை ஒரு முறையேனும் பார்க்கணும் ஜெய்'' என்று நீலகிரியில் ஜனனி தழுதழுத்த கண்களோடு கேட்டது நினைவிற்கு வந்தது.

''பாவம்!'' அவளும் இப்படித்தானே பாசத்திற்கு ஏங்கியிருப்பாள். பார்வதி மருமகளை அணைத்து ஆறுதல்படுத்தினாள்.

''சுதனின் போன். உன்கிட்டே ஏதோ பேசணுமாம்!''

''நீங்களே என்னென்னு கேட்க வேண்டியது தானே அப்பா!''

''உன்னிடம் பேச வேண்டுமென்று சொல்லும் போது நானென்னம்மா பேசிட?'' சுரத்தில்லாமல் தான் போனை வாங்கினாள். பேசப் பேச அவள் முகம் மலர்ந்தது.

''நலமா ஜனனி?''

''ம்.. நீங்க ஸார்?''

''ம்... எப்போ வருவேன்னு கேட்க மாட்டீங்களா?''



''உங்களுக்கு எத்தனையோ வேலைகள் இருக்கும். நான் எப்படிக்கேட்க?''

''கேட்டா சந்தோஷப்பட்டு இருப்பேன்''

''என்ன விஷயம் ஸார்? திடீர்னு போன் பண்ணியிருக்கீங்க?''

''நல்ல விஷயம் தான். தொண்டு நிறுவனம் ஒன்று ஸர்வே ஒன்று எடுத்தார்களே, அதில் உங்களுடைய ஸ்கிரிப்ட் முதலிடம். அதற்கு ஒரு அவார்டு உங்களுக்கு கிடைச்சிருக்கு!''

''இஸிட்?''

''உங்க திறமைக்குக்கிடைச்ச பரிசு ஜனனி இது. ரியலி ஐ விஷ் யூ கங்கிராட்ஸ்!''

''தேங்க்ஸ், உண்மையிலேயே நல்ல இனிப்பான செய்தி சொல்லி இருக்கீங்க.''

''அடுத்த 23-ந் தேதி நீலகிரியில் பங்ஷன்''

''நன்றி ஸார்!''

''நேரம் வாய்த்தால் போன் பண்ணுங்க,''

''அப்பா!''

''என்னம்மா?'' மகளின் சந்தோஷம் அவரை வியப்பிற்கு உள்ளாக்கியது.

''அப்பா...'' சுதன் சொல்லிய விபரத்தை சொல்ல!

''எனக்கு தெரியும்மா நீ கட்டாயம் ஜெயிப்பேன்னு! சுதன் வேற எதுவும் சொன்னாரா?''

''இல்லையே? ஏம்ப்பா! உங்ககிட்டே ஏதாவது...!''

''சும்மா கேட்டேன்...''

அவள் தன் அறைக்குச் செல்லவும் லேண்ட்லைன் போன் ஒலிக்கவும் சரியாய் இருந்தது.''

''ஹலோ...!''

'' அக்கா! நான் கனி பேசறேன்''

''ஏய் அப்பா இருக்கார்!''

''உன் மொபைல் எங்கே?''

''ஸாரிம்மா... சார்ஜ் போட்டு இருக்கேன். என்ன விஷயம்!?''

''அக்கா...!''

''ஏய்? ஏன் அழறே? உடம்புக்கு ஏதும் பண்ணுதா? என்னடி'' அவள் பதறினாள். திடுமென நடு இரவில் போனில் அழவும், மனம் தேவையில்லாமல் எதை எதையோ கற்பனை செய்தது.

''அக்கா... எனக்கு அப்பாவையும் உன்னையும் பார்க்கணும் போலயிருக்கு.''

''நான் கட்டாயம் வர்றேன்டா! ஆனா அப்பா...!''

அதே நேரம் மறுபடியும் போன் சத்தம் கேட்க, சுதனோ என்று தன் அறையில் அதே லைனில் உள்ள சீனிவாசனும், போன் எடுக்க, அக்கா தங்கையின் உரையாடலைக் கேட்க வேண்டிதாய்ப் போனது.

''எனக்கு இப்போ ஆறுமாசம். அத்தையும் மாமாவும் எனக்கு

வளைகாப்பு போடறதா சொல்றாங்க, இது தாய்வீட்டுச்சீர், ஆனா அம்மா இல்லாததால நமக்கு அந்தக்குறையே தெரியக்கூடாதுன்னு அத்தையும்,மாமாவும் என்னைக் கவனிக்கிறாங்க, இருந்தாலும் என் மனசிலேயும் ஏக்கம் இருக்கிறதைக் கண்டுபிடிச்சு, அதையும் நிறைவேற்ற நினைக்கிறாங்க.

ஏன்னா! வயிற்றுப்பிள்ளைக்காரியான எம் மனசு வருத்தப்படக்கூடாதுன்னு! அவங்க எனக்கு என்னோட நலன் மேல எத்தனை அக்கறை பார்த்தீயாக்கா? இதே அக்கறை நம்ம அப்பாவுக்கு என்மேல ஏனில்லை?''

''என்ன குறை இந்தக் குடும்பத்திலே? ஏன் இதை வெறுக்கணும்? ராணி மாதிரிதானே இருக்கேன்! அப்படியும் சீமந்தம் பண்ணும் போது என் மனசு வருத்தப்படக்கூடாதுன்னு உங்களையும் அப்பாவையும் இன்வைட் பண்ணணும்னு மாமாவும் அத்தையும் சொன்னாங்க. அப்பா இன்சல்ட் பண்ணுவாருன்னு தெரிஞ்சும் எம்மனசு வருத்தப்படக்கூடாதுன்னு! இதே பக்குவம் அப்பாவுக்கு ஏன் இல்லேக்கா?''

'' கனி! இந்த நிலைமையிலே நீ எதையும் நினைத்து கஷ்டப்படக்கூடாது.''

'' முடியலைக்கா! நான் நிம்மதியா இருக்கேன். ஆனா அப்பாவை பார்த்து பேசி ஆசிர்வாதம் வாங்க ஆசையா இருக்கு. அதனால ஒருயொரு முறை அப்பாவை என்னை வந்து பார்க்கச்சொல்லுக்கா!''

'' முயற்சி பண்றேன் கனி! கண்டிப்பா அப்பாகிட்டே பேசறேன்!''

'' அப்படியும் அப்பா வரலைன்னாலும் சரி! அது என் மனசிலே ஏக்கமா இருந்திட்டே போகட்டும். ஆனா மாமாவும் அத்தையும் வரும் போது கொஞ்சமேனும் மரியாதையோட நடத்தச்சொல்லுக்கா. நான் போனை வைக்கிறேன். அத்தை பால் குடிக்கக்கூப்பிடறாங்க.''



''உன் கணவர் ஒரு வாரமாய் ஊரில் இல்லையா''

''எப்படி கண்டுபிடிச்ச''

''உன் அழுக்கு டிரஸ், உப்பு சப்பில்லா உன் மதிய டிபன் காட்டி விடுகிறதே''

-நா.சுப்பிரமணியன்,
திருப்பாதிரிபுலியூர்

தமக்கையிடம் பேசிவிட்டுப் போனை வைத்த போது கனிமொழியின் பேச்சை அசைபோட்டது, இதைப்பற்றித் தந்தையிடம் பேசியே ஆக வேண்டும். எனும் எண்ணம் எழுந்தது. ஆனால் அதைக்காட்டிலும் சீனிவாசன் மனம் அடிபட்டு இருந்தது. மனைவி இறந்தபிறகு, மகள்களுக்காக வாழ்ந்து வந்தும் அவர்களின் விருப்பங்களை நான்தான் சரியாய்ப் புரிந்து கொள்ளவில்லையோ? என்



ஈகோவையும் வறட்டு பிடிவாதத்தையும் ஒதுக்கிவிட்டு நான் ஏன் என் பிள்ளைகளுக்காய் வாழக்கூடாது?

முடிவு எடுத்த பிறகு நிம்மதியாய் உறங்கினார் சீனிவாசன்.



விடியல் வெள்ளிப்பூக்களை அள்ளித் தெளித்தக் கொண்டு இருந்தது. இத்தனை விரைவில் அப்பா மனம் மாறி விடுவார் என்று எதிர்பார்க்கவில்லை ஜனனி! கனி பேசியதை அப்பாவிடம் சொல்லி கெஞ்சியேனும் அவரை அழைத்துச்செல்ல வேணடும் என்று எண்ணியிருந்தாள். சொன்னாற்போல தம்பதி சகிதம் அவர்கள் வந்தழைத்ததும் வருவதாய் ஒப்புக்கொண்டதோடு, நடந்து விட்ட தவறுக்கு மன்னிப்பும் கேட்டார். அப்பாவின் மனமாற்றம் நிறைந்த சந்தோஷத்தை தந்தது.

இருக்கும் பிரச்சனைகளெல்லாம், தகர்ந்துவிட்டது. இதேபோல் ஜெய்யின் மேல் தனக்குள்ள அன்பினையும் உணர்த்தி அப்பாவிடம் சம்மதம் வாங்கி விட வேண்டும். எனும் நினைப்போடு சென்னைக்கு வரும் போது சுதனை அழைக்க ஏர்போர்ட்டிற்கு கிளம்பினாள் ஜனனி!

பிளைட் லேண்ட் ஆகி இமிக்ரேஷன் எல்லாம் முடிந்து வித்யாவும் அவள் கணவனும் வந்திறங்கினர். அருகிலேயே சுதனும் நால்வரும் வெளியில் வர கார் பார்க்கிங்கில் ஜனனி திகைத்துப்போய் பார்த்தாள்.

''ஹாய் ஜானு?!'' சுதன் ஆர்வமாய் குரலெழுப்ப, ஜெய நந்தன் ஜனனியையே பார்த்துக்கொண்டிருந்தான்.

''யாருண்ணா அவங்க?''

''ஜனனி! கனியின் அக்கா,'' ஜெய் சொல்லி முடித்ததும், ''அண்ணி'' என்ற குரலோடு நெருங்கி அவளை ஆழம் பார்த்தாள் வித்யா.

''அண்ணியா? நானா?''

''அண்ணன் பொண்டாட்டியை வேறெப்படி கூப்பிடுவது?''

''வாட்?''

''பயப்படாதீங்க? நான் ஜெய் அண்ணாவின் தங்கை வித்யா?! எங்க சின்ன அண்ணனைத்தான் உங்க தங்கை கல்யாணம் செய்திருக்காங்க! நீங்க ரொம்ப அழகாயிருக்கீங்க அண்ணி?! வாங்களேன் வீட்டுக்குப் போகலாம்!'' வித்யா வார்த்தைக்கு வார்த்தை அண்ணி போட நெளிந்தாள் ஜனனி!

''வித்யா! வா அம்மா தேடுவாங்க அவங்களுக்கு ஆயிரம் வேலை இருக்கும் நீ ஏன் தொல்லை செய்யறே?''

'' நான் தொல்லை பண்றேனா அண்ணி?''

''அவர் எப்பவுமே இப்படித்தான்., எனக்கு உங்களை ரொம்பவும் பிடிச்சிருக்கு வித்யா. அவசியம் வீட்டுக்கு வாங்க.''

''கட்டாயம்! நீங்களே கூப்பிடலைன்னாலும் நான் வருவேன்,'' ஜெய் மறுபடியும் தங்கையை அழைக்க, ''நீங்க ஏன் இப்படிப்பறக்கறீங்க?'' உரிமையாய் ஜெய்யை அதட்டினாள் ஜனனி!

''அம்மாவும், அப்பாவும் இவர்களுக்க்காய்க் காத்து இருப்பார்கள். அதனால் தான்!'' என்று அவன் சமாதானம் சொன்னான்.

''இருவரும் பேசிக்கொண்டதைப் பார்த்தால் கணவன் மனைவி சண்டையிட்டுச் சமாதானம் செய்து கொள்வதைப் போல் இருந்தது. இவங்க சண்டைக்குப்போறதும், அவர் சமாதானப்படுத்தறதும், என்று ஒரே ரகளை போங்க, நீங்க இரண்டு பேரும் அதைப்பார்க்கலையே?''

ஏர்போர்ட்டில் நடந்தவற்றை வீட்டில் வந்து சொல்லிக்கொண்டு இருந்தாள் வித்யா.

''அப்போ நான் சந்தேகப்பட்டது, சரிதானா?''

''நூற்றுக்கு நூறு சரி! இத காதல்தான். பார்வை பரிமாற்றமும் உடல் மொழியுமே சொல்லுதே ! அண்ணின்னு கூப்பிட்டதும் அவங்க முகத்திலே அப்படியொரு ஆயிரம் வால்ட் பல்பு பிரகாசம்.''

''நிஜமா? பரவாயில்லை விது, நான் சொல்லலை, கனி? விதுகிட்டே ஒரு பொறுப்பை ஒப்படைச்சிட்டா அது கட்டாயம் நல்லபடியாக நடக்குமின்னு!''

மறுநாள் கனியின் சீமந்த விழா! சீனிவாசன் மகளிடம் பேசிக்கொண்டிருந்தார்''கனிக்கு நல்ல வாழ்க்கை அமைஞ்சிட்டது! அதே போல உனக்கும் ஒரு நல்லது அமைஞ்சிட்டா, என்னைப் போல சந்தோஷப்படறவங்க, யாருமே இல்லைம்மா?''

'' அப்பா கனியை நீங்க ஏற்றுக்கொண்டது எனக்கு சந்தோஷம் ஆனா உங்க திடீர் மனமாற்றம்?''

''நான் ஆபீஸ் போயிட்டு வரும் போது கனியையும், அவளுடைய கணவனையும் பார்த்தேன். ஒரு குழந்தையைக் காப்பதுபோல், கண்ணுக்குள் வைத்து பார்த்துக் கொண்டான். அதன்பிறகு கனியின் டெலிபோன் பேச்சில் நான் முழுவதும் மனம் மாறிவிட்டேன் ஜனனிம்மா! தனசேகர் செய்த தவறுக்கு, தொழில் போட்டியை மையமாய் வைத்து நான் உங்க இரண்டு பேரையும் ரொம்பவே கஷ்டப்படுத்திட்டேன். மன்னிச்சிரும்மா!''

''என்னப்பா இது என்கிட்டே போய் மன்னிப்பெல்லாம் கேட்டுகிட்டு...? இப்போதான் எல்லாமே சரியாப்போச்சே? அப்பா நானும்...!''

''எனக்கும் உன் மனசு புரியும்மா...? நீ ஒரு குழந்தை உன்னோட விருப்பம் என்னைக் காயப்படுத்துமோன்னு நீ பயப்பட வேண்டாம்,ஜனனி, உன் அறிவும் திறமையும் உனக்கு நல்ல தொழிலை மட்டுமல்ல வாழ்க்கையும், ஏற்படுத்தித் தரப்போகிறது. சுதன் உன்னை விரும்பறார்? எனக்கு பரிபூரண சம்மதம், இந்த திருமணம் மட்டும் நல்லபடியாக நடந்திட்டால்... நான் நிம்மதியா கண்ணை மூடிடுவேன்''

''அப்பா...?!''

''விடும்மா. நெருப்புன்னா வாய் சுட்டுடுமாயென்ன? நேரமாச்சு!நான் போய் கனிக்குத் தேவையான எல்லாவற்றையும் வாங்கிட்டு வரேன்.'' ஒரு சின்னக் குழந்தையின் உற்சாகத்தோடு தந்தை கிளம்பிட, ஜனனி பேசிடக்கூட வாய் வராமல் நின்றாள்.

''கடவுளே?! இதென்ன பூகம் கிளம்புறதே? இதனால் தான் சுதனுடன் அப்பா நெருங்கிப்பழகினாரோ? என் மனதில் ஜெய்யைத்தவிர வேறு யாருக்கும் இடமில்லை, இதை அப்பாவிடம் எப்படித்தெரிவிப்பது?! எல்லோருடனும் இப்போது தான் சமாதானம் ஆகியிருக்கும் அவரிடம், கனியை மட்டுமே மன்னித்து விட்டாலும், ஜெய்யிடம் அவரிடம் உள்ள கோபமெல்லாம் குறைந்து விடவில்லை என்பதை உணராமல்... கடவுளே

நானென்ன செய்யப்போகிறேன். இதை சுதனிடம் நேரடியாகப் பேசினால் என்ன?''

அவள் சுதனை சந்திக்கச் சென்றாள். அங்கே நிகழப்போகும் விபரீதம் உணராமலேயே?!

'' இந்த புராஜக்டை எப்படியாவது பிடிக்கணும் என்றுதான் மும்பைக்கு நேரிலேயே போனேன். சுதனுக்கும் ஜனனியோட பழைய புராஜக்ட் பிடிச்சுப்போச்சு, ஆனா பணவிவகாரமின்னு வந்தப்ப, உங்கமெயில் வந்தது. சூழ்நிலை எனக்கு சாதகமாகிப்போக, வேற வழியில்லாம அதைப்பார்க்க வேண்டிய சந்தர்ப்பமும் வந்தது. அதில் பார்த்த தொகையை விடக்குறைச்சு சொன்னா எனக்கு இந்த புராஜக்ட் கிடைக்கும் என்று சொன்னேன். ஒரு வகையில் இது என் தவறுதான். அப்போதிருந்தே மனநிலையில் அது சரியென்று பட்டு விட்டது.''

''அப்போது ஜனனி எனக்கு எந்த தீங்கும் இழைக்கவில்லையா? நான் தான் தவறாக உணர்ந்து கொண்டேனா?'' அந்த எண்ணம் ஜெய் நெஞ்சில் பாலை வார்த்ததைப் போலிருந்தது. ஆனால் அவர் அடுத்துப்பேசிய விதம்...

''அந்த வகையில் சுதனும் ஜனனியை விரும்பினார். எனக்கும் அதில் விருப்பம் இருந்தது.''

ஜெயநந்தன் கற்சிலையாய் இறுகினான், ''ஆனால், தம்பி உங்களை ஒன்று கேட்பேன்?'' அருகில் வந்து ஜெயநந்தனின் கைகளைப் பற்றிக் கொண்டார் சீனிவாசன்.

''நடந்து விட்ட தவறை மறந்து என் மகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்.''

மாலை மணி 7 இருக்கும்.

''அந்த நேரம் ஜனனியே வருவாள் என்று சுதன் எதிர்பார்க்கவில்லை, மெல்ல ஒரு லார்ஜ் முடித்துவிட்டு திகைப்பாய் பார்த்தான். ''பிளீஸ் கமின்...!''

''ஸாரி சுதன் உங்களை தொந்தரவு பண்ணிட்டேனா?''

''நோ..நோ...உங்க வரவை எப்போதும் நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். நானே நிறைய பேசணும் உட்காருங்க.''

''தேங்க்ஸ்.... எப்படித் துவங்குவது என்று தயக்கமாய் அவள் தவிக்க அவனே துவங்கினான்.

''ஜனனி நான் உங்களை எப்போ முதன் முதலா பார்த்தேனோ அப்பவே மனசிலே நீங்க இடம் பிடிச்சிட்டீங்க? இதை நான் நேரடியா உங்க அப்பாகிட்டே சொல்லிட்டேன். நீங்க என்னை இம்ப்ரஸ் பண்ணமாதிரி நானும் உங்களும் இம்ப்ரஸ் பண்ணனும் என்று நினைத்தேன். ஆனா நீங்க என்னை அவாய்ட் பண்ணிகிட்டே இருக்கீங்க. ஆர்வமும் ஆசையும் சேர்ந்து நான் வந்தா கூட விலகிப்போறீங்க, மனசு ரொம்பவும் உடைஞ்சு போயிருக்கு ஜனனி! நீங்க என்னை நிஜமாகவே விரும்புகிறீர்களா?''

''சுதன் முதலில் நீங்க என்னை மன்னிக்க வேண்டும். நான் வேறு ஒருவரை விரும்பறேன் அப்பாவின் மூலமா உங்க மனசில ஏற்பட்டு விட்ட இந்த தவறுக்கு நான் மன்னிப்பு கேட்டுக்குறேன். சில தவறான சூழ்நிலைகளால் நம்பிக்கை இழந்த அவர்கிட்டே இனி மன்னிப்பு கேட்டு என் மனதை உணர்த்தணும்.''

சுதன் ஒரு நிமிடம் முழுதாய் எடுத்துக் கொண்டு தன் மன உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டான். ''பரவாயில்லை ஜனனி. நான் உங்களை விரும்பியதால் நீங்களும் அதை ஒப்புக்கணுமின்னு அர்த்தமில்லை. அந்த லக்கி பர்ஸன் யாருன்னு தெரிஞ்சுக்கலாமா?''

''உங்களுக்குத் தெரிந்தவர் தான் ஜெய்!''

''இஸிட்...? ஜனனி கூடிய விரைவில் உங்க அன்பை அவரிடம் சீக்கிரம் சொல்லி விடுவது நல்லது.''

''ஏன்!''

''நான் உங்களை விரும்புவதாய்ச் சொல்லி இருக்கிறேன் அவரிடம்?!''

ஜனனி புன்னகையோடு, ''நம்பிக்கை ரொம்ப முக்கியம் ஸார். என் பழக்கத்தில் உங்களுக்கு மனதில் சலனம் ஏற்பட்டு இருந்தால் தயவு செய்து என்னை மன்னித்து விடுங்கள். உங்களிடம் மனதில் உள்ளதைக்கூறி உங்களை சமாதானம் செய்து விட்டு ஜெய்யை சந்திக்கத்தான் கிளம்பினேன்.''

''ஆல் தி பெஸ்ட், மணி 8 ஆகி விட்டதே. நான் உங்களை டிராப் செய்யவா?''

''இங்கு வரும்போது மிகுந்த மனக்குழப்பத்தோடு வந்தேன்! ஆனா நல்ல பதில் சொல்லி என் மனதில் பால் வார்த்துட்டீங்க! போதும் இதற்கு மேல் என்ன வேண்டும்?''



''பொது இடங்களில் யூரின் பாஸ் செய்யாதே. போலீஸ்காரர்கள் பிடிச்சு கிட்டு போயிடு வாங்க''

''புடிச்சுட்டு போகட்டுமே வேஸ்ட்டாய் தானே போகுது எனக்கு என்ன நஷ்டம்''

-நா.சுப்பிரமணியன், திருப்பாதிரிபுலியூர்



'' சரி இந்த நண்பனின் வீட்டிற்கு முதன் முதலாய் வந்து இருக்கிறீர்கள். ஒரு கப் காபி இல்லை, ஜூஸ் சாப்பிடலாமா?''

''ம்.. ஷ்யூர்.''

''அவன் கொண்டு வந்த ஜூஸை பருகிவிட்டு வெளியே காரில் அமரவும் ஸ்டீரியங்கின் மேலேயே சாய்ந்து விட்டாள் ஜனனி! அந்த ஜூஸில் அவன் போதை மாத்திரை போட்டதை பாவம் அவள் உணரவில்லை.,இன்னும் ஊரடங்காததால் அமைதிகாத்தவன் மனம் பல கணக்கு போடத்துவங்கியது.

யாரும் பார்க்காத நேரம் ஜனனியை மெல்லத்தூக்கிக்கொண்டு வந்து படுக்கையில் கிடத்தினான். இந்த போதைக்கு நாளை மதியம் வரை எழுந்திருக்க மாட்டாள்.

''ஏன் ஜனனி! உன்மேல் இத்தனை ஆசையை வைத்துக்கொண்டு உன்னை எப்படி நான் அவனுக்கு விட்டுத்தருவது. மும்பைக்கு உன்னை கடத்திச்சென்று கல்யாணம் செய்து விட்டால் நீ என்ன செய்வாய்? பார்ப்போம்'' அம்மாவிடம் பேசி நாளை இரவு ஜனனியுடன்வருவதாகவும் திருமண ஏற்பாடுகளை கவனியுங்கள் என்று சொன்னான். டிராவல்ஸ்க்கு போன் செய்து ஜனனிக்கும் அவனுக்குமாய் டிக்கெட் புக் பண்ணினான்.

'உறங்கும் அவளையே பார்த்தான். மும்பை என்னுடைய கோட்டை! அங்கு நாம் சென்றுவிட்டால், நம்மை யாராலும் பிரிக்க முடியாது' அவள்தூங்கும் போது அறையைப்பூட்டி வைத்துவிட்டு உறங்கியும் போனான். மறுநாள் ஒன்றும் தெரியாதவன் போல் சுனியின் சீமந்தவிழாவிற்கு சென்று அவள் தந்தையிடம் சகஜமாகப்பேசினான்.

'அப்போது ஜனனிவீட்டில் இல்லை எங்கே போயிருக்கிறாள் என்பதும் தெரியவில்லை என்ற தகவல் வர பதற்றம் அங்கு பரவியது.

''எங்கே ஜனனி போயிருப்பாள் ''பதறினார்கள்! அனைவரும்...

''இப்பகுதி இன்ஸ்பெக்டர் உனக்கு தெரிந்தவர்தான் அவர் நம்பர் இதில் இருக்கிறது'' என்று ஜெய்யிடம் தன்னுடைய மொபைலை நீட்டினான் சுதன்.

வாங்கி நம்பரை தேட முயன்றபோது வந்த எஸ்.எம்.எஸ்.செய்தியை எதேச்சையாய் ஓ.கே.பட்டனில் கைப்பட அதில் ஜனனிக்கும், சுதனுக்கும் அன்றிரவு மும்பைக்கு டிக்கெட் போடப்பட்டது தெரிய வந்தது.

ஜெயநந்தனின் நெற்றியில் மெல்ல சுருக்க முடிச்சுகள், உருவானது.

''அண்ணா உனக்கு போன்?!'' வித்யா கொண்டு வந்து தர அதை உயிர்பித்தவனின் முகம் மலர்ச்சிக்குப்போனது.'' என் பிரண்டுதான் இங்கே பக்கத்தில் தான் இருக்கானாம்,நான் போய் பார்த்திட்டு வர்றேன். சுதன் ப்ளீஸ் இங்கே எல்லோரும் கவலையோடு இருக்கிறார்கள். தயவு செய்து, இவர்களுக்கு ஆதரவாக கூடவே இருங்க''என்று

கூறினான்.

ஜனனி போதை மருந்து வீரியத்தால் நாளைப்பகல்வரை கட்டாயம் எழுந்திருக்கமாட்டாள். அதனால் கவலையில்லை. நானும் இங்கே இருப்பதால் ஒன்றும் சந்தேகம் வராது. இரவு மும்பைக்கு ஜனனியை கடத்திச்சென்று விட்டால் திட்டம் நிறைவேறிவிடும். அதுவரை அவர்கள் படும் வேதனைகளையும் நான் பார்க்க வேண்டாமாளன்று விழா நடந்த வீட்டிலேயே சற்று நேரம் தூங்கினான் சுதன்.

ஆனால் சற்று நேரத்தில் போலீஸ் பட்டாளத்தோடு ஜெய் வந்து நிற்க சுதன் திடுக்கிட்டான். கூடவே தனசேகரும்.

''ஜனனியை கண்டுபிடித்து மீட்டாகிவிட்டது''

''என்ன? எப்படி?'' சுதன் முகத்தில் அப்பட்டமான அதிர்ச்சி?

''அதிர்ச்சியாக இருக்குதா சுதன். என்னடா யாரும் அறியாமல் ராத்திரி அடைத்து வைத்தவளை எப்படி கண்டுபிடித்தான் என்று?''

''என்ன தம்பி சொல்றீங்க? சுதனா ஜனனியை கடத்தி வைத்திருக்கிறார்?''

''ஆமாம்? நேற்றிரவு ஜனனி இவரைச் சந்திக்கப்போய் இருக்கிறாள். பிரச்சனையை பேசி இவர் மனதை மாற்றலாம் என நினைத்திருக்கலாம். ஆனால் இவர் அவளை மயக்கமடையச் செய்து, இன்றிரவு மும்பைக்கு கடத்திப்போக திட்டமிட்டு இருக்கிறார்.''

''பொய்... ஏன் என்மேல் பழியைப் போடுகிறீர்கள்?''

''பழி போடறோமா? ஆதாரா பூர்வமாய் சொல்லட்டுமா? நீங்க ஜனனியை தூக்கிட்டுப்போறதை இதோ தனசேகர் பார்த்திருக்கார்.

''ஆமா ஸார். நான் சில தப்புகள் பண்ணியிருக்கலாம். எம் பொண்ணு வீடு பக்கத்திலே தான் இருக்கு. அங்கே போயிட்டு திரும்பும்போது ஜனனியின் காரை பார்த்தேன். இவரு அந்தப்பெண்ணை காரிலிருந்து தூக்கிட்டுப்போனார். கொஞ்சநாழி கழித்து இவரு மட்டும் காரை எடுத்துட்டுப்போனார். நான் அதற்குப்பிறகு அவரை பின் தொடர்ந்தேன். ஆனா இவரு ஜனனிக்கு எந்த தீங்கும் இழைக்கவில்லை. அவளுக்கு மயக்கமருந்து கொடுத்ததோட சரி! அவருடைய நோக்கம் என்னவென்று தெரியாததால நானும் அமைதியா இருந்தேன்.

அவர் கிளம்பியதும், ஜனனியை போய் எழுப்பி பார்த்தேன். கடுமையான மயக்க மருந்து போலும். அதனால உடனே ஜெய் ஸாருக்கு போன் பண்ணினேன்.''

''மிஸ்டர் சுதன் இப்போ கூட உங்க மேல போலீஸ் கம்ப்ளைன்ட் கொடுக்க வேண்டாம்னு நினைச்சேன். ஆனால் அவளைக்கடத்த முற்பட்டதற்கும், அளவுக்கதிகமாக மயக்க மருந்து கொடுத்ததையும் என்னாலே மன்னிக்கவே முடியலை!''

சுதன் மௌனமாய் போலீசாருடன் வெளியேற, தனசேகருக்கு நன்றி சொல்லிவிட்டு, மருத்துவமனையில் சிகிச்சையளித்து ஜனனியை வீட்டுக்கு கூட்டி வந்தனர்.

ஒரு மாலை நேரம் ஜனனியும் ஜெயநந்தனும் தனிமையில் தோட்டத்தில் அமர்ந்து பேசிக்கொண்டு இருந்தனர். சிறிது நேரம் இருவரிடமும் மௌனம், அவளே தொடர்ந்தாள்.



''சுதன் அப்படி நடந்து கொள்வார் என்று நான் எதிர்பார்க்கலை ஜெய்! அவரை ஒரு ஜென்டில் மேன்னு நினைச்சேன். தப்பாக எடை போட்டு விட்டேன் ஜெய்''

''விடு ஜானு! இதில் உன் தவறு எதுவும் இல்லை, எல்லாரும் ஜெய் போல இருப்பது இல்லையே?'' என்று காலரைத்தூக்கி விட்டுக்கொண்டு, ''என்னை மட்டும் ஏன் இத்தனை நாள் தவிக்க விட்டே?''

''நல்லவராய் இருந்தால் மட்டும் போதாது. புத்தியும் வேணும். நீங்கள் எப்போதோ என் மனதில் குடியேறி விட்டீர்கள். உங்க கவனிப்பு, பாதுகாப்பில் நான் ரொம்பவே திருப்தியாய் உணர்ந்தேன் ஜெய்! அன்று அப்பா வருவதற்குள் என் அன்பை உங்களிடம் உணர்த்திட வேண்டுமென நான் முயன்ற போது, அப்பா வந்துவிட்டார்.''

''நீ அதை நம்பினாயா ஜனனி?''

'' நிச்சயமா இல்லை! எந்தக்காலத்திலும் நான் உங்களை தப்பா நினைக்கலை. சிறுவயது முதலே பிடிக்குதோ, பிடிக்கலையோ அவருடைய திருப்திக்காக அவர் சொல்வதை தட்டாம நான் ஏத்துப்பேன். அப்பாவை முதல் முறையா எதிர்த்துப் பேசியது உங்களுக்காகத்தான். அப்பா சொன்ன பழியையும் சமாளிக்க முடியவில்லை. அதனால் உங்கள் மேல் கோபம் உள்ளதைப்போல் நடித்தேன்.''

''என்னுடன் இரண்டு நாட்கள் தங்கிய பிறகு என்னை தவறாக பேசியதும் துடித்துப்போனேன் ஜனனி! தனிமையில் உன் நினைவுகளில் கரைந்து போக மட்டுமே என் மனம் விரும்பியது!''

''ரொம்பவும் கஷ்டப்பட்டு விட்டாய் செல்லம்''

''நீங்களும் தான்!'' என்று அவன் கரங்களில் ஒண்டினாள். ''ஏன் ஜெய் நான் அடைந்த தவிப்பு உங்களுக்குள் இல்லையா?''

'' ஏன் இல்லாமல்? ஆனால் உன்னைப்போல நான் யாருக்கும் பயப்படவில்லை''

''அன்று நான் மானிட்டரில் என் புகைப்படத்தையும், பாஸ்வேர்டில் என் பெயரையும் தான் நான் பார்த்துக் கொண்டிருந்தேன்.''

''அப்படியா ஜனனி? அன்னைக்கு நீ மெயிலைத்தான் பார்த்தியோன்னு தவறா நினைச்சேன். ஆனா உங்கப்பா தானே தான் இந்த தவறை செய்ததாக சொல்லிவிட்டார்.''

''அப்பாவா?''

''ம்...! அவருக்கு சுதனுக்கு உன்னைத்தரணுமின்னு நினைப்பு எப்படியும் நீ உங்கப்பாவுடைய பேச்சைத்தான் கேட்ப, எனவே நம்பி ஏமாற மனம் வரவில்லை, அதனால் தான் விலகி விலகிப்போனேன்.''

''வெகு நாளைக்குப் பிறகு, நிம்மதியாய்ப் பாதுகாப்பாய் உணர்கிறேன் ஜெய்!''

''என் தேவதை நான்தான் வேண்டுமென்று மடியில் விழுந்து விட்ட பிறகு இனி எனக்கென்ன குறை?''



"அந்த ஆஸ்பத்திரி நர்சிங் ஹோமில் கூட்டம் ஏன் அலை மோதுகிறது"
"அங்க சேர்க்கப்பட்டு இறந்தால் 16-வது நாள் வரை காரியங்களை அவங்க செலவில் நடத்து வாங்களாம்"
-நா.சுப்பிரமணியன், திருப்பாதிரிபுலியூர்

"அப்படியா? தப்புதான்! விடுங்கள் என்னை?" அவள் அவனிடம் இருந்து விலகிச்செல்வது போல பாவனைக்காட்ட

"இந்த ஜெய் உனக்கு வேண்டாமா?"

"வேண்டாம்"

"தலையில் அடி இப்படியே போய் விடுகிறேன்?"

"ச்சீ...!" அவனை அணைத்தாள்.

"அப்போ ஆசைதானே? ஜனனி, ஒரே ஒரு முத்தமிட்டா?"

"அதெல்லாம்?"

"ப்ளீஸ்...கன்னத்தில் மட்டும். என் ஏக்கம் புரியவில்லையா?"

"ம்.... ஏக்கம் தீர்ந்து விட்டால், என்னை அடையும் வேகம் தளர்ந்து விடுமே."

"கேட்டால் சரிவராது வா?" இழுத்து மடியில் கிடத்தி, இதழ்களில் அழுந்த முத்தமிட்டான்.

"விடுங்க ஜெய்...!" புன்னகையும் வெட்கமும் ஒன்று சேர விலகினாள்.

"இது இரண்டாம் பரிசு. உனக்காக நான் வழங்கிய முதற்பரிசுதான்" வைத்திருந்த பரிசு பார்சலை தந்தான்.

ஆசையுடன் அதைபிரித்தாள் ஜனனி, லாக்கெட்டுடன் கூடிய தங்கச்சங்கிலி அதில் இருவர் புகைப்படமும், "இதை உன்னிடம் தந்து என் காதலை உன்னிடம் சொல்லிவிட காத்திருந்தேன் ஜனனி."

"உம்..." அவனை பார்வையால் விழுங்கினாள்.

"பிரிந்த இடத்திலேயே நாம் சேர்ந்து இருக்கிறோம். வேறெதுவும் நினைக்காமல் அமைதியாய் என் கைக்குள் வந்து இரு" என்று அவளை இழுத்து அணைத்துக்கொண்டான் ஜெயநந்தன். அந்த அணைப்பின் கதகதப்பில் அவளுமே ஒருயிராக உணர்ந்தாள்.

வீடு எங்கும் மாவிலைத்தோரணங்கள் பந்தல் விரித்து அவர்களின் வரவிற்கென காத்திருந்தன.

**முற்றும்**

Owned, Published, Printed and Edited by Kannan AdityanR, from 246, Anna salai, Chennai- 600 006 at Deviyin Kanmani Achagam.



கோதானம் செய்வது ஓராயிரம் அஸ்வமேத யாகம் செய்த பலனை கொடுக்கும்

**முன்னோர்கள் நினைவாக மஹாளய அமாவாசை அன்று (27-9-2011) ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா தலைமையில் கோதானம் செய்து பித்ருக்களின் ஆசிர்வாதத்தை பெற்று அனைத்து தோஷங்களில் இருந்தும் நிவர்த்தி பெற அன்புடன் அழைக்கிறோம்**

முன்னோர்கள் நினைவாக மஹாளய அமாவாசை அன்று அனைத்து தோஷங்களில் இருந்தும் விடுபடவும், முன்னோர்களின் ஆசி வேண்டியும் கோதானம் (நாட்டுப் பசுவும், கன்றும்), மகிஷ (எருமை) தானம், காறாம் பசு தானம், சென்னை திருவேற்காட்டில் உள்ள பசுமடத்தில் நடைபெறுகிறது. யாகங்கள் செய்து, யோகங்கள் சேர்ப்பதில் வல்லவரும், ஹோமங்கள் செய்து க்ஷேமங்கள் குவிப்பதில் தேர்ச்சி பெற்றவரும், பித்ரு தோஷ நிவர்த்திக்கு விருட்ச பரிகாரம் சொல்பவருமான ஜோதிட சிம்மம் ஸ்ரீயோக ஆஞ்சநேய சக்தி பீடாதிபதி விருட்ச சாஸ்திர வித்வான் பூஜ்ய ஸ்ரீ ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா தமது வேத வித்வான்களின் குழுவுடன் கோதான பூஜை, கோபூஜை செய்ய உள்ளார். இதில் அனைவரும் கலந்து கொண்டு கோதானம் செய்து பித்ருக்களின் ஆசியை பெற்று அனைத்து தோஷங்களில் இருந்தும் நிவர்த்தி பெற அன்புடன் அழைக்கிறோம்.

**கோதானத்திற்கு மிஞ்சி ஒரு புண்ணியமும் இல்லை. பரிகாரத்துக்கு அதுவே பெரிய மருந்து**

கோதானம் (நாட்டுப் பசுவும் கன்றும்) செய்தால் ஜாதக ரீதியான தோஷம், பித்ரு தோஷம், குல தோஷம், திருஷ்டி தோஷம், களத்திர தோஷம், பெரும் நஷ்டங்கள் மற்றும் சங்கடங்கள் விலகி, புத்ர பாக்கியம், தடைபட்ட திருமணம் கைகூடும். குடும்பத்தில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறும். கோதானம் செய்ய ரூ.10,000/-

காறாம் பசு (பசுவும் கன்றும்) தானம் செய்தால் 7½ ஆண்டு, அஷ்டமச் சனி விலகும். நவக்கிரஹ தோஷம், நாக தோஷம், ஆபிசார தோஷம், வாஸ்து தோஷம், எதிரிகள் தொல்லை, பணப்பிரச்சனை விலகி, பொன் பொருள் புகழ் மற்றும் சந்தான அபிவிருத்தி உண்டாகும். காறாம் பசு தானம் செய்ய ரூ.10,500/-

மகிஷ தானம் [எருமையும் கன்றும்] செய்தால் நோய் பாதிப்பால் பயம், வாகன விபத்து, தீய சக்தியால் ஏற்படும் பயம், வியாபாரம், உத்யோகத் தடை நீங்கும். பாப தோஷம் விலகி, வாழ்க்கை வளம், பதவி உயர்வு, சகல கார்ய சித்தி, ஆயுள் விருத்தி, உடல் ஆரோக்கியம், குடும்ப ஒற்றுமை மனச்சாந்தி உண்டாகும். மகிஷ தானம் செய்ய ரூ.11,000/-

**மேற்கண்ட கோதானம் செய்பவர்களுக்கு வெள்ளியிலான ஐஸ்வர்ய பெருமாள் விளக்கும், பித்தளையிலான கோமாதா விக்ரஹமும், சந்தான கோபாலக் கிருஷ்ணர் சாளக்கிராமும் அனுப்பி வைக்கப்படும்**

மேற்கண்ட தானம் செய்ய (**Cheque/DD/MO** மூலமாக) **Sri Ghosala Seva Trust, Chennai** என்ற பெயரில் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி மஹாளயபக்ஷ அமாவாசை அன்று நடைபெறும் கோதானத்தில் கலந்து கொண்டு நடமாடும் தெய்வமாகிய கோமாதாவின் பேரருளைப் பெற்று லக்ஷ்மி கடாட்சத்துடன் சர்வ மங்கலமும் பெற அன்புடன் அழைக்கிறோம்.
பணம் அனுப்பும் அன்பர்களுக்கு ரசீதும், பிரசாதங்களும் மஹாளயபக்ஷம் முடிந்த பிறகு அனுப்பி வைக்கப்படும்



நன்கொடைகளுக்கு 80G பிரிவின் படி வரி விலக்கு உண்டு

**பசுமடம்**

(Recognised by Animal Welfare Board of India)

வயதான பசுக்களை பராமரிக்கும் இல்லம்
ஆதரவற்ற பசுக்களை பாதுகாக்கும் இல்லம்
ஊனமுற்ற, நோயுற்ற பசுக்களை பேணும் இல்லம்

பெருமாளகரம், திருவேற்காடு (P.O), சென்னை-77 போன்: 044 -3299 9888

